Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 20




# ஈழநாடு வார மலர்.

**வேண்டுகோள்!**

மில்க்வைற் சோப் பாவனையாளருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்! மில்க்வைற் நிலசோப் மேலுறை 50 சேகரித்துக் கொடுத்தால் ஓர் அழகான படம் இனமாக வழங்கப்படும்.

மில்க்வைற் ஸ்தாபனத்தார்.

மலர் 11 | சௌமிய ஆடி 6 ஜுலை 5 | (21-7-69) | திங்கட்கிழமை | இதழ் 159

# மனித வரலாற்றில் இன்று புதிய அத்தியாயம் உதயம்

## அமெரிக்க வீரர்களின் மகோன்னத சாதனை

கென்னடிமுனை, ஜூலை 20

மனித வரலாற்றில் புதிய அத்தியாயம் உதயமாகிறது.

கடந்த நான்கு தினங்களாகச் சந்திர இலக்கை நோக்கி சாகசப் பயணம் நடாத்திய இருபதாம் நூற்றுண்டின் புகழ்மிகு மனிதர்களான அமெரிக்காவின் அப்பல்லோ—11 விண்வெளி வீரர்கள் அம்புலியில் இறங்குகிறுர்கள்.

சந்திரனைச்சுற்றிய பாதையில் சந்திரனுக்கு மிக அண்மையில் சென்றுகொண்டிருக்கும் அப்பல்லோ விண்வெளிவீரர்கள் நாளை அதிகாலை 1-44 மணியளவில் நிலாவில் இறங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் சீரான முறையில் இயங்கிக்கொண்டிருந்தது.

இச்செய்தி அச்சுக்குப் போகும்போது விண்வெளி வீரர்கள் கடைசித் தடவையாக உறங்கிக்கொண்டிருந்தார்கள். இன்றிரவு 11 மணியளவில் விண்வெளி வீரர்கள் ஆம்ஸ்டிராங்கும். ஆல்டிரின்னும் தாய்க்கப்பலிலிருந்து பிரிவார்கள். 'ஈகிள்' என்ற இவர்களது சேய்க்கப்பல் சந்திர இலக்கை நோக்கி மெதுவாக இறங்கும்.

தாய்க்கப்பலிலிருக்கும் கொலின்ஸ் சந்திரனைச் சுற்றியபாதையில் வலம்வந்து கொண்டிருப்பார்.

இப்போது அப்பல்லோ-11 கலத்தின் வேகம் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஹவுஸ்டன் விண்வெளி நிலைய அதிகாரிகள் அப்பல்லோ - 11ன் நடவடிக்கைகளை மிகவும் நுணுக்கமாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றனர்.

**முதல் மனிதன்**

நிலாவில் விண்வெளிவீரர்கள் 'ஈகிள்' என்ற எட்டுக்கால் பூச்சி போன்ற கப்பலில் இறங்கியதும், பலமணி நேரம் வீரர்கள் இருவரும் ஓய்வு எடுத்துக் கொள்வார்கள். இதன் பின்னர் சந்திரனில் மனிதன் காலடி எடுத்துவைக்கும் அதிஅற்புத நிகழ்ச்சி இடம்பெறும். ஆம்ஸ்டிராங் 'ஈகிளி'லிருந்து இறங்கி சந்திரனில் காலடி எடுத்து வைப்பார். இது நடந்த அரைமணிநேரமாகியதும் மற்ற விண்வெளி வீரர் ஆல்டிரின் காலடி எடுத்துவைப்பார்.

மண்டைதீவில் சம்பவம்

## இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்

(காரியாலய நிருபர்)

கத்தியால் குத்தப்பட்ட நிலையில் வெற்றிவேலு என்பவர் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடக்கக் காணப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன் தினமிரவு மண்டைதீவில் நடைபெற்றதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜனுப் மொகமட் ஜமீல் நேற்றுக்காலை சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று ஸ்தலத்தைப் பார்வையிட்டதோடு விசாரணையும் நடத்திஞர்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டது. மரணத்திற்கான காரணம் என்னவென்பதும், கொலைசெய்தவர் யாரென்பதும் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். (கா. நி.)

## இந்திய பெரிய வங்கிகள் அரசு உடைமையாகின

புதுடில்லி, ஜுலை 20

இந்தியாவின் மிகப்பெரிய பதினுன்கு வங்கிகள் அரசாங்கத்தின் உடைமையாக்கபட்டன. இதற்கான அவசரச் சட்டமொன்று நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது.

தேசிய மயமாக்கப் பட்ட இந்த வங்கிகள் கார்ப்பரேஷன் ஒன்றின் கீழ் இயங்கும். இந்த காப்பரேஷனின் முழுப் பொறுப்பும் ஒருவரிடம் ஒப்படைக்கப் பட்டு, அவரின் கீழ் வங்கிகள் இயங்கும். இவர் தலைமை நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றுவார்.

ஏழை நாடான பாரதத்தில் ஏற்றத் தாழ்வுகளை ஒழித்து பொருளாதார சுபீட்சம் காண்பதற்கு வங்கிகள் அரசுடமை யாக்கப் படவேண்டியது அவசியமாகிவிட்டதெனப் பிரதமர் திருமதி இந்திரா நேற்று நாட்டு மக்களுக்கு வானெலி மூலம் விடுத்த உரையொன்றில் குறிப்பிட்டார்.

வங்கிகள் அரசு உடமையாக்கப் பட்டதை பல்வேறு அரசியல் கட்சிகளும் வரவேற்றிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டது.

உள்துறை மந்திரி திரு. சவான், திரு. பாட்டில், திரு. காமராஜர், மேற்கு வங்காள முதல்வர், ஹரியானமுதல்வர், திரு. நந்தா உட்பட பல காங்கிரஸ் பிரமுகர்களும் இதனை வரவேற்றுள்ளனர்.

சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. ராஜகோபாலாச்சாரியார் வங்கிகள் உடமையாக்கப் பட்டது குறித்து தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். அவசர சட்டம் திடீரெனப் பிறப்பிப்பதற்கு அதிகாரமில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 'என்னை நஞ்சூட்டி கொல்ல முயன்றனர்'

—கல்விமந்திரி

கோட்டை, ஞாயிறு

''எனக்கு நஞ்சூட்டுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பொலிசார் ஆராய்ந்து வருகின்றனர். குருநாகலில் ஒருவிழாவில் தேனீர் பருகியபின்னரே நான் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன்.''

தற்பொழுது கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். எ. இரியகொலை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குடலில் வீக்கம் ஏற்பட்டது காரணமாகச் சுகவீனமாக இருந்த அமைச்சர் அந்த வியாதியில் இருந்து படிப்படியாக இப்போது குணமடைந்து வருகிறுர். இதன்காரணமாக அமைச்சர் தான் கலந்துகொள்ள விருந்த நிகழ்ச்சிகள் யாவற்றையும் ரத்துச் செய்துள்ளார்.

## மாவைக்கந்தனின் கதவுகள் திறந்தன

### ஆனல் கயிறு தடைபோட்டது

நல்லூர், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் இரண்டாவது நாளான இன்று காலை ஒன்பது மணியளவில் கோயில் கிழக்குவாசல் கதவுகள் திறந்து வைக்கப்பட்டன ஆயினும் வாசலில் ஒரு கயிறு கட்டப்பட்டிருந்ததால் உள்ளே செல்வதற்கு அனுமதி இல்லையென்று கருதி எவரும் செல்லவில்லை. ஆலயத்துக்கு வந்தவர்கள் எல்லோரும் வெளிமண்டபத்திலும் வெளிவீதிகளிலும் நின்று சுவாமிதரிசனம் செய்தனர்.

இரகசியப் பொலிசாரும் பல இடங்களிலும் கடமையாற்றினர். கோயிலின் இதரவாசல்களிலும் கோயிலுக்குச் செல்லக்கூடிய பூசகரின் வாசலிலும் பொலிஸார் காவல்புரிகின்றனர்.

நேற்று ஆலயக் கதவுகளை மூடி கொடியேற்ற உற்சவம் நடைபெற்றது. இன்றுகாலை கோயில்கதவுகள் திறக்கப் பட்டபோதிலும் வாசலில் கயிறுகட்டப் பட்டிருந்ததால் எவரும் உள்ளே செல்லவில்லை. கோயில்பூசகர்களும், சுவாமிகாவுபவர்களும் திருவிழா உபயகாரருமாக சுமரார் 25 பேர் கோயிலினுள்ளே காணப்பட்டனர்.

பொலிஸ் அதிபர் இன்று காலை வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்துடன் தொடர்பு கொண்டு பிறப்பித்த ஓர் உத்தரவைத் தொடர்ந்து மாவைக்கோயில் ஆதீனகர்த்தாவையும் திரு. சி. சுந்தரலிங்கத்தையும் வடபகுதி பொலிஸ் அதிபர் [illegible] செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மதித்து நடக்கும்படி கேட்டுக் கொண்டார். ஆலயக்கதவுகளைத் திறந்துவிடுமாறும் குழப்பத்தைத் தூண்டிவிடுவோர் மீதும் குழப்பம் செய்வோர் மீதும் பலாத்காரத்தில் இறங்குவோர் மீதும் தாங்கள் கடும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**அறிக்கை**

மாவை முருகன் கோயில் பிரவேசம் சம்பந்தமாக தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் இன்று பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மாவை முருகன் இம்முறையும் சிறை வைக்கப்பட்டுவிட்டதாகவும் ஆலயப்பிரவேசம் நடைபெறுதிருப்பதற்கும் சமூககுறைபாடுகளை ஒழிக்கும் சட்டம் அமுல்

செய்யப்படாதிருப்பதற்கும் வடபகுதி பொலிசாரையும் திரு. சி சுந்தரலிங்கம், திரு. எம். ஸி. சுப்பிரமணியம் ஆகியோரையும் குற்றம சாட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அனுபவிக்கும் நன்மைகளுக்கும் தீமைகளுக்கும் நாம்தான் காரணம்

ஒவ்வொரு சக்திக்கும் அதற்கேற்ப எதிர்ச்சக்தி உண்டென்பது பௌதிகத் திருட்டாந்தம். இதுபோலவே உலக இயக்கமும் ஓர் ஒழுங்கு விதிக்குக் கட்டுப்பட்டுள்ளது உயிர்களின் தோற்றமும் மறைவும் அப்படியே.

உயிர்களின் வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளும்இத்தன்மையதே பரந்துபட்ட இந்த இயக்க வாய்ப்பாட்டை நமது பகுத்தறி அந்த நன்மைக்கேற்ப நலம் அடையவேண்டியதும் தவிர்க்க முடியாதது. இந்த நியதியிலிருந்து யாரும் விலக்காக முடியாது.

வாழ்க்கையிலிருந்து ஒரு சிறுசம்பவத்தை எடுத்து சிந்தனை என்னும் பூதக்கண்ணடி கொண்டு துருவிப் பார்ப்போம்

பணம் சேர்க்கவேண்டும் என்பது மனிதனின் தணியாத ஆசை. பணம் சேர்ப்பதற்கு நேர்மையான வழி இருக்கும் முகவரித்துண்டை நீக்கிவிட்டு, ''ஆகா, கடவுள் கொடுத்தார்'' என்ற திருப்தியுடன் வீட்டுக்கு எடுத்துச் செல்வோம். வேண்டாம், அப்படிச் செய்யவேண்டாம். கடவுள் கொடுப்பதானுல் அதில் உரியவரின் முகவரியை விட்டு வைத்திருக்க மாட்டார். அற்ப சபலத்திற்கு ஆளாகி அந்த ஐநூறு ரூபாவை நாம் எடுத்துக்கொண்டால் இரட்டிப்புப் பெறுமதி

## நியாயமற்ற வழியில் தேடும் செல்வம் நிலைக்காது

வில் அடக்குவது சுலபமல்ல.

உலகில் நடமாடும் ஜீவராசிகளும் மற்றும் உலகில் ஏற்படும் ஒவ்வொரு சலனமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையநாகவே அமைந்திருக்கின்றன. ஈயை உண்டு கரப்பு வாழ்கிறது. கரப்பை உண்டு பல்லி வாழ்கிறது. பல்லியை உண்டு எலி வாழ்கிறது. எலியை உண்டு பூனை வாழ்கிறது, இப்படியே வளரும் உடல்கள் யாவும் இறுதியில் மண்ணுககு இரையாகின்றன அந்த மண்ணிலிருந்தே வளரும் உடல்களுக்கு வேண்டிய போஷணை கிடைக்கிறது. எப்படி? மண்ணில் கலக்கும் சத்தை தாவரங்கள் உறுஞ்சுகின்றன. அந்தத் தாவரங்கள் மீண்டும் களும் இருக்கின்றன. குறுக்கு வழிகளும் இருக்கின்றன. நேர்மையான வழிகளில் சேர்க்கும் பணம் நிலைத்து நிற்கும். குறுக்கு வழிகளில் சேர்க்கும் பணம் விரைவில் அழிந்துவிடும். நம் கண்முன்னே இப்படி நடைபெறுவதை நாம் காண்கிருேமல்லவா? திடீரென்று குபேரராகியவர்கள் திடீரென்று நொடித்துப்போவதும் சொந்த முயற்சியின் மூலம் படிப்படியாக முன்னேறியவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதும் கண்கூடு. ஒழுங்கற்ற முறையில் சேர்த்த பணம் நிலைத்த மகிழ்ச்சியை அந்தரங்கசுத்தியான ஆனந்தத்தைத் தரமுடிவதில்லை.

இவ்வாறு ஒவ்வொரு சம்பவமும் காரண காரியத்துடன் நடைபெறுவது, 'நன் யான சொத்து நம்மிடமிருந்து ஏதோ ஒரு வழியில் பறிபோய் விடும். டாக்டர் பில்லாகவோ நாம் கற்பனைகூடச் செய்திராத வேறெந்த விதமாகவோ அதனை நாம் இழக்கக்கூடும். மாருக அப்பணத்தை உரியவரிடம் சேர்ப்பித்தால் அதற்குப் பிரதிபலன் எப்படியும் கிடைத்துவிடும். அதுமட்டுமல்ல இழந்த பணத்தைத் திரும்பப் பெற்றவரின் இதயத்திலிருந்து எழும் நன்றி உணர்ச்சியும், அத்துடன் நல்ல ஒரு காரியத்தைச் செய்தோம் என்று எமது இதயத்திலிருந்து எழும் ஆத்ம திருப்தியும் இருக்கிறதே, அதன் பெறுமதிக்கு ஈடேது.

சக்தியற்ற ஓர் ஏழைக்கு ஒருவேளை சாப்பாடு போடு

## வாழ்க்கையில் நிம்மதி

உடல்களுக்கு உணவாகின்றன. தாவரத்தை உண்டு வளரும் சிறிய உடல்கள் பெரிய உடல்களுக்கு இரையாகின்றன. என்ன ஒழுங்கான உயிர்வட்டம்.

இதுபோலவே மனித வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளும் ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு ஒரு நியதிக்கு உட்பட்டு நடைபெறுகின்றன.

ஒருவன் செல்வனுக இருப்பதும், இன்னொருவன் ஏழையாக இருப்பதும் தகுந்த காரண காரியத்துடன்தான். ஒருவன் வாழ்க்கையில் சோதனைகள் ஏற்படுவதும் இன்னொருவன் வாழ்க்கையில் தென்றல் வீசுவதும் அவனவனுக்கென்று அமைந்த ஒரு நியதியின்படிதான். தவறு செய்தவர்கள் அத் தவறுக்கேற்ற தண்டனை அடையவேண்டியதும் நன்மை செய்தவர்கள் றும் தீதும் பிறர்தரவாரா என்பதை நன்கு எடுத்துக் காட்டுகிறதல்லவா? 'வினை விதைத்தவன் வினை அறுப்பான். தினையை விதைத்தவன் தினையையே அறுப்பான். எனவே 'வாழ்க்கை

திருமதி பார்வதி நாகலிங்கம்

யில் ஏற்படும் மேடு பள்ளங்களுக்கு வேறு யாரும் பொறுப்பாளிகளல்ல; நாமேதான் என்று உணர்ந்து மனத்தைத் தேற்றிக் கொள்ள வேண்டும்.

நாம் தெருவால் போய்க் கொண்டிருக்கிருேம். ஒரு மணிபர்ஸ் கிடக்கிறது. விரித்துப் பார்த்தால் உள்ளே கத்தை கத்தையாக நோட்டுக்கள். ஐநூறுரூபாய்க்குமேலிருக்கலாம். நாம் என்ன செய்வோம்? அதில் கிறீர்கள். அரிசி விற்கும் விலையில் ஒருரூபா தண்டம் என்று நினைக்கிறீர்களா? அப்படிநினைக்க வேண்டாம். ஒருரூபாய்க்கு இரண்டு ரூபாய் பெறுமதியான பொருள் எப்படியும் உங்கள் கைக்கு வந்து சேர்ந்துவிடும்.

இப்படியான சம்பவங்கள் எப்போதும் நம் வாழ்க்கையில் நடைபெறவே செய்கின்றன. ஆனுல் நாம் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. அப்படிப் பொருட்படுத்திஞலும் அதன் காரண காரியங்களைத் தொடர்புபடுத்தும் சக்தி நமக்கு இல்லை.

ஏதோ ஒரு மனஸ்தாபத்தில் ஒருவன் நம்மை ஏசிவிடுகிருன் என்று வைத்துக் கொள்வோம். ஆத்திரம் பீறிடுகிறது. அவனைப் பிடித்து நாலு உதைகொடுக்கிருேம். கோர்ட்டில் வழக்கு நடக்கிறது, ஒரு கெட்டிக்கார வழக்கறிஞரை வைத்து ஜயித்துவிடுகிருேம். அத்துடன் கதைமுடிந்தது என்று தானே நினைக்கிறீர்கள், இல்லை. நமதுகதை அங்குதான் ஆரம்பமாகிறது.

சட்டத்தின் தண்டனையிலிருந்து நாம் தப்பிவிடலாம். ஆனுல் தெய்வத்தின் தண்டனையிலிருந்து நாம் தப்பவே முடியாது. உதைத்த கால்களுக்கு தண்டனை கிடைக்கவே செய்யும். இன்றில்லாவிட்டால் நாளை, அவ்வளவுதான் வித்தியாசம். தண்டனை எந்த ரூபத்தில் கிடைக்கும், எப்போது கிடைக்கும் என்பதுமட்டும் நமக்குத் தெரியவே தெரியாது, 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' என்பது முதுமொழி அல்லவா.

தீமைசெய்தவர்கள் துன்பம்அனுபவிப்பது நியாயமானதே. ஆனுல் தீமை செய்யாது எப்போதும் நன்மையே செய்கிறவர்களும்

(மறுபக்கம் பார்க்க)


"லீடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லீடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.
போன்: 330



REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Pre-Poya 4 Shows
Doris Day, Richard Harris
in
CAPRICE

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
ரஞ்சன் - அஞ்சலிதேவி
நடித்த
நீலமலைத் திருடன்
(புதிய கொப்பி)


Next attraction
CRACK IN THE WORLD
MANOHARA
JAFFNA
Daily4-45,7-00&9-45p.m.
Clint Eastwood
in
FISTFUL OF DOLLARS
(Scope color)

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை10-30
ஜெய்சங்கர் - பாரதி
நடித்த
காதல் பறவை

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
விஜயலக்ஷ்மி
நடித்த
அன்பு வழி


ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனேகர், ராமதாஸ்
பேபி ராணி, பத்மினி, சோ, தங்கவேலு
நடித்த
குழந்தைக்காக
கதை-வசனம்- துறையூர் மூர்த்தி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ ஜெமினிகணேசன்
★ சரோஜாதேவி
நாகேஷ், வாணிஸ்ரீ, சுந்தரராஜன்
நடித்த
கே. பாலச்சந்தரின்
தாமரை நெஞ்சம்

5வது வாரம்!
கெப்பிட்டல் பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா
முத்துராமன்
கீதாஞ்சலி
நடித்த

நெஞ்சிருக்கும் வரை

2-வது வாரம்
கிங்ஸ்லி விஜயா ஸ்ரீ கிருஷ்ணு
(கொழும்பு )(மட்டுநகர்) (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படுகிறது
★ ரவிச்சந்திரன்
★ கே.ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ சோ ★ குமாரி சச்சு
இன்னும் பலர் நடித்த
முக்தா பிலிம்ஸ் அளிக்கும்
நினைவில் நின்றவள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆத்திரம்

## 'செம்பியன் செல்வன்'

**'ஈழநாடு' பத்தாவதாண்டு நிறைவு இலக்கியப் போட்டிகளில் முதற் பரிசு பெற்ற இரு சிறு கதைகளில்ஒன்று. முதற் பரிசு பெற்ற மற்றக் கதை ஏற்கனவே வெளியாயிற்று.**

'அமைதியின் இறகுகள்' என்ற சிறு கதைத் தொகுப்பு நூலின் ஆசிரியரான இக் கதாசிரியர் கல்லூரி ஆசிரியருமாவார். 'ஈழநாடு' பத்தாவதாண்டு நிறைவையொட்டிநடாத்திய ஓரங்க நாடகப்போட்டியிலும் இவர் முதற்பரிசுபெற்றவர் என்பது குறிப்பிடத் தக்கது.



கதையைப்பற்றி...

தன்பூட்டிக்கு காது குத்தல்விழா நடக்கிற அன்று மயிலுக்கிழவரை யாரும் கவனிப்பாரில்லை. அதனுல் அவருககு ஆத்திரம். ஆத்திரத்தில் அவரதுஎண்ணங்கள்; சிங்களவன் கடையில் 'கேக்' வாங்கிச் சாப்பிடப்போகிருர். கடைசியில் அவரை வைத்தே காதுகுத்தல் நடைபெறுகிறது. நல்ல புழுகம் கிழவருககு. மின்வெட்டுப்போன்ற கதை இது; படித்துச்சுவையுங்கள்.

மயிலுக் கிழவருக்கு ஆத்திரம் குமுறிக் குமுறிக் கொண்டு வருகிறது. வீட்டு வளவில் நிறைந்திருக்கும் சந்தடிகளுக்கும் இன்பப் பரபரப்புகளுக்குமிடையில், அவரது ஆத்திரம் அர்த்தமற்றதாகவும் கேலிக்கிடமானதாகவும் விளங்கியபோதிலும் மனதில் எழும் அழலை அவரால் அடக்கமுடியவில்லை.

முற்றம்... வீட்டுத்தாழ்வாரம் ... கிணற்றடி ...அடுப்படி ... எங்கும் இனசனங்கள் குழந்தை குட்டிகளுமாகக் குவிந்திருக்கின்றனர். அவர்களின் பரபரப்பான மகிழ்ச்சிச் சந்தடிகளுக்குமிடையில் கைவேலைகள்... ஏதேதோ கருமங்கள் துரிதமாக நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. மாமரத்தின் நிழலின்கீழ் ஒலிபெருக்கிக்காரன் இருந்துகொண்டு சமீபகாலத் திரைப்படப் பாடல்களை ஒலிபெருக்கிக் கொண்டிருக்கிருன். சிறுவர் கூட்டமொன்று அவனை மொய்த்துக்கொண்டு நிற்கிறது. அங்கு வேறு வேலையாக வரும் சில இளைஞர்கள் சிறுவர்களை அதட்டி விலகச்செய்துகொண்டு, தாம் விரும்பும் பாடலை ஒலிபரப்புமாறு தூண்டிக்கொண்டு நிற்கிருர்கள். பாவாடை க்ட்டிய இளம் சிறுமிகளும், புதிதாகச் சேலை உடுக்கத் தொடங்கிய 'இளம் பெண்களும்' தாமும் அக் கூட்டத்தினிடையே கலந்து கொள்ள வேண்டுமென்ற தவிப்பினுள்ளும் தங்கள் மனதிற்கே பிடிபடாத வெட்கத்திற்கோ அன்றி பெரியவர்கள் ஏதும்சொல்வார்கள் என்ற பயத்திற்கோஆளாகி உதட்டின் விளிம்புகளிலும், கன்னக் கதுப்புகளிலும் சிறு நகையைத் தேக்கியவாறு, மலர்ந்த முகத்துடன் அங்குமிங்குமாக அலைந்து திரிந்து தம்மைக் காட்டிக் கொள்வதில் ஒருவித ஆனந்தம் கொள்கின்றனர்.

கிழவருக்கு இதனுல் ஒன்றும் ஆத்திரம் வரவில்லை. மாருக இந்த இளவட்டங்களின் தடுமாற்ற ஆரவாரம் அவருக்கு மனதிற்கு இதமாகத்தான் படுகின்றது. இந்தச் சுபகாரியத்திற்குக் காரணமான சம்பவத்தை நினைத்தபோது நெஞ்சத்திலே கோடை மலர்களாக உவகை பூத்துக்கொட்டுகிறது.

அவரது செல்லப்பேத்தி சாரதாவின் மகளுக்கு இன்று 'காதுகுத்தல்' நடக்கப்போகிறது.

'விஜிக்குட்டிக்கு... என்ர பூட்டிக்கு காது குத்தல்' அவர் மனதில் பெருமிதம் பொங்கி வழிகிறது.

'எனக்கென்ன குறை... பூட்டியைக்கூடச் சாகமுந்திக் கண்ணுல பாத்திட்டன்... நான் செத்தாலும் நெய்ப்பந்தம் பிடிக்க பேரன் பேத்திகள் பூட்டன் பூட்டிகளெல்லாம் இருக்கினம்...' —ஈழத்துக் குடியானவன் ஒருவன் மனதில் இயல்பாக எழும் பெருமிதம் மனதில் நிறைகிறது.

-ஆனுல் இந்தப் புறக்கணிப்பு ... உதாசீனம்தான் அவரால் தாங்கமுடியவில்லை.

அந்த வளவிலேயே பிரதான வீட்டை விலத்தி, ஓதுக்குப்புறமாகத் தனக்குத்தானே அமைத்துக் கொண்ட சிறு ஓலை வீட்டின் தலைவாசலில் நின்று கண்களில் எரிவுதோன்றப் பார்த்துக் கொண்டிருக்கிருர். அவர் மனதில் மகிழ்ச்சியும் ஆத்திரமும் ஏதோ பிடிபடாத நிலையில் கலந்து குமைகின்றன.

வந்திருக்கும் விருந்தினருக்கு பழமும், பலகாரமுமாக சோடாவும் சிகரட்டுமாக உபசாரம் நடந்து கொண்டிருக்கிறது. அதனைப் பார்த்ததும் அவரின் ஆத்திரம் அதிகரிக்கின்றது. 'ஹூம்!' என்ற உறுமலுடன் இடுப்பிலிருந்து நழுவி விழும் நாலுமுழ வேட்டியை இழுத்துக் கட்டிக்கொண்டு முன்னும் பின்னுமாக நடக்கின்ருர்.

''வந்தவைக்கெல்லாம் பெரிசா உபசாரம் பண்ணுருளவை. இங்க ஒரு கிழவன் விழுந்துகிடக்கிருனெண்டு கொஞ்சமாவது நினைச்சாளவையே... அவளவைக்கு அவையின்ர புதிய சொந்தக்காறர்தான் பெரிசாப் படுகுது. இரு... இந்த அவையின்ர கொண்டாட்டத்துக்கெல்லாம் இந்தக் கிழவன்தான் காரணம் எண்டு எப்பனுவது சிந்தனை!... அந்தக் கிழவன் நேரத்துக்குச் சாப்பிடாட்டி பசியால துடிச்சுப்போகும் எண்ட கரிசனை... கொஞ்சமாவது உதுகளுக்கு இருக்கா?... ஹூம் எல்லாம் நன்றி கெட்டதுகள்... மகள் எண்டால் என்ன பேத்தி எண்டால் என்ன? எல்லாம் ஒண்டாத்தான் இருக்குதுகள்..!''

'எட தன்ர வளவைத்தான் கிழவன் எங்களுக்குக் குடியிருக்க விட்டது மட்டுமல்லாமல், தானிருந்த வீட்டகூட எங்களுக்கு விட்டிட்டு, தனக்கொரு குடிசை போட்டுக்கொண்டு பிறத்தியா வாழுறதுகூட எங்கட சுகத்துக்காகத்தான எண்டு நினைச்சுப் பாக்கிருளவையே...?' - மனதின் கொதிப்பு எண்ண அலைகளைஎழுப்புகின்றன.

தன்னை ஒருவரும் நன்ருகக் கௌரவிக்கவில்லை, கவனிக்கவில்லை என்ற எண்ணம் எப்படியோ கிழவன் மனதில் எழுந்துவிட்டது. அதனுல் அவரின் உள்ளம் கொதித்துக்கொண்டிருக்கிறது.

கிழவர் உண்மையிலேயே மிகவும் நல்லவர். தன் குடும்பம் கொப்பும் கிளையுமாகச் செழித்து வளர்வதைக் கண்டு மனம் மகிழ்கின்றவர். இல்லாவிட்டால் தனது ஒரே ஒரு மகளான கமலத்தை ஏராளமான நிலபுலன்களைச் சீதனமாகக் கொடுத்து கலியாணம் செய்துவைக்க, கொடுத்த சொத்தையெல்லாம் சில ஆண்டுகளிலே கரைத்துவிட்டு, வெறுங்கையோடு மகளும், மருமகனும், பிள்ளைகளும் வந்து நின்றபோது அவர் உருகியே விட்டார். முதலில் மருமகனின் செய்கைக்காக ஆத்திரப்பட்டாலும், 'எல்லாம் எழுதினபடிதான் நடக்கும்' என்று விதியின்மேல் பழிபோட்டுவிட்டு மகளுடன் வந்திருந்த பேரன் பேத்திகளைக் கண்டு மனங்கலங்கி அப்படியே அணைத்துக்கொண்டார்.மூத்த பேத்தியான சாரதா—அவரது செல்லப் பேத்தியாகி விட்டாள். எப்போதும் அவள் அவருடனேயே இருப்பாள். அவருடனேயே கோயில் குளம் எல்லாம் திரிவாள்.

அவர் மனைவி பாக்கியம்கூடக கேலி பண்ணுவாள். —'என்னடி சாரதா அப்புவை இப்படிக் காவல்செய்தா அவர் வேலைவெட்டியள் பாக்கப் போறதில்லையே?'

சாரதா வெடுக்கெனப் பதில் சொல்வாள் ''அப்பு வேலை வெட்டி பாக்கப் போகவேணும்.''

''அப்படியெண்டா எப்பிடிச் சாப்பிடுறது...உழைச் சாத்தான சாப்பிடலாம்...''

''ஏன் அப்புட்டத்தான் கனக்கக் காசிருககே... என்னப்பு காசு இருககல்ல உங்களிட்ட...'' — என்று அவரையே திருப்பிக கேட்பாள்.

அவரை அப்படியே மகிழவைககும் அவள் மழலைகள். அவர் அப்படியே மெய்மறந்து போவார்.

அவளது மழலையிலும் குறும்பிலும் தன்னை மறந்திருந்த அவருக்கு சாரதா ஒட்டு மாங்கன்ருக மதமதவென்று வளர்ந்து, பருவப் பூரிப்புடன் விளங்குவது புரியவேயில்லை

சாரதா அருகிலுள்ள கல்லூரி ஒன்றுக்குப் போய் வரத்தொடங்கினுள். அப்படி அவள் போகவும் வரவும் அவளைப் பார்த்துப் பார்த்து மெய் மறந்துகொண்டிருந்தான்சிவராசா. அவன் தினசரிஅவள்போகும்பாதையில், அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் கச்சேரிக்குப் போகும் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருப்பான். அவளின் அழகைப் பார்த்துப் பார்த்து மெய்மறந்த அவனுக்கு அந்தக் குழந்தையுள்ளத்தின் பண்பாடான நடத்தையும், உலகை விகற்பமின்றிப் பார்க்கும் களங்கமற்ற பார்வையும் அவனை மெய்மறககச் செய்தன.

அவன் பெற்ருேர்களே சாரதாவுகது மணம்பேசி வந்தபோது கிழவர் திடுககிட்டார்.

சாரதாவுகது மணமா? குழந்தைககுத் திருமணமா?

—அவர் சாரதாவைப் பார்த்தபோதுதான் அவள் சிறுமியல்ல. பெண்மை முகிழ்த்து நிற்கும் சுடர்விளககு. ஒரு குடும்பத்திற்கு ஒளி தரவேண்டிய பெண் விளககு என்பது புரிந்தது.

கலியாணம் சீதன விசயத்தில் தடங்கியபோது சாரதா கண்கலங்கியதைக் கண்டார். அவரால் பொறுக்கமுடியவில்லை. 'தனக்குப்பின் தானிருக்கும் காணியை அவளுக்கே எழுதிவைப்பதாக வாக்குக் கொடுத்து —கலியாணத்தை நடாத்திவைத்தார். அந்தச் சாரதாவின் மகளுக்குத்தான் இன்று 'காதுகுத்தல்' நடக்கிறது.

—அந்த விழாவில் அவரை ஒருவரும் சரியாகக் கவனிக்கவில்லை. அவருக்குப் பொருமல் இராதா?

பாக்கியம்—அவர் மனைவிஇறந்தவிரக்தியிலும், தானிருந்த கல்வீட்டை பெருகிவரும் மகளின்குடும்பம் ஆளக் கொடுத்துவிட்டுதனக்கொருகுடிசைஅமைத்துக்கொண்டு வாழ்வதற்குக் காரணம் அவர்கள் குடும்பத்துடன் வாழப் பிடிக்காததல்ல. குழந்தைகள் காலம் தெரியாமல் அழுவதும் பிடிவாதம் பிடிப்பதும் இப்போது அவருக்கு ஏனே எரிச்சலை மூட்டின. பேரன்பேத்திகளின் தற்கால நடைமுறைக்கேற்ற நடை, உடை, பாவனைகளைக் காணும்போது அவருக்கு மனம் எரியும். அவர் தனித்து வாழ்ந்தாலும், அவருககுத் தேவையான உணவும், பிறதேவைகளும் நேரந் தவருது மகளாலோ பேத்தியாலோ நிறைவு செய்யப்பட்டுவிடும். ஆனுல்—

அவர் இரண்டு மாதங்களுக்கு முன்னுல் பெரிய காய்ச்சலில் விழுந்து எழுந்ததின் பின்னர் அவருக்கு வழக்கமாக வரும் உணவுகளுக்குப் பதிலாக உப்பில்லாமல் ஒருவித சுவையுமற்ற உணவே வந்துகொண்டிருக்கின்றன. கேட்டால் அவர் வாய்தான் சரியில்லை என்று பதில் வருகிறது ..

''என்ர நாச்சியார் சமைச்செல்லோ சாப்பிடோணும். ... அவளப்போல சமைக்க ஒரு பிறவியள் இப்ப இருக்கினமே... அவளிட்ட சாப்பிட்டவாய் இப்ப இதுகளின்ர சாப்பாட்ட சாப்பிட வேண்டியிருக்கு. நாச்சியார் குணத்தால, அழகால என்னைக் கவந்ததைப்போல காப்பாற்றினவள் என்னை அப்படியே மயக்கிட்டா... இப்ப உணவும் சரியில்ல. அதையும் நேரத்துக்கும்

(14 ம் பக்கம் பார்க்க)

# பதிலடி!

## பாதிரியார் பதில்

ரோம் நகரத்து பாதிரியார் ஒருவரைப் பார்த்து அவ்வூர்க்கனவான் ஒருவர்கேட்டார்:

''நான் சேர்ச்சுக்கு வருவதில்லை என்பதை நீங்கள் அறிவீர்களா ''

''அறிவேன்!''

''அதற்குக் காரணம் அங்கு வேஷதாரிகள் அதிகம் என்பதுதான்'' கனவானின் முகத்தில் பெருமிதம்.

பாதிரியார் அமைதியாகக்கூறினுர்: ''அதற்காக நீங்கள்சேர்ச்சுக்கு வராமல் இருக்கவேண்டியதில்லை. அத்தகையவர் இன்னுமொருவருக்குஅங்கு இடமுண்டு. நீங்கள் தாராளமாக வரலாம்.''

கனவானின் முகத்தில் ஈயாடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆவண வீதி யெங்கும்
அழகிய முத்தும் பொன்னும்
பாவையர் விரும்பு கின்ற
பட்டொடு மணியின் கோவை
ஆவலைத் தூண்டு கின்ற
அரும்பெரும் பொருட்க ளெல்லாம்
தேவரும் விரும்பும் வண்ணம்
சீருறக் கிடக்கு மிங்கே.

அரசரின் வீதி மற்றும்
அமைச்சர்கள் வீதி; தானைக்
குரியதோர் வீதி; வீரர்
உறைந்திடு கின்ற வீதி
வரிசையாய்த் தொழிலுக் கேற்ப
வாய்த்தபற் பலவாம் வீதி
பெருகிய நல்லூர் மிக்கப்
பீடுறத் திகழ்ந்த தன்றே.

நல்லையம் பதியி ருந்து
நாட்டினைக் காத்த வேந்தர்
கல்லினால் அமைத்த கோட்டை
கடிமனை யாவும்; மக்கள்
சொல்லினால் இயம்ப வொண்ணுச்
சுந்தர வெழில தாகும்
எல்லைகள் யாவும் சூழ்ந்த
இளமரக் காவற் காடு.

கயிலாய பிள்ளை யாரின்
கவின்மிகு கோயில் ஓர்பால்
அயராத வீர காளி
அம்மனின் கோயில் ஓர்பால்
எயில்தீய்த்த சட்ட நாதர்
இருந்திடு கோயில் ஓர்பால்
மயிலேறும் நல்லைக் கந்தன்
மாண்புறு கோயில் ஓர்பால்.

காவல்சூழ் மனைய டுத்த
கடிகமழ் சோலை யூடே
யாவடும் காதல் கொள்ளும்
யமுனரி என்னும் ஏரி
மாவடுக் கண்ணு ரோடு
மன்னவ ராடும் பொய்கை
பூவொடு பொலியும் காட்சி
புதுமணப் பெண்ணை யொக்கும்.

(நல்லைநகர்ச் சிறப்பு முதலியார் இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்திலுள்ளது. கோட்டைகள், வீதிகள், கடைகள்பற்றிய விபரங்கள் அங்கே தரப்பட்டுள்ளன. -ஆர்.)

## பரராசசேகரன் ஆட்சி

இத்தகைய எழிலோடு அழகு வாய்ந்த
யாழ்ப்பாண (இ)ராச்சியத்தை ஆண்டு வந்த
சத்தியவான் பரராச சேக ரர்க்குத்
தாரமாய் வாய்த்தவர்கள் மூவ ராவர்
எத்திசையும் புகழ்கின்ற சோழ தேசத்
திளவரசி யேபட்ட மகிஷி யாவாள்
முத்திலங்கும் ஈழவள நாட்டைச் சேர்ந்த
மொய்குழலா ரேமற்ற மனைவி மாராம்.

தங்கத்தை வார்த்தெடுத்துச் சிலையாய்ச் செய்து
தமிழ்பேச வைத்ததுபோல் அழகு வாய்ந்த
மங்கத்தம் மாள்என்னும் மூன்றும் பெண்ணே
மன்னவனின் உள்ளத்தே கோயில் கொண்டாள்
பொங்குகிற காதலொடு அவளை விட்டுப்
பிரியானுய் வாழ்ந்துவரும் நாளில் அன்னுள்
சங்கிலியன் என்னுமொரு சிங்க வேற்றின்
தாயானுள் தமிழர்செய் தவத்தி னலே.

மன்னனது பட்டத்து ராணி பெற்ற
மக்களிரு பேரும்மூத் தோர்கள் ஆண்கள்
அன்னவளுக் கடுத்தவளாய் மணமு டித்த
ஆரணங்கின் பிள்ளைகளோ நால்வ ராவர்
துன்மதிப டைத்தபர ராச சிங்கன்
தோகையிவ ளின்மூத்த பிள்ளை யாவான்
பின்னவளின் புத்திரன்சங் கிலியோ எல்லாப்
பிள்ளைகட்கு மேஇளைஞன்; ஆனுல் வீரன்.

எல்லோரும் புகழ்கின்ற அரச மைந்தர்
ஏற்றகுரு விடஞ்சென்று இளமை தொட்டு
வில்வித்தை வாள்வித்தை சிலம்ப மோடு
வேலாலே வேழத்தை அடக்கு கின்ற
நல்வித்தை; கதைகொண்டு பொருதல்; சற்றும்
நடுங்காது மாற்றுரை எதிர்த்துச் செய்யும்
மல்யுத்தம் முதலான பயிற்சி பெற்றூர்
மன்னனிவை கண்டுமனம் பூரித் தானே.

இலக்கியங்கள் இலக்கணங்கள் இதிகா சங்கள்
இனியதிரு முறைப்பயிற்சி இவற்றி னேடு
அலகில்லாச் சாத்திரங்கள்; நீதி நூல்கள்
அத்தனையும் ஆழமாய்க் கற்றுத் தேர்ந்து
பலதுறையும் மிக்கவராய் மிளிர்ந்தா ரேனும்
பாலனும் சங்கிலியன் பன்ம டங்கு
நிலவுகலை யாவுமறிந் தறிஞ னுகி
நிகரில்லா வீரனுகத் திகழ்ந்து நின்றுன்.

பரநிருப சிங்கனவன் பலநா ளாகப்
பற்றுகிற நோய்தீர்க்கும் மருத்து வத்தைக்
கரிசனையாய் நன்றுகக் கற்றுத் தேர்ந்து
கரைகண்ட வைத்தியனுய்த் திகழ்ந்துவந்தான்
பெரியபல பேர்பெற்ற பண்டி தற்கே
பிடிபடாப்பி ணிகளையும் ஆய்ந்த றிந்து
உரியமுறை யில்மருந்து கொடுக்கு ம்வல்ல
ஒப்பற்றோன் என்றுபலர் போற்றி னர்கள்.

மற்றவரின் நோய்தீர்க்கும் ஆற்றல் வாய்ந்த
மருத்துவனுய் இருந்தாலும் உளத்தில் வஞ்சம்
உற்றவனுய் பரநிருப சிங்கன் வாழ்ந்த
உண்மையினை அறிந்தோர்கள் அப்போ தில்லை
பற்றற்ற பண்புள்ள படித்தோ னுகப்
பார்ப்போர்கள் மத்தியிலே நடித்தா னேனும்
அற்றம்பார்த் தெவருக்கும் தீங்கு செய்யும்
அழுக்காறு கொண்டமனம் படைத்தி ருந்தான்.

தெள்ளுதமிழ் மாமுனிவன் சிறந்த நீதி
செப்புகிற ஒப்பற்ற தெய்வ ஞானி
வள்ளுவனுர் செய்தகுறள் அமுத மென்றுல்
வாயினிக்கும் சங்கிலிக்கு; வடநூ லான
தள்ளரிய அரசாட்சி முறைமை கூறும்
சாணக்கி யர்அர்த்த சாத்தி ரத்தை
அள்ளியரு மருந்தாகப் பருகி; ஆளும்
ஆட்சிமுறை யிற்றேர்ச்சி நன்கு பெற்றுன்.

மன்னவனும் பிள்ளைகளைக் காணுந் தோறும்
மட்டற்ற மகிழ்ச்சிபல வுற்று னேனும்
தன்னரிய காதலியின் மகனும் வீரச்[illegible]
சங்கிலியன் தீரத்தை அறிவை மெச்சி
என்னரசுக் கேற்றவனுய் இருந்த போதும்
என்செய்வேன் உரிமையற்ற பிள்ளை யாகப்
பின்னவளின் வயிற்றினிலே பிறந்திட் டானே
பிரமாவுக் கேனிந்த வஞ்ச மென்றே:

சங்கிலியைக் காணுகின்ற வேளை தோறும்
சஞ்சலமே யுற்றவனும் வருந்தி நிற்பான்
இங்கிவர்கள் கலைதேர்ந்து மணமு டித்தே
இருக்கின்ற நாளினிலே அமைச்சர் கூடித்
தங்களர சாட்சிக்கோர் வாரி சாகத்
தலைப்பிள்ளை தன்னையுப ராச னுக்கிச்
செங்கோலை யோச்சுகிற பயிற்சி தேரச்
செயவேண்டு மென்றுர்கள்; இசைந்தான் மன்னன்.

## இளவரசுப் பட்டங் கட்டல்

இளவரசுப் பட்டத்தை அளிப்ப தற்கு
ஏற்றசுப நாளொன்று கூறும் வண்ணம்
தெளிந்தநூல்கள் பலவாய்ந்து சோதி டத்தில்
தேர்ச்சிமிகப் பெற்றேரைக் கேட்ட போது
எழுந்தொருவன் வியாழபக வானை யொப்பான்
எள்ளளவும் அச்சமின்றி உரைக்க லுற்றுன்
வழுவில்லா ஆட்சிபுரி கின்ற மன்னு
வணக்கத்து டன்சொல்லும் வார்த்தை கேட்பாய்.


முடிக்குரிய உன்மைந்தன் சிங்க வாகு
மூத்தமகன் என்றுலும் அவனே இந்தக்
குடிகளையாள் வானென்று கூற; அன்னுன்
குறிப்புமிகப் பாதகமாய் உள்ள தையா
கெடுதிபல நேருகிற சால மாகக்
கிடக்கின்ற சாதகத்தை வைத்து, நாட்டின்
முடிசூட்ட எண்ணுவது பொருத்த மன்று
முடிவான எந்தனது கருத்தீ தாகும்.

என்றுரைத்த மொழிசெவியுட் புகுமுன் மன்னன்
இடியுண்ட நாகம்போல் மிகவுஞ் சோர்ந்து
அன்புள்ள சோதிடரே அவனை நீக்கி
அடுத்தவரை முடிசூட்ட எண்ண மாட்டேன்
கன்மழையே பொழிவதுபோல் துன்பம் வந்த
காலத்தும் மரபுவழி மாறல் தீது
துன்பங்கள் வாராது தடுப்ப தற்குச்
சோதிடத்தில் வழியிருந்தால் சொல்லு [illegible]ன்றுன்.

அப்போதங் கிருந்தசுப திருஷ்ட ஞானி
அனைத்துக்கும் பரிகாரம் கூற வல்ல[illegible]
ஒப்பில்லா மாமுனிவன் வேந்தைப் பார்த்து
உள்ளதொரு மார்க்கம்இவன் இறைவன் பேரைச்
செப்பியவண் ணம்பெரிய யாகம் செய்தால்
சிலவேளை சித்திபெறக் கூடும் ஆனல்
இப்புவியில் ஊழ்வலியை வென்ற பேர்கள்
எவருமில்லை என்பதையும் உணர்வாய் என்றுன்.

இந்தவுரை கேட்டஅப்பா முதலி; மன்னற்
கிரண்டாம் மனைவியாய் வாய்த்த மாதின்
பந்துவென்ற காரணத்தால் அவளின் மக்கள்
பக்கமுள்ள பாசத்தால் உரைக்க லுற்றுன்
மைந்தனிவன் சாதகத்தை விடுத்து மற்ற
மக்களது காலத்தை ஆய்ந்து பாரும்
செந்தமிழர் வருங்காலம் மரபிற் காகச்
சீரழியக் கூடாது சிந்தை செய்வீர்.

(தொடரும்)



'ஈழநாடு' பத்தாவ தாண்டு நிறைவை யொட்டி நடாத்தப் பட்ட மாபெரும்இலக கியப்போட்டியில் முதற்பரிசான 500 ரூபாய் பரிசுபெற்ற காவியத்தைப் படைத்த கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை இவர் தான்.

## வாழ்த்து

''ஈழநாடு' வாரமலர் கண்டேன், களி மிகக் கொண்டேன். வாரமலரின் புதிய தோற்றமும் புதிய அமைப்பும் மனத்துக்கு இதம் தருவதாக அமைந்துள்ளன. அத்துடன் விஷயங்களின்இலச்கியக்கனமும், ஏற்ற ஓவியங்களும் நெஞ்சை நிறைக்கின்றன. சிறுகதை, கட்டுரை, கவிதை, காவியம் நாடகம் என்று அத்தனையும் தரமுள்ள விடயங்களாக வெளிவந்திருக்கின்றன. தொடர்ந்தும் இவ்வாறே வெளிவரும் என்ற நம்பிக்கையையும் இவ்விதழ் நமக்குத் தருகின்றது. தாழையடி சபாரத்தினம் அவர்களைப்பற்றிய கட்டுரை குக்க சமா[illegible]த்தில் வெளிவந்திருக்கின்றது. ஈழத்து எழுத்தாளர்களையும், ஈழத்து எழுத்தையும், ஈழத்து வாசகர்களிடையே நிலை நிறுத்தும் இலக்கி[illegible]ப் பணியைத் தொடர்ந்து 'ஈழநாடு' செய்துவருகிறது. ஈழத்தில் வெளியாகும் ஏனைய பத்திரிகைகளின் வாரமலர்களுக்கு மத்தியில் 'ஈழநாடு'வாரமலர் ஒரு கற்பரசியாக ஏறு நடை போடுகிறது. வெகு விரைவில் ஈழத்து வாசகர்களின் 'மருளை' நீக்கி இலக்கிய வாசகர்களாக அவர்களை மாற்றும் பணியை இந்தக் 'கற்பரசி'செய்யத்தான் போகிருள். அதை நாமும் காணத்தான் போகிறேம்; அதற்கான சூழ்நிலையை இறையருள் ஏற்படுத்தித்தருவதாக!

இரா. நாகலிங்கம்.
ஆரையம்பதி,
காத்தான்குடி.

★

தாளையடி சபாரத்தினம்பற்றிப் பிரசுரித்திருந்தீர்கள். இந்தச் சேவை மேலும்தொடர வேண்டும். ஓர் எழுத்தாளனுக்குக் கொடுக்க வேண்டிய கௌரவத்தை 'ஈழநாடு' தருகிறது. சினிமாக்காரர்களை மதிக்கிற அளவுக்கு எழுத்தாளனைப் பத்திரிகைகள் இப்பொழுது மதிப்பதில்லை. 'ஈழநாடு' அதற்குப் புறநடையாக உள்ளது வரவேற்கத்தக்கது. பத்திரிகை என்றுல் 'ஈழநாடு'போல இருக்க வேண்டும் என்று கூறும் அளவிற்கு உயர்ந்தது. வாழ்க! வளர்க! 'ஈழநாடு'!

செ. சுந்தரம்பிள்ளை.
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பூமிசாஸ்திரம் எழுதினரா?

ச. அம்பிகைபாகன் —

நாவலர்விழா சம்பந்தமான புத்தகக் கண்காட்சிக்கு நூல்களைச் சேகரித்தபொழுது, பொன்னுவெளி முன்னுள உடையார் திரு. கு. அருளம்பலமவர்கள் பல அரிய முதற்பதிப்பு நூல்களை உதவினர். அவற்றிலொன்று



'இலங்கைப்பூமிசாஸ்திரம்'. இந்நூல் 1874-ம் ஆண்டில் நாவலர் அவர்கள் தாபித்த சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் பதிப்பிககப்பட்டது. இதன்முதல்பககத்தில் கூறப்படுவது பின்வருமாறு:-இது பூகோளசாத்திர பதநிருத்தியோடும், பாடசாலைமாணுக்கர்களுக்கு உபயோகமாகும்படிசெய்து, சென்னபட்டணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிககப்பட்டது. 1874. விலை சதம் 32. இதற்கு மேல் எழுதிய, பதிப்பித்த ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனுல் இந்நூலைப் படிக்கும்பொழுது இது நாவலரவர்களாலேயே எழுதப்பட்டதென்று கூற இடமுண்டு. வரிகள், வேளாண்மை, ஊர்ப்பெயர்கள் முதலியவற்றைப்பற்றி எழுதப்பட்டிருப்பவற்றைக் கொண்டு இப்படி நிச்சயிககலாம். இதைப் பின்னர் கவனிப்போம்.

நூலின் ஆரம்பத்தில் 'அறிவித்தல்' என்னுமொருபகுதி காணப்படுகிறது. இது இந்நூலைககற்பிக்கும் ஆசிரியர் பின்பற்றவேண்டிய முறைகளைக் கூறுவதாக அமைந்துள்ளது. அவற்றில் முக்கியமானவற்றைக் கீழே காண்க: —

1. உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் பூகோளசாத்திரப்பதங்களை வெளிப்படையான வசனத்திலும் உதாரணங்களினுலும் நன்ருக விளக்கல்வேண்டும்.

2. பூகோள ரேகைகளுக்கு உதாரணம் காட்டுதற்பொருட்டு பூமியுருண்டை இல்லையாயின் கிச்சிலிப்பழமேனும், விழாம்பழமேனும் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

3. **பிள்ளைகள் தாங்கள் கற்கும் பள்ளிக்கூடம் இருக்கின்ற மாகாணமே முதற்கற்கத் தொடங்கவேண்டும்.**

மேற்கூறப்பட்ட இந்த ஆலோசனைகள் ஏறற்குறைய நூருண்டுகளுககுமுன் எழுதப்பட்ட நூலொன்றில காணப்படுகிறது என்பதை நினைக்கும்பொழுது நமக்கு வியப்பேற்படுகின்றது.

## நூல் அமைப்பு

இந்நூல் 63 பக்கங்களைக் கொண்டது. முதற் பத்துப் பச்கங்களில் உலக பூமிசாத்திரசம்பந்தமான விஷயங்களும் பூமிசாத்திரப் பதங்களின் விளக்கமும் காணப்படுகின்றன. அடுத்த இரண்டு பக்கங்களில் ஆசியா இந்தியாசம்பந்தமான குறிப்புகள் காணப்படுகின்றன. இவை இலங்கைப் பூமிசாஸ்திரத்துக்கு பின்னணியாகக் கூறப்பட்டிருக்கின்றனஎனக் கூறலாம். இப்பகுதியைப் பார்வையிட்ட ஒரு பூமிசாஸ்திரப் பட்டதாரி, இது இக்கால மாணவருக்கும் மிகப் பிரயோசனப்படும் எனக் கூறினுர்.

## பூமியின் வடிவு

பூமியின் வடிவுஉருண்டையென்பது பின்வருமாறு விளககப்பட்டிருககிறது:-

''கடலினிடத்தேகரையை நோககி வருகின்ற கப்பல் நுனிமுதற்கொண்டு வரவர அடிவரையுந் தோன்றுதலினுலும், கிழககு நோககியாயினும் மேற்கு நோககியாயினும் நேராகக கடல் யாத்திரை செய்வோர் தாம் முன் எவ்விடத்தினின்று புறப்பட்டனரோ, அவ்விடத்திற்ருனே மீண்டும் வந்து சேர்தலினுலும், கிரகண காலத்திலே பூமியினது சாயை சந்திரபிம்பத்தில் வட்டமாகத் தோன்றுதலினுலும், பூமி தட்டை வடிவினதன்று உருண்டை வடிவினதென்றே துணியப்படும்.''

## பூமியும் சந்திரசூரியர்களும்

சந்திரனில் மனிதன் இறங்குவதற்கு திட்டமிட்டிருககும் இந்நாளில் பூமிககும் சந்திரனுககுமுள்ள தொடர்புபற்றி இந்நூலில் கூறப்பட்டிருப்பதை எடுத்துககாட்டுவது பொருத்தமாயிருககும்.

''பூமிககும்அதைச்சார்ந்த சந்திரனுககும் உள்ளதூரம் 2,40,000 மைல். சந்திரன் பூமியின் ஐம்பதில் ஒருபங்கு பரிமாணமுடையது. சந்திரன் சூரியனிலும் அதிசமீபத்துள்ளது. ஆதலாற்ருன் சந்திரன் சற்றுக குறையச் சூரியனுககுச் சமமாகத் தோன்றும். சந்திரன் பூமியைச் சுற்றி வருவதற்கு இருபத்தெட்டுநாள் செல்லும். நக்ஷத்திரங்கள் சூரிய மண்டலத்தின் எல்லைககு அப்பால் அதிதூரத்திலுள்ளன.

## இலங்கை

இலங்கையைப் பற்றிக கூறும்பொழுது அதன் நிலை, பரிமாணம் முதற்கண் கூறப்படுகின்றது. பரிமாணம்பற்றிப் பின்வருமாறு கூறப்படுகின்றது:- ''இலங்கை மாங்காய்போல் நீண்டவடிவுடையது. அதன்நீளம் வடககுத் தெற்கு 271 மைல். அகலம் கிழககு மேற்கு 137 மைல். சுற்றளவு 760 மைல். பரப்பு 24,700 சதுரமைல்.

இதனையடுத்து இலங்கையையடுத்துள்ள சிறுதீவுகள், இலங்கையிற் காணப்படும் மலைகள், ஆறுகள், முனைகள், சலசந்திகள், ஏரிகள், துறைமுககங்கள் முதலியனபற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

சீதோஷ்ண நிலையைப்பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது. ''வருஷந்தோறும் சித்திரைமாதமுதற் புரட்டாதிமாதம்மட்டும் தென்றற்கோடையும், ஐப்பசி மாதம்முதல் பங்குனி மாதம் மட்டும் வாடைகொண்டலும் பெரும்பாலும் வீசுவதினுல்இவைகள் காலபேதத்திற்குஏதுவாயிருககின்றன''.

## தாவரங்கள்

தாவரங்களைப்பற்றிக கூறப்படும் பகுதியிலிருந்து அககாலத்தில்பயிரிடப்பட்ட தானியங்கள் மரங்கள் முதலியவற்றைப்பற்றி அறிய முடிகிறது. பனையின் பிரயோசனத்தை யாழ்ப்பாணத்து மககள் அக்காலத்தில் எவ்வாறு பிரயோசனப்படுத்தினுர்களென்பது பின்வரும் பகுதியிலிருந்து தெரிகிறது''.

''பனைமரம் வடமாகாணத்திலே மிகுதி. மழையின்மையால் நெல் விளைவு குறையும்பொழுதெல்லாம் வறியசனங்கள், பனம்பழம், பனுட்டு, பனங்கிழங்கு முதலியவற்றினுலேயே சீவிககின்ருர்கள். பனைமரங்கள் வீடு கட்டுவதற்கு உபயோகமாகின்றன. பனையோலைகள் வீடுவேய்வதிற்கும், வேலி கோலுவதற்கும், புத்தகம் அமைத்தற்கும் உபயோகமாகின்றன''.

அககாலத்தில்காப்பியேபிரதானமானஏற்றுமதிப்பொருளாயிருந்தது. காப்பிவிலை, மற்றெல்லாப் பொருள்களின் விலைத்தொகையிலும் ஐந்து மடங்கு பெரிதாயிருந்தது. திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து வந்த இந்தியர்களே காப்பித் தோட்டங்களில் வேலைசெய்தனர்.

அககாலத்திலும் இலங்கையில் போதியளவு நெல் விளைவிககப்படவில்லை. இது பற்றி இந்நூலில் பின்வருமாறு கூறப்படுகின்றது. ''பிரசைகளுககுப் போதும் அளவினதாகிய நெல்விளைவு இன்மையால், வருஷாந்தம் 1,50,00,000 ரூபா விலை பெற்ற நெல்லும்அரிசியும் இலங்கையில் வந்து இறககுமதியாகின்றன''.

## வேளாண்மை

இந்நூலில் வேளாண்மை பற்றிக கூறியிருப்பது, மிகவும் கூர்ந்து அவதானிககப்படவேண்டும். மககளின் முயற்சிககுறைவும், அரசினரின் ஆதரவின்மையுமே நெல் விளைச்சல் குறைவுககுக காரணம் என்பது இந்நூலில் விளககப்பட்டிருககிறது. நாவலர்அவர்கள் வேளாண்மை அபிவிருத்தியில் அதிக சிரத்தை எடுத்தார் என்பதைஅவர்கள் யாழ்ப்பாண, மட்டககளப்பு வர்த்தகவேளாண்மைச் சங்கத்தில் பங்குகள் வாங்கியதிலிருந்தும் அதுபற்றிப் பிரசாரம் செய்ததிலுமிருந்து நாமறியலாம், இதன் விபரங்களை திரு. ச. தனஞ்சயராசசிங்கம் எழுதிய ''நாவலர் பணிகள்'' என்னும் நூலில் காணலாம். (பககங்கள் 50—52).

வேளாண்மைபற்றி இந்நூலில் கூறப்படும் பகுதியை வாசிககும்பொழுது நாவலர் அவர்களே இந்நூலை எழுதினுரென்பது நன்கு புலப்படுகின்றது. அப்பகுதி பின்வருமாறு:-

(14-ம் பக்கம் பார்க்க)

# வல்லடி வழக்கில் வள்ளுவர்

**மாத்தளை வள்ளுவர் மன்றத்தினர் இம் மாதம் 6-ம் திகதி மாத்தளையில் வள்ளுவர் விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடினர். விழாவின் ஒரு நிகழ்ச்சியான பட்டி மன்றத்தைப்பற்றிய ஒரு நோக்கு இது.**

**—(ஆசிரியர்)**

அபிப்பிராய மோதல் வளர்ச்சிக்கு அறிகுறி என்பார்கள். மாறுபட்ட கருத்துக்கள் மல்லிடும்போதுதான் 'மெய்ப்பொருள்' வெளியாகின்றதாம். ஆனுல் சில வேளைகளில் வாதம் அறியாமையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துவிடுவதுண்டு. Argument is a sign of ignorance என்பது ஆங்கிலப் பழமொழியல்லவா? இவ்வாறு முரண்பாடான திசைகளில் சிந்தனை குதறிப்பாய்வதற்குக் காரணம் அண்மையில் மாத்தளை திருக்குறள் மகாநாட்டில் நடந்த சொற்போர்தான்.

இந்தியாவின் பட்டிமன்றங்களைப் போன்று இங்கேயும் சொற்போர்களுக்கு மவுசு ஏற்பட்டு வருவதை வரவேற்கத்தான் வேண்டும்.

போர்களின் பட்டியலில் வைக்கோற்போரும் சேர்க்கப்பட்டிருப்பது இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. அந்த மகத்தான பணியைச் செய்தவர் காலஞ்சென்ற கலைவாணரல்லவா? 'வைக்கோற்போர்' என்னெஸ்கேயின் நகைச்சுவைக் கண்டுபிடிப்பு. மாத்தளை திருக்குறள் மகாநாட்டுச் சொற்போர் எல்லோரையும் குடல் குலுங்கச்செய்த ஓர் 'நகைச்சுவை' விருந்து.

விவாதம் குறளைப்பற்றித்தான் என்பதைச் சொல்லத்தேவையில்லையே? 'குறள் தத்துவநூலா அல்லது சட்ட நூலா' என்பதுதான் விவாதத்தலைப்பு. விவாதத்தில் மோதிக் கொண்டவர்கள் மாத்தளை வள்ளுவர் மன்றத்தினரும் கொழும்பு தமிழ் மன்றத்தினரும். கொழும்புத்தமிழ் மன்றத்தினர் சார்பில் கலந்துகொண்டவர்களோ சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள். குறள் சட்ட நூல் என்று பிரதிவாதம் செய்தோரும் இவர்களாய்த் தானிருப்பர் என்று நீங்கள் நினைத்தால் உங்கள் ஊகம் சரி.

''எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள்காண்'' போமென்று கருத்தோடு அமர்ந்திருந்த சபையோர் தொகையும் கணிசமானதுதான்.

குறளைப்பற்றி முன்னர் குறிப்பிட்ட தலைப்பில் யாரேனும் வாதிப்பதாய் இருந்தால் அப்படி வாதிப்பதற்கும் ஒரு சில யோக்கியதாம்சங்கள் தேவைஎன்று கூறினுல்அதில் யாரும் குற்றம் காணத் தேவையில்லை; நெற்றிக் கண்ணைத் திறக்கவேண்டிய அவசியமும் இல்லை.

குறள் ஞானம்—இது முதலாவது யோக்கியதாம்சம். அடுத்து தத்துவம் என்ருல் என்ன, சட்டம் என்ருல் என்ன என்பதுபற்றிய அடிப்படை அறிவு. அத்துடன் தத்துவத்துக்கும் சட்டத்துக்கும் உள்ள பேதாபேதம் பற்றிய தெளிவு. இவ்வளவு இருந்தால்தான், குறள் தத்துவ நூலா, சட்ட நூலா என்று ஓரளவுக்காவது அலச முடியும்.

ஆனுல் அன்றைய சொற்போரில் நடந்த அலசல்? அது சும்மா அலசல்தான். (சும்மா என்ற சொல்லைத் தமிழ் அகராதியில் புகுத்திய

(13ம் பககம் பார்க்க)

தம்பி அன் கோ.,

284, K. K. S ரூேட், வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்


நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 8 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 9 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |
| ரூ. 10,000 / -க்கு மேல் | — | வருடம் 12 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(சென்றவாரத் தொடர்ச்சி)

பாக்: மனுசியில பெரிய வாரப்பாடுதான்... அண்ணனுக்கு...

கனக: இல்லாமலே..அதுகளும் இல்லாட்டா.. எங்கட உழைப்பில என்னத்தைச் சீவியம் நடத்தமுடியும். எங்களைப்போல தொழிலாளிகளுக்கு வார மனுசிமார் நல்லதா இருந்திட்டா.. அதுவே பெரிய ஆறுதல்... சுகம் எல்லாம்...இல்லையே கந்தையாண்ணை.

கந்: (பரிவுடன் பாக்கியத்தை நோக்கியவாறு) உண்மைதான் கனகசபை ... அதுசரி...

... நீ நிக்கிறியே...இதில இரு... (தானிருந்த நாற்காலியை விட்டெழுந்து, அவர இருக்க விட்டு விட்டு அவர் தரையில் இருக்கிறார்.)

கன: இல்லையண்ண...நேரமாச்சு... நானும் வீட்ட போகோணும்... நான் வந்த விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகலாம் எண்டுதான் வந்தனான்.

கந்: சரி...சரி போகலாம்...இரு... பிள்ளை... மாமாவுக்கு ஏதும் குடிக்கக் கொண்டா...

கன: சத்தியமா எனக்கொண்டும் இப்ப வேணும் கந்தையாண்ணை... நானும் வீட்ட போய்ச் சாப்பிட வேணும்...

கந்: அப்பசரிபுள்ள... விடு... அவருக்கு ஒண்டும் வேணுமாம்...அது சரிநான் சொன்ன விசயம் என்னாச்சு...

கன: அவை இரண்டாயிரம் தருகினமாம்... ஆனா மாத முதத்தியதியில வட்டிக்காசை ஒழுங்கா கட்டிப் போடோணுமாம்..

கந்: அதைச் செய்யலாம்...(மனைவி பக்கம் திரும்பி) பாக்கியம் கேட்டியே...பூமணிக்கும் நல்ல காலம் வந்திட்டு...

பா: எல்லாம் விடியிறகாலம் வந்தா விடியத்தான் வேணும்..

கன: அப்பசரி... இதைச் சொல்லிவிட்டுப்போகத் தான் வந்தனான்...அதோட இன்னொரு விசயம்...அவையின்ர வட்டி கொஞ்சம் கூடவா இருக்கும்... அதையும் கொஞ்ச யோசனை செய்யுங்க... நான் வரப்போறன்...

[அவர் விடைபெற்றுப்போகிறார். கணவனும், மனைவியும் பலவித பேச்சுக்களில் ஈடுபடுகின்றனர். குழந்தைகளும், பூமணியும் நடுவறைக்குப் போய்விடுகின்றனர். நேரம் கழிந்துகொண்டிருக்கிறது...]

பாக்: (திடீரென்று) புள்ளை... பூமணி... உமாவும் வசந்தாவும் எங்க...

பூ: (குரல் நடு அறையிலிருந்து வருகிறது) அவை சாப்பிட்டுட்டுப் படுத்திட்டினம்... மணியும் படிச்சிட்டுப் படுத்திட்டான்...இப்ப நேரம் ஒம்பதரைக்கு மேலாகிப் போச்சு...

கந்: அப்படியா...நீ சாப்பிட்டியா...

பூ:ஓம்...அம்மா... உங்களுக்கு வேண்டியதெல்லாம் அங்க எடுத்துவைச்சிருக்கு...

பாக்: சரி...சரி...நீ படு...எட...அடுத்த வீட்டு ரேடியோவில நேயர் விருப்பம்கூட தொடங்கிட்டுதா...? அப்ப நேரம் பத்தாச்சு...

கந்: அப்ப நீயும் சாப்பிட்டுட்டு வந்திரன்...பேந்தெப்ப சாப்பிடுறது...

பாக்: இப்ப பசிக்கேல்ல...கொஞ்சம் செல்லச் சாப்பிடலாம்...என்ன உங்களுக்கு நித்திரை வந்தாப் படுங்கோவன்...

[அப்போது—வெளியிலிருந்து 'சந்திரன்...சந்திரன்' என்ற குரல் வருகிறது

கந்: (எழுந்து) யாரது...? இந்த நேரத்தில் சந்திரனைத் தேடுறது...? உள்ளவா... ஆரெண்டு பாப்பம்...

[பிரயாணம் செய்த, களைப்புக்கோலத்தில், 'கிட்பாக்'குடன் ஒருவன் வருகிறான் இளைஞன்.]

கந்: ஆச்சரியத்துடன்) எட...! மணியமே...என்ன இந்த நேரத்தில்...?

மணி: நான் இப்பதான் யாழ்தேவியால வாறன்... கொழும்பில சந்திரனைக் கண்டனான்... அவன் ஒரு விசயம் சொல்லிவிட்டவன்...உங்களிட்ட உடன சொல்லச் சொல்லி...

கந்: என்ன அது...?

மணி: அவர் வந்தவேலை விசயமாத்தான் ஒரு சங்கதி...இப்ப அவர் வந்திருக்கிற வேலை நல்லவேலை நல்ல எதிர்காலமிருக்கு... ஆரம்பத்திலயே...நானூறுக்கு மேல சம்பளம் கொடுப்பாங்க...ஆனா...

கந்: என்ன ஆனா?...

மணி: அந்த வேலைக்கு நேராப்போனா வழியில்லக் காது..பிற்பக்கமா போனா சுபமா வேலை கிடைக்கும்... அதுக்கும் ஒரு நல்ல ஆளிருக்கு...

கந்: (மனச்சலிப்புடன்) அதுக்குக் காசு தேவையா இருக்குமே தம்பி...

மணி: கனக்கக் காசில்லை... ஒரு ஐயாயிரம் இருந்தா 'சுவரா' (Sure) வேலை கிடைக்கும் ஒரு வருஷத்தில் அந்த ஐயாயிரத்தைப்போல எத்தனையோ ஐயாயிரத்தைப் புரட்டக்கூடிய வேலை.

பாக்: (சந்தேகத்தோடு) ஒருவேளை பணத்தையும் வாங்கிக்கொண்டு ஏமாத்திட்டா...

மணி: இந்த ஆள் சந்திரனுக்கு நல்லாத் தெரிஞ்ச ஆள்.. சந்திரனும் குடும்பத்தைப்பற்றி அந்த ஆளுக்குச் சொல்லி இருக்கிறான்போல... அதால...அவர் சொல்லுறார்...வேலை எடுத்துத் தந்தோடன காசு தந்தாப் போதும் எங்கிறார்...அதுதான் எப்படியாவது ... எங்கினையாவது ஒரு ஐயாயிரம்புரட்டிக் கொடுத்திங்க எண்டால் நல்லது... அதாலதான் என்னையே உங்களுட்ட நேரசொல்லி விசத்தையும் தெளிவா விளங்கப்படுத்திச் சொல்லச் சொன்னவன்... அதோட எவ்வளவு கெதியா விசயத்தைக் கொண்டுபோறீங்களோ அவ்வளவு நல்லது...வேறயாராவது இடையில புகுந்து காரியத்தை முடிக்காம...அப்பசரி... நான் வரட்டே... (விடை பெற்றுப் போகிறான்)

[கணவனும் மனைவியும் மீண்டும் விருந்தையில் வந்தமர்கின்றனர்]

பா: என்ன இது...? சாணேற முழம் சறுக்கிற கதையாக இருக்குது...

கந்: பாக்கியம்... நீ ஒண்டுக்கும் கவலைப்படாத... இப்ப நீ போய்ச் சாப்பிட்டுட்டுவா... ஆறுதலாக் கதைப்பம்...சந்திரன் சொல்லிவிட்டதைப் பார்த்தா... இது ஒரு நல்ல வேலையாத்தான் படுகுது... வேலை செய்யிற இடத்திலும் இப்ப காசில்லாட்டி வேலை எடுக்கிறது கஷ்டமெண்டுதான் சொல்லுறாங்கள்... இனி என்ன செய்யிறது...கஷ்டப்பட்டுப் படிப்பிச்சாச்சு... படிச்ச படிப்பைவிடமுடியுமா...என்ன பாடுபட்டாலும் காசோ கடனோபட்டு ஒரு வேலையை எடுத்துக் குடுத்திடோணும்...

பாக்: பாத்தீங்களா... மணியத்தை... இவனும் சந்திரனோடைதான் படிச்சவன்... எஸ். எஸ். சி. பாஸ் பண்ணினோடன கிளறிக்கலில எடுபட்டு வேலைக்குப் போனவன்...இப்ப நல்ல சம்பளத்தில் இருக்கிறான்... அதோட இவ்வளவு வருஷமும் சம்பாதிச்சவா... சந்திரன் படிக்கிறன் படிக்கிறன் எண்டு சொல்ல.. நீங்களும் விடாப்பிடியாக படிப்பிச்சு..கடன்பட்டதுதான் மிச்சம் ...படிச்சவைக்கு வேலை கிடைக்கிறதும் இப்ப கஷ்டமாக் கிடக்குது...

கந்:-ஏன் இப்படிப் பேசுறீர். அவனுக்கு இப்ப வேலை கிடைச்சுட்டுதெண்டா இப்படிப் பேசுவீரே?... பொறும் பொறும்.. காலம் மாறும். அவனுக் கும் கஷ்டத்தோட கஷ்டமா வேலை எடுத்துக் கொடுத்திடோணும் இல்லாட்டி அவன்ரை மனமும் சோர்ந்து போகும். கல்யாணம் கட்டாத பெண்ணும் வேலையில்லாத பட்டதாரியும் இப்ப ஒரே மாதிரித்தான் பெருமூச்சு விட்டுக்கொண்டு திரியினம்.

பாக்:- அது சரியப்பா. காசுக்கு என்ன பண்ணுறது? பூமணியின்ரை கலியாணம் இல்லாட்டி பறுவாயில்ல. நீங்க என்ன மகனுக்காக மகளின்ர கலியாணத்தைத் தள்ளிப்போடப்போறியளா?

கந்:- சீச்சீ.. என்ன விசர்க்கதை பேசுறா. அந்தப் புள்ளையின்ர காதில பட்டாலும் அதுவும் வேதனைப்படும். இல்லையப்பா... கடனோட கடனா அதையும் பாப்பம் எண்ட நினைப்போடதான் பேசினனான். இதென்ன கழுத்துப்போற விஷயமே...முதலில நீர் போய்ச் சாப்பிடும்.

[அவள் போய்விடுகிறாள். அவர் தனித்தவாறு பீடியைப் புகைத்தவாறு காத்திருக்கிறார். வெகுநேரமாகி விட்டதை இருவருமே உணரவில்லை. அவர் குடித்த பீடியை அணைத்து எறியும்போது அவள் வருகிறாள். அவர் அருகே அமர்கிறாள்]

கந்:- என்னப்பா சோர்வாயிருக்கிறீர்? உடம்பெல்லாம் மெலிஞ்சுபோச்சு. நல்ல சாப்பாடும் இல்லை... நாளெல்லாம் பாடுபடுற உமக்கு.

பாக்:- (மகிழ்வுடன்) என்னப்பா இது ஒரு பெண்ணுக்குச் சாப்பாடே பெரிசு... இப்புடி ஒரு நல்ல புருசன் கிடைக்க கொடுத்தெல்லே வைச்சிருக்கோணும்

கந்:- (அவர் நெருங்கி அவள் கன்னத்தைக் கிள்ளி) ஆ... ஆ... [illegible]...?

பாக்:- '[illegible] இருங்க... உ களுக்கு விளை

(14-ம் பக்கம் பார்க்க)

## மூக்கர்கள் சங்கம்

பவேரியாவில் 'உலக மூக்கர்கள் சங்கம்' எனும் சங்கம் ஒன்று உள்ளது. அதிக நீளமான மூக்கு உள்ளவர்களே இதன் உறுப்பினர்கள். 1961-ல் நிறுவப்பட்ட இச்சங்கம் பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளவர்களையும்உறுப்பினராகக் கொண்டுள்ளது. இச்சங்கத்தில் சேருவோருக்கு மூக்கின் நீளம் சுமார் 6 செ. மீ. இருத்தல் வேண்டும். அகலம் குறைந்தது 4 செ. மீ. இருக்கவேண்டும்.

ஏன்டன் எலிமர் என்ற இச்சங்கத்தின் தலைவருடைய மூக்கின் நீளம் எவ்வளவு தெரியுமா? 7. 4 செ. மீட்டர்!

## மீனிலிருந்து விளக்கொளி!

அமெரிக்காவில்வாழும் சிவப்பிந்தியர்கள் ஒருவித மீனைப் பிடிக்கிறார்கள். 'வர்த்தி மீன்' என்று அதற்குப்பெயர் வைத்திருக்கிறார்கள். உண்மையில் அசல் மெழுகு வர்த்தி போலவே அது பயன்படுகிறது. அதன்உடம்பில் ஒருவிதக்கொழுப்பு உண்டு; இதனால் ஒரே நிலையில் வெகுநேரம் அந்த மீன் எரிந்து கொண்டிருக்கும்; முதலில் மீனின் உடம்புக்குள் (வாய் வழியாக) ஒரு திரியைவிட்டு ஏற்றத் தயாராகவைத்துக் கொள்வார்கள்.ஏற்றியதும் விளக்குப்போலவே (வர்த்தி) அதுவும் எரியத் தொடங்கும். சில சமயம் இதைத்தீவட்டியாகவும் கூட உபயோகிக்கிறார்கள்.அப்போது மீனைக் கொழுத்திக் கையில் எடுத்துக்கொள்வார்கள். அது வெகுநேரம் நிலைத்து எரிந்த பின்னர்தான் அணையும்.

## டைரக்டரியில் நாயின் பெயர்

இத்தாலி நாட்டிலுள்ள டெலிபோன் டைரக்டரியில்நாயின் பெயரை அச்சிட்டு இருக்கிறார்கள். வெஸ்டினோ என்ற பெயர் உள்ள மூன்றுவயது நாய் சினிமாவில் நடித்து மிகப் புகழ் பெற்றுள்ளதாம். இந்த நாய்க்கு அடிக்கடி 'போன்' வந்து கொண்டிருக்கிறதாம்.

## கண்ணீர்விடும் மலை

ரஷ்யாவில் ஒரு மலை இருக்கிறது. இந்த மலைக்கு 'பாக்குவாசா' என்று பெயர். இந்தமலையில் திடீரென்று நீர் கசியத் தொடங்கியவுடனே மழைவரும். ரஷ்யர்கள் இந்த மலையைக் 'கண்ணீர்விடும் மலை' எனஅழைக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் —— அரசியல் நிருபர்

# “ஒரு தமிழர் பிரதமராக வரும் ஆபத்து”!

## ஆட்சிமன்றத்தில் பிரதமர்-அமிர் சர்ச்சை

“தமிழரின் ஆதிக்கம் இங்கு வலுத்தால் தொண்டமான் இந்த நாட்டின் பிரதமராகலாம்” என்று எதிர்க்கட்சிக் கூட்டணியைச் சேர்ந்தவரும் அனுராதபுரத் தொகுதிப் பிரதிநிதியுமான திரு. கே. பி. இரத்னயக்கா ஒரு கூட்டத்தில் பேசுகையில் ‘எச்சரிக்கை’ செய்ததாக ஒரு செய்தி கூறுகிறது. இப்படி நமது நாட்டில் அரசியல்வாதிகள் பேசுவது ஆச்சரியமான விஷயமல்ல. ஆனால் சமீபத்தில் தான் வடபகுதிக்கு நல்லெண்ண விஜயம் செய்து திரும்பிய ஒருவர் தமிழரின் ஆதிக்கம்பற்றி அங்கு பேசியிருப்பதுதான் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. இது என்ன நல்லெண்ணமோ?

ஆர். ஜி. சேனநாயக்கா, கே. எம். பி. ராஜரத்தினா ஏன் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் கூட தமிழரின் ஆதிக்கம்பற்றியும் ஒரு தொண்டமான் பிரதமராக வரக்கூடிய ‘ஆபத்து’ பற்றியும் பல இடங்களிலும் எச்சரிக்கை விடுத்தவர்கள் தான். இந்த ‘ஆபத்து’ பற்றி அடுத்த தேர்தல் நெருங்கும் சமயத்தில்தான் அனுராதபுரப் பிரதிநிதிக்குத் தெரிந்திருக்கிறது. இவர்மட்டுமல்ல இன்னும் பலர் ‘தமிழரின் ஆதிக்கம்; ஆபத்து’ பற்றியெல்லாம் பேசுவதற்குத் தயாராகிக்கொண்டிருப்பார்களென்பது நிச்சயம். எத்தனை இரகசிய ஒப்பந்தங்கள், எத்தனை இரகசியப் பேச்சுவார்த்தைகள்பற்றியெல்லாம் தகவல்கள் வெளிவரும். ஒருவருக்கொருவர் மேடைகளில் சவால்விடுவதும், சவால், பதில் சவால் இப்படிப் பல விஷயங்களைக் கேட்கவும் பார்க்கவும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. வழமையான தேர்தல் நாடகம் தான். இந்த நாடகத்தின் நடிகர்களுக்கும் இதைப் பார்க்கும் ரசிகர்களுக்கும் இது அலுத்துப்போவதில்லை.

ஆட்சிமன்றத்தில் இதற்கான முதல் ஒத்திகை ஆரம்பமாகியிருக்கிறதென்று சொல்லலாம். சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது நடைபெற்றுவரும் விவாதத்தில் தமிழரசுக்கட்சியின்பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியுமான திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், போதனாமொழிப் பிரச்னைபற்றி (தமிழரசுக்கட்சி அரசாங்கத்தில் சேர்ந்திருந்த காலத்தில்) ஆளும் கட்சிக் குழுக் கூட்டத்தில் நடந்த சம்பவம்பற்றியும் பிரதமருக்கும் தமிழரசாருக்குமிடையில நடந்த பேச்சுவார்த்தைகள்பற்றியும்குறிப்பிட்டபோது பிரதமருக்கும் அமிர்தலிங்கத்துக்குமிடையில வாக்குவாதமும் நடைபெற்றிருக்கிறது. “அந்தப் பேச்சுவார்த்தைகள்பற்றிமட்டுமல்ல, வேறு பேச்சுவார்த்தைகள் பற்றியும் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீதான விவாதத்துக்குப் பதிலளிக்கையில தெரிவிப்பதாகப் பிரதமர் கூறியிருக்கிறார். இதன் பின்னர் பிரதமரின் குறுக்கீடுகளுக்கு அமிர்தலிங்கம் இடம் கொடுக்கவில்லை

அந்தப் பேச்சுவார்த்தைகள்பற்றிமட்டுமல்ல, வேறு பேச்சுவார்த்தைகள்பற்றியும் சொல்லப்போவதாகப் பிரதமர் கூறியது மிரட்டலா; அல்லது உள் இரகசியங்கள் என்று சொல்லி அவற்றை அம்பலப்படுத்தி எதிர்க்கட்சியினருக்கும் அதே சமயம் தம்முடன் சேர்ந்திருந்துவிட்டுப்பிரிந்த தமிழரசாருக்கும் முடிச்சுப்போட்டு ‘ஒரு கலலில இரண்டு மாங்காயை’ விழுத்துவதற்கான திட்டமா? இன்னும் இரண்டு மூன்று தினங்கள் பொறுத்திருப்போமே!

அது சரி; தமிழர் ஒருவர் இங்கு பிரதமராக வரக்கூடாதா; அதற்குத் தடைச்சட்டம் ஏதும் உண்டா அலலது தமிழர் ஒருவர் பிரதமரானல பூமி தாங்காதா?

# நம்பலாம் டாந்தது!

### துரதிருஷ்டம் வாய்ந்த எண்

லண்டனிலுள்ள கிரிஸ்ட் சேர்ச் நகரத்தில் எந்த வீதியிலும் பதின்மூன்ரும் எண்ணுள்ள வீட்டைக் காண முடியாது, பதின்மூன்று அதிர்ஷ்டமற்ற எண் என்பது அந்த மக்களின் நம்பிக்கை. அந்நகரத்து நகரசபைகூட அதை ஏற்றுக்கொண்டு பதின்மூன்ரும் எண்ணை துரதிருஷ்டம் வாய்ந்த எண்ணுகப் பிரகடனப்படுத்திவிட்டது.

0 0 0

### சமையலில் ஆண் முதல்

ஒக்ஸ்போர்ட்ஷைர் என்ற இடத்தில் ஆண்களும் பெண்களும் கலந்து கொள்ளும் சமையல் போட்டியொன்று நடைபெற்றது இப்போட்டியில் எண்பது வயதுடைய ஓர் ஆணே முதலாவது பரிசைப் பெற்ருர்.

0 0 0

### விருந்து காத்தது

துருக்கியிலுள்ள ஆஜா பஜாரி என்ற இடத்தில் ஒருவர் ஒருபெரிய விருந்து நடத்தினர். இந்த விருந்துக்கு கிராமத்திலுள்ள அனைவரும் அழைக்கப்பட்டனர். ஏழேஏழுபேரைத்தவிர மற்றவர்கள் அனைவரும் அழைப்பை ஏற்று விருந்துக்குப் போய்விட்டனர்

விருந்து நடந்துகொண்டிருந்தது. திடீரென்றுபூகம்பம் ஏற்பட்டது. அந்தப் பூகம்பத்தில் விருந்துக்குச் செல்ல மறுத்து வீடுகளில் நின்றுகொண்ட ஏழுபேரும் தான் இறந்தனர். விருந்துக்குச் சென்றவர்கள் ஒருவராவது காயம்கூடப் படவில்லையாம்.

### சங்கம் விலக்கியது

விவாகரத்துச் செய்து கொண்டவர்கள் அங்கம் வகிக்கும் டைவேஸி கிளப் என்று ஒருசங்கம் இங்கிலாந்திலுள்ள ரீடிங் என்ற பகுதியில் இயங்கிக்கொண்டிருந்தது. இச்சங்கத்தின் தலைவரான ஓர் ஆணும், காரியதரிசியான ஒரு பெண்ணும் திடீரென அச்சங்கத்தால் விலக்கப்பட்டனர். காரணம், இவர்கள் திருமணம் செய்துகொண்டதே யாகும்.

‘மாணவர் மலர்’ இடமின்மையால் இம்முறை வெளிவரவில்லை.

## நாம் அனுபவி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துன்பம் அனுபவிக்கவேண்டியிருக்கிறதே. அதன் காரணம் என்ன? இது மிகவும் சிக்கலான கேள்வியே. ஆனல் அதற்கு ஒருவாறு சமாதானம் கூறலாம்.

மனிதஉயிரின் வாழ்க்கை இந்த உலகில் தோன்றிமறைவதுடன் முடிவடைவதில்லை. உயிரின்காலம் கணக்கிட முடியாதது. உயிர் அழிவற்றது. இவ்வுலகில் அதற்குக் கிடைக்கும் ஒரு உறையே உடல். ஆனல் உயிர் இவ்வுலகில்இந்த உடலில்தோன்றுவதற்குமுன்னர் ஏதோ ஒரு காலககட்டத்தில்தீமை செய்திருந்தால் அதற்கான தண்டனையை இப்பிறவியில் அனுபவிக்கலாம் அல்லவா?

மனித உயிருக்கு முற்பிறப்பு ஒன்று உண்டு என்பதை மேனட்டறிஞர்களும் இன்று ஒப்புக்கொள்கின்றனர். பூர்வஜன்ம ஞாபகம் வரப்பெற்ற எத்தனையோ பேரின் விபரங்களை நாம் பத்திரிகை வாயிலாக அறிந்திருக்கிறோம். மறைமலை அடிகள்போன்ற அறிஞர்களும் உயிரின் சஞ்சாரத்தைப்பற்றியும்அவற்றுடன் தொடர்புகொள்வதுபற்றியும் ஆதாரபூர்வமாக எழுதியிருக்கின்றனர். ஆகையால் இதுபற்றி எவ்வித சந்தேகமும் இருக்க வேண்டியதில்லை.

யாருக்கும் எவ்வித தீங்கும் செய்யாமல் இருக்கும் போதே துன்பத்துக்கு மேல் துன்பமாக ஏற்படும்போது மேற்படி உண்மையை நாம் நினைவுகூர்ந்து ஏதோஒருபிறவியில் நாம்செய்ததீவினைக்கு இப்போது ‘இறைவன் அளிக்கும் தண்டனை இவை என்று மனதைத் தேற்றிக் கொள்வோமாக.

நாம் துன்பம் அனுபவிக்க அனுபவிக்க நமது பாவங்கள் கரைந்து கரைந்துமறைகின்றன என்று மகிழ்வோமாக.

# விண்வெளி ஆராய்ச்சிக்கு வித்திட்ட விஞ்ஞானிகள்

**1944-ம்** ஆண்டு செப்டம்பர் 8-ம் திகதி, மாலை 6-38 மணி.

நெதர்லண்ட்ஸ் என்ற ஒல்லாந்தின் தலைநகரான ஹேக்குக்கு அருகாமையிலுள்ள ஓர் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஜேர்மன்விஞ்ஞானிகளும் இராணுவத் தலைவர்களும் இங்கிலாந்தின் மீது ஏவுகணைகளை அனுப்புவதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள். குறிப்பிட்ட நேரம் வந்ததும் ஒரு சிறிய பொத்தானை அழுத்தினர்கள். அடுத்தகணம் 46அடி நீளமான வீ-2 ரொக்கட் விர்ரென்று புறப்பட்டு வடகடலைக் கடந்து சுமார் 250 மைல்களுக்கப்பாலிருந்த லண்டன் நகரை அடைந்து அதன் புறப்பேட்டைகளில் ஒன்ருகிய சிஸ்விக்கில் எட்டு வீடுகளை துப்புரவாக நிர்மூலம் செய்து மேலும் ஐம்பது வீடுகளை சேதப்படுத்தியது.

ஜேர்மனி இந்த ஆயுதத்தை ஆறுமாதங்களுக்கு முன்பே கண்டு பிடித்திருந்தால் நேசநாடுகள் ஐரோப்பா மீது படையெடுப்பது முடியாத காரியமாகிவிடும் என்று நேசதேச சேனபதி ஜெனரல் ஐஸன்ஹோவரே பிரமித்தார் இரண்டாவது உலகயுத்தத்தின் போக்கே மாறியிருக்கும்.

விண்வெளி ஆராய்ச்சிக்கும் சந்திரமண்டல பிரயாணத்துக்கும் அடிகோலியது இந்த வீ-2 ரொக்கட்தான்.

யுத்தம் முடிந்து ஜேர்மனி தோல்வியுற்றதும் அமெரிக்க இராணுவவீரர்கள் ரொக்கட் ஆராய்ச்சி நிலையங்களில் வேலைபார்த்த ஜேர்மன்விஞ்ஞானிகளையும், மீதியிருந்த ரொக்கட் உதிரிப்பாகங்களையும் கைது செய்து அப்படியே அமெரிக்காவுக்கு கப்பல் அனுப்பினர்கள். வீ-2 ரொக்கட்டின் ஆதி கர்த்தா டாக்டர் வொன் பிரோனும் அமெரிக்கா சேர்ந்தார்.

[ சுப்புடு ]

அங்கே அவரும் அவருடைய உதவியாளர்களும் புனைந்த சற்றேறன் ரொக்கட்தான் இன்று அமெரிக்கவிண்வெளி வீரர்களை சந்திரனுக்கு அனுப்பியுள்ளது.

ஜேர்மனியின் இன்னெரு பாகத்தை ரஷ்யா கைப்பற்றியதல்லவா? அங்கிருந்த ஜேர்மன் விஞ்ஞானிகளையும் தளபாடங்களையும் சோவியத் இராணுவம் கைது செய்து ரஷ்யாவுக்கு கொண்டுபோயிற்று. அங்கும் விண்வெளி ஆராய்ச்சிகள் நடைபெற்றன. விண்வெளி பயணத்துக்கு இன்று அமெரிக்காவும் ரஷ்யாவும் போட்டியிடுகின்றன. உண்மையில் இதற்கு பின்னணியில் நிற்பவர்கள் ஜேர்மன் விஞ்ஞானிகளே!

மனிதன் மண்ணில் தோன்றி ஆறறிவு படைத்த காலம் முதல் ஆகாயத்தில் பவனிவரும் சூரியசந்திரர்களையும் தாரகைகளையும் பற்றி ஆராய்ச்சிகள் செய்து வந்திருக்கிறான். இவையெல்லாம் தெய்வசொரூபங்கள் என்று ஒரு காலத்தில்நினைத்தவர்கள் பின்பு சிசரோ, கொப்பர்னிக்கஸ், கலிலியோ, கெப்லர், நியூட்டன் முதலிய அறிஞர்கள் மூலமாக பூமியைச் சூரியன் முதலாம் கோள்கள் சுற்றிவருவதில்லை என்பதையும், சூரியனைச் சுற்றியே மற்ற கிரகங்கள் சுற்றுகின்றன என்பதையும், சூரியனைப்போல வேறும் பல நட்சத்திரங்கள் பிரபஞ்சத்தில் உலவுகின்றன என்பதையும் உண்மையென்று உணர்ந்தார்கள்.

ஜூல்ஸ், வேர்ன், எச். ஜி. வெல்ஸ், டுமாஸ் போன்ற மேனட்டு கதாசிரியர்கள் தங்கள் கற்பனையில் சந்திர உலகத்தையும் பிறஉலகங்களையும் வர்ணனை செய்தார்கள். நாரதர் பதினன்குஉலகங்களிலும் சஞ்சரித்தார் என்றும், எடையில்லாத நிலையில் மனிதன் மேலும் கீழும் போகமுடியாத ஒரு திரிசங்கு சுவர்க்கம் இருந்ததென்றும் நமது புராணக் கதைகளும் கூறுகின்றன.

0 0 0

விண்வெளி ஆராய்ச்சிகளும் பிரயாணங்களும் முதன்முதலாக 1957-ம் ஆண்டு அக்டோபர் 4-ம் திகதி ரஷ்யாவினல் ஆரம்பிக்கப்பட்டன. ஸ்புட்னிக்-1 சுமார் 90 நிமிடங்களுக்கு ஒரு தடவை வானவெளியில் பூமியை வலம்வந்தது. ஸ்புட்னிக்-2 நவம்பர்மாதத்தில் கிளம்பி பூமியை வலம் வந்தபோது அதில் முதலாவது பூமிப்பிரயாணி ‘லைக்கா’ என்ற நாய் இருந்தது. பூமியின் ஆகர்ஷண சக்தியைத்தாண்டி அப்பால் சென்ற லூனு-1, 1959-ம் ஆண்டு ஜனவரியில் பறந்தது. 1960-ம் ஆண்டு ஆகஸ்டில் இரண்டு நாட்கள் விண்வெளியை சுற்றி திரும்பி வந்தன.

1961-ம் ஆண்டு ஏப்ரில் 12-ம் திகதி ரஷ்ய வீரன் யூரிககாரின் வொஸ்டொக்-1 என்ற விண்வெளிக் கலத்தில் உலகத்தை வலம் வந்து ஒரு பெரும் சாதனையை நிறைவேற்றினர்.

1963-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் வலன்றினு ரெறெஸ்கோவா என்ற ரஷ்யப்பெண்மணி முதன் முதலாக வொஸ்டொக்-6 என்ற விண்வெளிக்கலத்தில் பூமியை வலம் வந்தார்.

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் அலெக்ஸி லெயொனவ் என்ற ரஷ்யர் முதன் முதலாக திரிசங்குசுவர்க்கம் என்ற எடையில்லாத சூனியத்தில் நடந்துசென்றுகாட்டினர்.


1958 ஜனவரியில் அமெரிக்கா அனுப்பிய எக்ஸ்புளோரர் பூமியை வலம் வந்தது. 1962-ம் ஆண்டு ஜோன் கிளென் என்றஅமெரிக்கர் மூன்று தடவை பூமியை வலம் வந்தார்.

இப்படியே அமெரிக்காவும் ரஷ்யாவும் விண்வெளி ஆராய்ச்சியிலும் சந்திர மண்டல யாத்திரையிலும் ஒன்றேடொன்று போட்டி போட்டுக்கொண்டு சாதனைகளை நிகழ்த்திவருகின்றன.

இப்பொழுது அமெரிக்க வீரர் மூவர் சந்திரனில் இறங்கத்திட்டமிட்டு போயிருக்கிறார்கள். இதற்கிடையில் ரஷ்யா ஓர் ஆளில்லாத கலத்தை சந்திரனுக்கு விட்டு அங்கிருந்து மண், கல் முதலியவற்றை பூமிக்கு கொண்டுவரப்போகிறதாம்.

இந்தப் போட்டியில் யார் வெற்றிபெறப்போகிறார்கள் என்பதை இன்று அல்லது நாளை தெரிந்துவிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போலந்து நாட்டின் மாணவர் சமுதாயம்

O போலந்து நாட்டில் கல்விநிலையங்கள் நிறைய உள்ள நகரங்களில், போலந்து நாட்டின் தலைநகரான வார்ஸோ தலைமை வகிக்கிறது. இங்கே 12 பாடசாலை 65,000 மாணவர்கள் படிக்கின்றனர். அடுத்து வருவது புராதனத்தலைநகரான கிரக்கோ: 11 பாடசாலைகள் 47,000 மாணவர்கள். ரொக்லோ, பொஸ்நான் என்றழைக்கப்படும் இரு நகர்களிலும் 16 பாடசாலைகள். படிக்கும் மாணவர்கள் தொகை: 60,000.

O போலந்து நாட்டின் மாணவர் சமுதாயத்தில் மூன்றிலொரு பங்கினர் (116,000) பெண்களே. சமூகஇயல் படிப்போரில் 70 சதவிகிதம் பெண்களே. மருத்துவத்திலும் (64 சதவிகிதம்), விஞ்ஞானத்திலும் (58 சதவிகிதம்) முன்னணி வகிப்பவர் பெண்களே. பொருளாதாரத்துறையிலும், கலைத்துறையிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமாக இருக்கும் பெண்கள் தொழில் நுட்பத் துறையில் மட்டும்தான் ஆண்களைவிட குறைந்த தொகையினராக (20 சதவிகிதம்) இருக்கின்றனர்.

O இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குமுன் நாடெங்கிலும் 40 மாணவர் விடுதிகளே இருந்தன. இப்பொழுதோ 222 மாணவர் விடுதிகளில் 50 சதவிகிதமான மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர்.

O பல்கலைக்கழகக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ந்து உயர்கல்விபெற 'ஸ்காலர்ஷிப்' வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. இந்த ஆண்டில் சுமார் 95,000 மாணவர்கள் ஸ்காலர்ஷிப் பெற்றிருக்கின்றனர் என்றால் பாருங்களேன்!

O நாடெங்கிலும் உள்ள மாணவர் சுகாதார சேவை வசதிகள், மாணவர்கள் சமுதாயத்தை நோய்வாய்ப்படாமல் தக்கமுறையில் பாதுகாத்து வருகின்றன. மாணவர்களுக்கென்றே தனி மருத்துவமனைகளும், ஓய்வு விடுதிகளும் நிறுவப்பட்டுள்ளன.





**மேரி கியூரி (1867—1934)** — ரேடியத்தைக் கண்டுபிடித்து நோபல்பரிசு பெற்ற போலந்து நாட்டு விஞ்ஞானி. போலந்தில் படித்துப்பட்டம் பெற்றபின் சில காலம் பாடசாலை ஆசிரியையாகக் கடமையாற்றிவிட்டு, 1891ம் ஆண்டில் பிரான்சு நாட்டிற்குச் சென்று ஆராய்ச்சிகள் செய்து, 1898ம் ஆண்டில்கணவருடன் சேர்ந்து பொலோனியம், ரேடியம் ஆகியவற்றைக் கண்டுபிடித்தனர். 1903ம் ஆண்டு இருவருக்கும் கூட்டாக நோபல் பரிசு வழங்கப்பட்டது. 1906ம் ஆண்டு கணவரின் மறைவுக்குப்பின், சோர்போன் பல்கலைக்கழகத்தின் பௌதிகப் பிரிவுக்குத் தலைமை தாங்கி, பல ஆராய்ச்சிகள் செய்து, 1911ம் ஆண்டு இரண்டாம் முறையாக நோபெல் பரிசுபெற்ருர் இந்தப் போலந்து நாட்டுப் பெண்மணி மேரி கியூரி அம்மையார்.

**நிக்கலஸ் சோப்பர் நிக்சஸ் (1473—1543)** — போலந்தின் தலைசிறந்த அறிவாளி. பிரபஞ்சம்பற்றி ஒரு கோட்பாட்டை உருவாக்கியவர். வானவியல் நிபுணர், கணிதாசிரியர், பொருளாதார அறிஞர். வானத்தை ஆராய்ந்து பல நூல்களை எழுதியுள்ளார்.

# வெள்ளிவிழாக் காணு

**1969-ல்** போலந்து மக்கள் குடியரசின் இருபத்தைந்தாண்டுநிறைவு விழாவைக் கொண்டாடும் இவ்வாண்டில் போலந்து நாட்டில் 1944க்கும் 1969க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் ஏற்பட்ட அடிப்படை சமுதாய பொருளாதார மாற்றங்களை ஓரளவுக்கேனும் கணிப்பிட்டுப் பார்த்தல் நல்லதே.

இதுவரை ஈட்டியுள்ள சாதனைகளில் மகத்தானது எது எது என்பதை அறுதியிட்டுக் கூறுதல் சுலபமான காரியமல்ல. இது ஒருபுறமிருக்க தொழிலுற்பத்தி தேசியமயமாக்கம், நிலச்சீர்திருத்தம், மேற்கு வடக்கு எல்லைகளின் புனருத்தாரணம் முதலானவை உட்பட அடிப்படை சமுதாய பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வந்தமைதான் மிகப் பிரதானமான சாதனையாகும். மீட்கப்பட்ட எல்லைகளை நாட்டின் ஏனைய பகுதிகளோடு அங்கபூர்வமாக இணைத்தமையும், அவற்றைப் புனருத்தாரணம் செய்தமையும் நமது தலைமுறையினரின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். குறுகிய காலகட்டத்துக்குள் அமுலாக்கம் செய்யப்பட்ட அடுஞ்சாதனை இது.

### இருபத்தைந்துஆண்டு கால வளர்ச்சி

கடந்தஇருபத்தைந்தாண்டுகளாகபோலந்து பீடுநடைபோட்டு வந்துள்ள பாதை, அதனை உயர்ந்த பொருளாதாரத்தரம் மிகுந்த நாடுகளுக்கு வெகு அருகாமையிலிட்டுச் செல்லும் பாதையாகும். ஒரு காலத்தில் உற்பத்தி அபிவிருத்தி குன்றிய விவசாய நாடாக இருந்த போலந்தில் இன்று உற்பத்தித்தொழில் அசுர ஸ்தானம் பெற்றுள்ளது. நாட்டின் தேசிய வருவாய்க்கு உற்பத்தித்தொழில் செலுத்தும் பங்கு கணிசமான அளவு உயர்ந்துள்ளது. 1947-ம் ஆண்டு 37 சதவிகிதமாக இருந்த இப்பங்கு இப்பொழுது கிட்டத்தட்ட 53சதவிகிதமாக உயர்ந்துள்ளது. நாடு, தொழில்மயமாக்கப்பட்டதன் விளைவாக அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் போலந்துக்குமிடையே காணப்பட்ட சமனற்ற தன்மை வெகுவாகக் குறைந்துவிட்டது. அதே நேரத்தில் நாட்டின் பொருளாதார, அரசியல் தரங்களும் எவ்வளவோ உயர்ந்துவிட்டன.

தொழிலுற்பத்தி மயமாக்கம் போலந்தின் பொருளாதார வளர்ச்சியை முடுக்கிவிட்டது மட்டுமல்லாமல் சமுதாய, பொருளாதார உறவுகளிலும் பல அடிப்படை மாற்றங்களை உண்டு பண்ணின. நகர்ப் பிரதேசங்களைப் பெருக்குவதற்கான துரித வேகத்தை முடுக்கிவிடும் பிரதான அம்சங்களில் ஒன்ருகவும் அது விளங்கியது. இன்று போலந்தின் ஜனத்தொகையில் பாதிக்கும் அதிகமானோர் நகர்ப்புறங்களிலேயே வசிக்கின்றனர். ஆனல் 1946ல் நகர்ப் பிரதேசங்களின் ஜனத்தொகை 32 சதவிகிதம் மட்டுமே. அதேநேரம் 100,000க்கும் அதிகமான பிரஜைகளைக்கொண்ட நகரங்கள் 11ல் இருந்து 26ஆகப் பெருகின.

4 தானியவகைகளின் உற்பத்தி ஹெக்டர் ஒன்றுக்கு 19.5 குயின்ட்டல்கள் (குயின்ட்டல் — 220 ருத்தல்) ஆகும். 1946ம் ஆண்டிலோ இவற்றின் உற்பத்தி 9.0 குயின்ட்டல்கள் மாத்திரமே. அதேபோல் உருளைக்கிழங்கு உற்பத்தியும் ஹெக்டர் ஒன்றுக்கு 167 குயின்ட்டல்களாகவும் கரும்பு உற்பத்தி 176 குயின்ட்டல்களிலிருந்து ஒரு ஹெக்டருக்கு 320 குயின்ட்டல்களாகவும் பெருகின. ஒவ்வொரு 100 ஹெக்டர் பயிர் நிலத்துக்கும் மந்தைகளின்தொகை 19.1ல் இருந்து 56.0 ஆகப் பெருகியது. பன்றிகளின் தொகையும் 13.1ல் இருந்து 73.2 ஆகப் பெருகியது. உரவிநியோகமும் ஒரு ஹெக்டர் பயிர் நிலத்திற்கு 111 கிலோகிராம் ஆக உயர்ந்தது 1946ம் ஆண்டிலோ ஒரு ஹெக்டர் பயிர் நிலத்திற்கு 8.9 கிலோகிராம் மாத்திரமே கிடைக்கக்கூடியதாக இருந்தது. 1945ம் ஆண்டில் 2 சதவிகிதமான பண்ணைகளுக்கு மட்டுமே மின்சார வசதியிருந்தது. ஆனல் 1969ம் ஆண்டிலோ 85 சதவிகிதமான பண்ணைகளுக்கு மட்டுமே மின்சார வசதிகள் உண்டு.

இன்னெருதுறை இ...
இன்று ஒவ்வொரு ஆ...
பேருக்கும் 175 சலவை...
திரங்களும், 125 ...
விஷன் செட்டுகளும், ...
குளிர்சாதனப் பெட்டி...
உண்டு. 1956-ம் ...
டிலோ ஒவ்வொரு மூ...
ரம்பேருக்கும் ஒரு ...
விஷன்செட்டும், ஒரு ...
சாதனப்பெட்டியும், ...
வொரு ஆயிரம்பேரு...
3.5 சலவை யந்திரங்...
மாத்திரமே காணப்பட்...
மோட்டார் மயப்படு...
முயற்சியின்விளைவாக ...
தானமாக மோட்டார் ...
கிள்வண்டிகள் பெரு...
இன்றுபோலந்தில்16 ல...
மோட்டார் சைக்கிள் வ...
கள் காணப்படுகின்...
ஒவ்வொருஆயிரம் பிர...
ளுக்கும் 54 மோட்...
சைக்கிள்கள் உள்ளதை ...
பிட்டுப்பார்த்தால்இத்...
யில் ஐரோப்பாவிலே...
தான ஸ்தானம் வகி...

# போலந்து மக்கள்

### வேலையில்லாத் திண்டாட்டம் இல்லவே இல்லை

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக் கட்டியதோடு, ஒரு நூற்ருண்டு கிழடு தட்டிப்போன பழம் பிரச்னையான நாட்டுப்பிராந்தியங்களின் சன நெருக்கடிப் பிரச்னைக்கும் தீர்வு காணப்பட்டமையும் இருபத்தைந்து ஆண்டுகால சாதனைகளில் சிறப்பான தொன்ருகும். நிலச்சீர்திருத்தம், மேற்கு- வடக்கு எல்லைகளின் புனருத்தாரணம், நாட்டின் தொழிலுற்பத்தி மயமாக்கம் ஆகியனவே விவசாய இடநெருக்கடிப் பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கு அனுகூலமாயமைந்த அடிப்படை அம்சங்களாகும். இவற்ருேடு1956-ம் ஆண்டு கடைப்பிடிக்கப்பட்ட விவசாயக் கொள்கையும் சேர்ந்து விவசாய உற்பத்தியின் அமோக வளர்ச்சிகளும், நாட்டுப்புற மக்களது வாழ்க்கைத்தர உயர்வுக்கும் அடித்தளமமைத்துக்கொடுத்தன.

கடந்த நாலாண்டுகளில் (1965—1968) பிரதான

### விவசாயத்திற்கு நவீன கருவிகள்

விவசாயத்திற்கு உற்பத்தி சாதனங்களையும், நவீன கருவிகளையும் வழங்குவதன் மூலமாகவும், இவை தேவையைச் சமாளிப்பதற்கு இன்னும் பற்ருக்குறையாக இருந்தபோதிலும்கூட விவசாய வட்டங்களை விஸ்தரிப்பதன் மூலமாகவும், ஒப்பந்தமூலமாக வாங்கும் முறையை அபிவிருத்தி செய்வதன் மூலமாகவும், இவைபோன்ற இன்னபிற நடவடிக்கைகள் மூலமாகவும் தனிமைப்பட்டு ஒதுங்கிக் கிடந்த விவசாயி நாட்டின் பொருளாதார வாழ்க்கையில் பெரிதும் பங்கு பற்றுதற்கு வழி பிறந்துள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் காரணமாக தனிநபருக்கான பண்ட விநியோகத்திலும் பெரும் வளர்ச்சியேற்பட்டுள்ளது. இன்று புள்ளிவிபரப்படியான ஒரு போலந்தியரின் சராசரி உணவு நாளொன்றுக்கு 3,300 கலோரிஸ்களாகும். யுத்தத்திற்கு முன்னர் கிடைத்ததோ 2860 கலோரிஸ்கள்தான். 1947ம் ஆண்டில் கிடைத்ததோ 2,360 கலோரிஸ்கள்தான். உணவில் மூன்று மடங்கு அதிகமானசீனியும், மூன்றுமடங்கு அதிகமான இறைச்சியும் மிருகக் கொழுப்பும், 50சதவிகிதமான பாலும் பாலுற்பத்திப் பொருட்களும், சிறிது குறைவான தானியங்களும் யுத்த காலங்களிற் கிடைத்ததைவிடக் குறைவான உருளைக்கிழங்குகளும் அடங்குகின்றன. உணவின் போஷாக்குச் சக்தியில் ஏற்பட்டுள்ள விருத்தியையே இது பிரத்தியட்சமாகக் காட்டுகின்றது.

### வாழ்க்கைக்கான வசதிகள்

யுத்தத்துக்கு முந்திய போலந்துடன் மட்டுமல்லாமல், கடந்த தசாப்தத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால்கூட புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டுள்ள

நாடுகளில்போலந்தும்...
வீட்டு வசதிகளை அபி...
த்திசெய்வது ஒருபுறமிரு...
வீட்டுச்சந்தையில் பல...
வீட்டுச்சாமான்கள் ...
தமை மக்களது வாழ்க்...
போக்கில் வரவேற்கத்...
தொரு மாற்றத்தை ...
படுத்திவிட்டன. ஐம்...



சர்வதேச தொழி...
வர்க்க இயக்கத்தின் ...
யஸ்தராகக் கருதப்...
வரும் போலந்து தொ...
லாள வர்க்க இயக்கத்...
தலைவருமான திரு. ...
டிஸ்லோகுமோல்கா போ...
தின் உள்நாட்டு வெளி...
டுக் கொள்கைகள் நி...
யிப்பதில் முக்கிய பி...
ராக விளங்குகிருர். 19...
வருடம் முதல் போல...
கம்யூனிஸ்ட் கட்சியில் ...
பட்டு உழைத்துவரும் ...
புரட்சிகர செயல்களு...
சிறைவாசமுமிருந்தி ரு...
ருர்.

களின்போது பெரும்ப...
முழுவருவாயுமே ...
தேவையான உட்கொ...
பொருட்களின் வள...
காக, பிரதானமாக ...
வளர்ச்சிக்காகச் செல...
பட்டது. தற்பொழுது ...
சாதனப்பெட்டி, ...
விஷன், மோட்டார் ...
னங்கள் ஆகியவற்றை ...
குவதற்கான சாத்திய...
கள் உண்டாகிவிட்...
யால் குடும்பங்கள் ...
றைப் பெறுவதற்க...
பணம் சேமிக்கின்...
பொருளாதார நிபுண...
கூட மூக்கில் விரலை...
அளவுக்குபோலந்து ...
வங்கியில் பணம் ...
தில் அசுரவளர்ச்சி ...
படுவதன் ரகசிய...
இதுவேதான்.

### போலந்தின் வெளிநாட்டுக் கொள்கை

**போ**லந்தின் வெளிநாட்டுக்கொள்கை சோவியத் யூனியனேடும், மற்றும் சோஷலிஸ நாடுகளோடும் நட்புறவினதும் உடன்பாட்டினதும் அடிப்படையிலும் எல்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கும் ஆதரவு, கலோனியல் நவகலோனியல் அடக்குமுறைகளுக்கெதிராகப் போராடும் நாடுகளுக்கு ஆதரவு, முதலாளித்துவ நாடுகளோடு சமாதான சகஜீவனக் கொள்கைக்கு ஆதரவு என்பவற்றின் அடிப்படையிலும் அமைந்ததாகும்,

வியட்நாம்மீது அமெரிக்க ஆக்கிரமிப்பை போலந்து வன்மையாகக் கண்டிக்கிறது. ஆக்கிரமிக்கப்பட்ட நாடு விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் நடத்தும் ... போராட்டத்திற்கு ஆதரவளிக்கின்றது போலந்து.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கெதிராக அரபு உலகம் நடத்தும் போராட்டத்தையும் போலந்து பூரணமாக ஆதரிக்கின்றது

போலந்து ஓர் ஐரோப்பியநாடு என்ற முறையில் குறிப்பாக ஐரோப்பிய கண்டத்தில் உள்ள ராஜ்யங்கள் மத்தியில் பலமுகப்பட்ட பரஸ்பர ஒத்துழைப்பையும், பாதுகாப்புப் பந்தோபஸ்தையும் உறுதிப்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ளது. ஐரோப்பிய பாதுகாப்பு மகாநாடொன்றைக் கூட்டுவதற்காக 1964ம் ஆண்டிலேயே குரலெழுப்பியது போலந்து.

ஐரோப்பாவில் நிரந்தரமான பாதுகாப்புப் பந்தோபஸ்தையும், ஸ்திரத் தன்மையையும் நோக்கமாகக் கொண்டதோர் வேலைத்திட்டம் போலந்தின் வருங்கால வெளிநாட்டுக் கொள்கைக்கு உறுதுணையாய் நிற்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ம்

இ தோ.
ரு ஆயிரம்
சலவை யந்
25 டெலி
களும், 61
பெட்டிகளும்
-ம் ஆண்
ரு மூவாயி
ஒரு டெலி
ஒரு குளிர்
யும், ஓவ்
ம்பேருக்கும்
ந்திரங்களும்
னப்பட்டன.
பப்படுத்தும்
வாக பிர
ட்டார் சைக்
பெருகின.
ல்16 லட்சம்
க்கிள் வண்டி
கின்றன.
ம் பிரஜைக
மோட்டார்
ளதை ஒப்
ல்இத்துறை
விலேயே பிர
வகிக்கும்

ளி

ந்தும்ஒன்று.
ள அபிவிரு
புறமிருக்க,
ல் பலவேறு
ள் குவிந்
வாழ்க்கைப்
வற்கத்தக்க
ந்தை ஏற்
ஐம்பதுக்



தாழிலாளர்
த்தின் முக்கி
கருதப்பட்டு
து தொழி
இயக்கத்தின்
திரு. விலா
ல்கா போலந்
வெளிநாட்
கள் நிர்ண
கிய பிரமுக
ர். 1926-ம்
போலந்து
சியில் ஈடு
வரும் இவர்
பல்களுக்காக
ந்திருக்கி

பரும்பாலும்
உடன்
ட்கொள்ளும்
வளர்ச்சிக்
மாக உணவு
செலவிடப்
பாழுது குளிர்
, டெலி
ட்டார் வாக
ற்றை வாங்
ாத்தியப்பாடு
ாகிவிட்டமை
கள் அவற்
தற்காகப்
கின்றன.
நிபுணர்கள்
ரலைவைக்கும்
ந்து சேமிப்பு
ம் சேமிப்ப
ச்சி காணப்
கசியமும்

### விடுமுறையைக் கழிக்க ...

குறைந்த செலவில் விடுமுறைகளைக் கழிப்பதற்கான ஏற்பாடுகள், இலவச வைத்திய வசதிஉட்பட சமூக வசதிகளிலும் வியாபகமான வளர்ச்சி காணப்படுகின்றது. வைத்திய வசதிகளில் ஏற்பட்ட அபிவிருத்தியின் விளைவாக போலந்தியரின் ஆயுட்கால நீட்சியிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. யுத்தத்துக்கு முன்னர் போலந்தியரின் சராசரி ஆயுட்காலம் 50 வருடங்களேயாகும். இப்பொழுது சராசரி ஆயுட்காலம் 70 வருடங்களாகப் பெருகியுள்ளது. இதன்விளைவாக ஒரு புதிய பிரச்னையும் இப்பொழுது தலையெடுத்து வருகின்றது. நமது சமுதாயத்தில் விருத்தாப்பியமடைபவர்களுக்கான வசதிகளைச் செய்துகொடுப்பதுதான் அப்பிரச்னை.

கலாச்சாரத் துறையிலும் பெரும் முன்னேற்றம் சாதிக்கப்பட்டுள்ளது. சனத்தொகையின் சராசரி கல்வி, அறிவுத்தரத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி இதைப் பிரதிபலிக்கின்றது. ஆரம்பப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த சுமார் 85 சத வீதமானோர் அவர்களது கல்வியைத்தொடர்கின்றனர். சமுதாயத்தின் பலவேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடையே காணப்படும் இடைவெளிகள் குறுகி வருகின்றன. எலலாவற்றுககும் மேலாக அறிவுப்பசி காணப்படுகின்றது. இப்பொழுதுள்ள வசதிகளையும்மீறி விஞ்ஞான நூல்களுககும், கலைககளஞ்சியங்களுககும், அகராதிகளுககும் பெருந்தேவை நிலவுகின்றது.

மகத்தான மாறுதலின் காரணமாய், இன்று போலந்தில் வர்ககங்களையோ உழைக்காமல் சோம்பிகிடககும் பிரிவினரையோ காணமுடியாது. முன்னையத் தடைச்சுவர்கள் யாவும் தவிடுபொடியாககப்பட்டு விட்டன.

இந்த மகத்தான மாறுதல் காரணமாக சமுதாய ஒருமைப்பாடு சாத்தியமாகியுள்ளது. அறிவுத் தரத்திலும், லௌகீகத் தரத்திலும் காணப்பட்ட வித்தியாசங்கள் குறைந்தமையும், சமுதாயத்தின் பல்வேறு வகுப்புகளுககும், பிரிவுகளுககுமிடையே ஏற்பட்ட பரஸ்பர உறவுகளும், யுத்தத்துக்கு முந்திய காலத்தில் நிலவிய நிலைமைககு நேர்மாற்றமாக போலந்திய சமுதாயத்தை ஒருமைப்பாடுள்ள சமுதாயமாய் பரிணமித்துப் பரிமளிககச்செய்துள்ளது.

#### அசுர சாதனை

1944-ககும் 1969-ககும் இடைப்பட்ட வருடங்கள் போலந்தின் வரலாற்றுககுப் புதிய மார்ககங்கள் வகுத்துககொடுத்த வருடங்களாகும். இதுவரைககும் போலந்து ஈட்டியுள்ளபொருளாதார அபிவிருத்தி முன்னென்றும் காணப்படாத அசுரவேகத்தில்ஈட்டப்பட்டதாகும்.

பண்டைப் புராதன நகரம்

# கிராக்கோ

கிராக்கோ பதினோராம் நூற்றுண்டுப்பழம் நகரம் என்பது சமீப வருடங்களாக நடந்த புதைபொருளாராய்ச்சிகளின்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தாத்தாரியர்கள் 1241-ம் ஆண்டில் கிராக்கோ நகரத்தை நாசப்படுத்தியதன் பின்னர் அந்நகரம் கோதிக் பாணியில் புனர்நிர்மாணிக்கப்பட்டது, நகரத்தின் பழம்பகுதியைச் சேர்ந்த வீதிகளும், சதுக்கங்களும் இந்நாள்வரை அதன் மத்தியகால அமைப்பு முறைகளைக்கொண்டதாகவே விளங்குகின்றன.

14-ம் நூற்றுண்டிலிருந்து 16-ம் நூற்றுண்டுவரை போலந்தின் தலைநகரமாக மிளிர்ந்தது கிராக்கோ, அக்கால கட்டத்தில் விஞ்ஞான, கலாச்சார அறிவுப் பணிகளுக்கு நடுநாயகமாக விளங்கிய இந்நகரம் இந்நாள்வரை அறிவுச்சுடர் பரப்பும் கேந்திர ஸ்தானமாகவே ஒளிவீசுகின்றது. பத்தாம் நூற்றுண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றுண்டு வரையான சிற்பக்கலைப்பண்புகள் திகழும் கட்டடங்களும், சிற்பவேலைப்பாடுகளும் இங்கே அரிய கலைவிருந்து நல்குகின்றன.

ரோயல் வாவெல் மாளிகையும், போலந்து அரசர்களது சமாதிகளைக்கொண்ட கத்தீடரல்களும், மற்றும் விலைமதிப்பற்ற கலைச்செல்வங்களும், அவற்றில் நேர்நிகரற்றவையாகும். ரோம, கோதிக், பரோக் தேவாலயங்கள், சந்தை சதுக்கத்தில் போலந்திய சித்திரக் காட்சிச்சாலையுடன் சேர்ந்த ஆடைமண்டபம் கோதிக் முறையிலமைந்த கட்டடங்கள், மறுமலர்ச்சி காலத்தைச் சேர்ந்த மாளிகைகள். மத்தியகால மதிலரண்கள் ஆதியன கண்டுகளிக்கவேண்டிய அரியகாட்சிகளாகும்.


#### நாஜிகளின் வெறியாட்டம்

நாஜிகள் இந்நகரைக் கைப்பற்றியபோது, நகரத்தைச் சூறையாடினர். ஏராளமான கலைச் செல்வங்களும், அருஞ்சின்னங்களும் மாயமாய் மறைந்தன.

இப்பொழுது கிராக்கோ நகரின் ஜனத்தொகை 565,000. கடந்த பதினெட்டுஆண்டுகளில் ராக்ஷஸ உலோகத் தொழிற்சாலை, 100,000 மக்களுக்கான ஒரு குடியிருப்புப் பகுதி ஆதியன நகருக்கருகாமையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன ரப்பர் உற்பத்தித்தொழில், பொறியியல் உற்பத்தித் தொழில், ரசாயன உற்பத்தித் தொழில், தோல்பதனிடல், அச்சு உற்பத்தித் தொழில், உணவுற்பத்தித் தொழில் ஆதியன கணிசமான அளவு விஸ்தீரணம் செய்யப்பட்டுள்ளன.

கிராக்கோ நகரில் பதினெரு உயர்கல்வி நிலையங்கள் உண்டு. ஏழு தியேட்டர்கள் உண்டு. பதினேழு நூதன காட்சிச்சாலைகள் உண்டு. இன்னும் இரண்டு ஒபேரா சுரங்களும், வாத்திய இசையரங்கொன்றும் உண்டு.

அரசர்களதும், வீரர்களதும், கவிஞர்களதும் சமாதிகளுட, கட்டங்களில் பாதுகாக்கப்பட்டுள்ள இதிகாச கலைச்செல்வங்களும் நிறைந்து காணப்படும். கிராக்கோ நகரம் கடந்த சகாப்தங்களதும்இந்நாளினதும்போலந்தியரின் அறிவுத்திறனைப்பறைசாற்றுகின்றது. போலந்தின் வரலாற்றுச் சின்னங்களும், கலைச்செல்வங்களும் காலதேவனின் அழிவுக்கரங்களுக்குப் பலியாகாமல், மனிதனின் ரசிகத்தன்மைக்கு அரும்விருந்தாக நீடித்து நிலைத்துள்ளன என்பதை கிராக்கோ நகரத்தைத்தரிசிக்கும் வெளிநாட்டுப் பிரயாணிகள் எவரும் உணர்ந்து கொள்ளமுடியும்.



கிராக்கோ நகரத்தின் பண்டைப் பெருமைவாய்ந்த அர்ச். மேரி தேவாலயத்தின் தோற்றம் இது.

## தனியே உலகைச்சுற்றிய போலந்து வீரர் டெலிகா

தன்னந்தனியனுய் கடலின் கடுஞ்சவாலை ஏற்றுத் தன் போராட்டத்தை ஆரம்பித்தான் ஒரு மனிதன். இரண்டு ஆண்டுகளுக்குமுன் நடந்த சம்பவம் இது.

1967-ம் ஆண்டு ஜனவரி 25-ம் திகதி லியோனிட் டெலிகா என்பவர் கடல மார்க்கமாக உலகைச் சுற்றி வரும் நோக்குடன் சிறிய படகொன்றில தம்முடைய பயணத்தை ஆரம்பித்த போது, துணிச்சலான அம்முயற்சி வெற்றியளிக்கும் என யாரும் நினைத்திரார்.

அதற்குக் காரணங்களும் இலலாமலிலலை. லியோனிட் டெலிகா கட்டிளம் காளைப் பருவத்தைத் தாண்டிவிட்ட மனிதர். அவருக்கு வயதோ அப்போது ஐம்பது. அவரது படகும் சின்னஞ்சிறியது. இத்தனைக்தும்மேலாக, பயணத்துக்கான சகல ஏற்பாடுகளையும் பிறர் உதவியின்றி தன்னந்தனியாகச் செய்து முடித்திருந்தார் டெலிகா.

லியோனிட் டெலீகா யார்? அவர் ஒரு பத்திரிகையாளர்; எழுத்தாளர். ரோமில உள்ள போலந்திய பத்திரிகை ஏஜென்ஸியின் நிருபராக ஒரு காலத்தில கடமையாற்றியவர். அநேக நூலகளை எழுதியுள்ளார். ஆங்கில, ரஷ்ய மொழிகளிலிருந்து சுமார் 30 நூலகளை போலந்து மொழியில மொழியாக்கம் செய்துள்ளார். இவ்வளவுமட்டுமன்று. 1939-ம் ஆண்டு ஜெர்மன் நாஜிகளை எதிர்த்து சமர் புரிந்துள்ளார் டெலிகா. நாஜிச் சிறையிலிருந்து தப்பி வந்தவர் அவர். அஸோவ் கடலில் மீனவனுகவும் காலந்தள்ளியுள்ளார். பின்னர் விமானப்படையின் போலந்திய குண்டு வீசும் பிரிவிலும் சேர்ந்து இங்கிலாந்தில் யுத்தம் புரிந்துள்ளார்.

யுத்தத்துக்குப் பின்னர், ஏற்கனவே அரசியல் எழுத்தாளராயிருந்த டெலிகா, ராஜதந்திர சேவையில் பணியாற்றினுர்-சர்வதேச பாதுகாப்பு கண்காணிப்பு கமிஷனில் சேர்ந்து லாவோஸிலும், கொரியாவிலும் சேவை புரிந்தார். கஸபலான்காவை விட்டுச் செல்வதற்குப் பல வருடங்களுக்கு முன்பாகவே, உலகைச் சுற்றிவரும் இப்பிரயாணத்தைத் திட்டமிட்டிருந்தார் டெலிகா. அவரது தனிப்பட்ட சொந்த விவகாரங்களையெல்லாம் இந்த திட்டத்துக்கு அடுத்தபடியானதாக, இரண்டாம்பட்சமானதாகவே வைத்துக் கொண்டார்.

இந்த அசாதாரணமான கடல்பிரயாணத்தின் மார்க்கத்தை இன்று ஒருமுறை திருப்பிப்பார்ப்பது பயனுடைத்தாகும்.

''ஒப்டி'' என்ற தம்முடைய படகுடன் ஜிடினியாவிலிருந்து கஸபலான்காவுக்கு ''ஸ்லப்ஸ்க்'' கப்பலில் பிரயாணம் செய்த லியோனிட் டெலிகா

(16-ம் பக்கம் பார்க்க)

போலந்து மக்கள் குடியரசு 25 ஆண்டுகள்

## பிரஜைகளது உரிமைகளும் சுதந்திரமும்

''போலிஷ்மக்கள் குடியரசு மக்களின் ஜனநாயக அரசாகும். அதன் அதிகாரம் நகரங்களையும் நாட்டுப்புறங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள்வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.''

(போலிஷ் மக்கள் குடியரசின் அரசியல் பிரமாணத்தின் முதலாவது ஷரத்து.)

1952-ம் ஆண்டு ஜுலை 22-ம் திகதி அங்கீகரிக்கப்பட்ட போலிஷ் மக்கள் குடியரசின் அரசியல் பிரமாணத்தில், 'பிரஜைகளதுஅடிப்படை உரிமைகளும், கடமைகளும் சம்பந்தமான 23 ஷரத்துக்கள் அடங்கிய விரிவான அத்தியாயமொன்று காணப்படுகின்றது.

சாதி மத இன பேதமற்று ஆண் பெண் வித்தியாசமின்றி போலந்துப் பிரஜைகள் பொது, அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார வாழ்க்கையின் சகல துறைகளிலும் பங்குபற்றுவதற்கு சம உரிமை பெற்றுள்ளது.

உழைப்பதற்கான உரிமை அரசியல் பிரமாணத்தின் இரண்டு ஷரத்துகளில்-14-ம் ஷரத்து, 58-ம் ஷரத்து முறைப்படுத்தப்பட்டுள்ளது. அவை இவ்வாறு கூறுகின்றன: உழைக்கும் உரிமைஎன்பதுதொழில் பெறுவதற்கான உரிமையும், செய்கின்ற வேலையின் அளவுக்கும் தரத்துக்கும் சமமான அளவு ஊதியம் பெறுவதற்கான உரிமையுமாகும். உற்பத்தி சாதனங்களின் பொதுவுடைமையையும், நாட்டின்உற்பத்திச்சக்தியில் பெருக்கத்தையும், வேலையில்லாமையை ஒழித்துக்கட்டு[illegible] துகள் உத்தரவாதம் செய்கின்றன. உழைப்பு ஒவ்வொரு பிரஜையின் உரிமையும், கடமையும், பெருமையும் ஆகும். அரசாங்கக் கொள்கைக்கு உறுதுணைபுரிகின்றது இக்கொள்கை. எனவே, அரசு அதன் எல்லாப் பிரஜைகளுக்கும் தொழில் வழங்கவேண்டியது அதன் கடமைப்பாடாகின்றது.

நடப்பு ஐந்தாண்டுத்திட்டத்தின்போது 10 1/2 லட்சம் இளம் தொழிலாளர்களுக்குப் புதிய தொழில்கள் வழங்குவதற்கு போலிஷ் ஐக்கிய தொழிலாளர்கட்சியும், அதன் நேச கட்சிகளும் எடுத்த நடவடிக்கை, அரசியல் பிரமாணத்தின் இப்பிரேரணைகள் நடைமுறை அமுலாக்கம் பெறுகின்றன என்பதற்கு சிறந்த உதாரணம் எனக்கூறலாம். முடியுந்தறுவாயிலுள்ள இந் நடவடிக்கை பெரும்வெற்றி நல்கியுள்ளது.

#### தனிநபர் சொத்துடைமைக்கான உரிமை

தனிநபருக்குச் சொந்தமானஉடைமைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதோடு சொத்துரிமை சம்பந்தமான உரிமையையும் நிலை நாட்டுகின்றது. சிறிய அளவு உற்பத்தி சாதனங்களின் பாதுகாப்பையும் இது பிரதிபந்தன உரிமையாக்குகின்றது. நிலத்தையும்' கட்டடங்களையும், மற்றும் விவசாயிகளுக்கும், கொத்தர்களுக்கும், குடிசைத்தொழிலாளர்களுக்

(16-பக்கம் பார்க்க)



தமிழர்களுக்குப் பொங்கல் விழாவைப் போல போலந்துநாட்டு விவசாயிகளுக்கும் ஒரு தனிப்பெரும் விழா உண்டு. சென்ற வருடம் செப்டம்பர் 8ம் திகதி நடந்த இந்த போலந்து நாட்டு 'பொங்கல்' விழாவின்போது விவசாயப்படையினர் வாத்தியங்களுடன் அணிவகுத்துச் செல்வதையே இந்தப் படம் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

['ஈழநாடு' 10-வது ஆண்டுநிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப்போட்டியில் இரண்டாம் பரிசுபெற்ற இரண்டுகவிதைகளில் இதுவொன்று ]

# கடலிற் கலந்த கண்ணீர்

—'அறவாழி'—

ஊரெல்லாம் உறக்கத்தில்
ஆழ்ந்திருக்க வானம்
உறங்காதே இடையிடையே
கண்விழித்துப் பார்க்க
காரெல்லாம் கசிந்துருகிக்
கனத்தமழை பெய்ய
கண்ணம்மா தன்கணவன்
வரவுக்காய் ஏங்கி
போர்வைக்க நெற்கழனி
சென்றுவிட்ட கொழுநன்
புறப்பட்டே இலம்நோக்கி
வந்திடுவார் என்றே
நேர்நோக்காய் நெடுந்தெருவைப்
பார்த்துமே நின்றுள்
நிமிர்ந்துநிற்க, முடியாத
குறுங்குடிசை தன்னில்.

காய்ச்சி வைத்த கஞ்சியது
கலயத்தில் ஆறி
கடும்குளிரால் உறைந்திருக்க
கண்கலங்கி நெஞ்சில்
பாய்ந்துபொங்கும் நினைவதனுல்
பரிதவித்தாள் பாரில்
பைந்தமிழர் மரபினிலே
பிறந்துவிட்ட பாவை
பாய்பெட்டி தட்டுமுட்டு
பரவியெங்கும் கிடக்க
பரபரப்பாய் அவற்றையெல்லாம்
ஒழுங்காக்கி வைத்து
நோயாயும் மருந்தாயும்
விளங்கவல்ல வஞ்சி
நொந்துருகி அத்தானை
வரவேற்க நின்றுள்.


காத்தானின் உள்ளமதில்
கண்ணம்மா மின்ன
கடும்மழையில் கும்மிருட்டில்
ஓடோடி வந்தான்
பூத்தபொழில் தனைநாடிப்
பறந்தோடும் வண்டாய்
பொற்கொடியாள் தன்மனைவி
கண்ணம்மா நினைவாய்
வாத்தியம்போல் வயல்களிலே
தவளையெல்லாம் முழங்க
வரம்பினிலே காத்தானும்
கூத்தாடிச் சென்றுன்
காத்திருக்கும் இல்லாளைக்
களிப்படையச் செய்ய
கழனிதனில் தான்பட்ட
பாட்டினையே மறந்து.

வாசலுக்குள் நுளைந்திட்டான்
விரைந்துவந்த காத்தான்
வாஞ்சையுடன் காத்துநின்ற
வனிதையவள் மகிழ
''நாசமழை'' எக்கூறி
நனைந்துவிட்ட தலையை
நயமாகக் கோதிக்கொண்டே
நங்கைதனைப் பார்த்தான்
பாசமழை,தனில் நனைந்த
பாவையவள் அங்கே
பக்குவமாய் அரைத்தெடுத்த
சம்பலுடன் கஞ்சி
நேசமுடன் ஏந்திநின்றுள்
நீள்விழியாள் கொஞ்சி
நிலையிழந்த காத்தானும்
கைநீட்டி யிருந்தான்.

சடுதியிலே ஊழையிடும்
சத்தம்போல் ஏதோ
சாலையிலே நெடுந்தொலைவில்
கேட்டிடவே காத்தான்
குடுகுடென்று ஓடிப்போய்
வாசலண்டை நின்றே
குறிகுறிப்பாய் சாலைதனைப்
பார்த்திட்டபோது
தடுபுடென்று மோட்டார்போல்
உறுமுகின்ற சத்தம்
தடையின்றி அவன்நெஞ்சில்
பீதிதனை எழுப்ப
கடகடென்றே ஆடிநின்ற
காரிகையும் சோர
கரம்பிடித்தே அவளுக்குத்
தேறுதலும் சொல்வான்.

''விணுக வேதனையால்
வேகாதே கண்ணே
வீரன்நான் உன்னருகில்
இருக்கின்றேன் மானே''
ஆணுக அரியாக
நீரிருந்தும் என்ன
ஆயுதத்தைத் தாங்கிவரும்
பட்டாளம் சிறிப்
பூணுகக் கைத்தடிக்கு
எம்தோலைப் போர்த்தி
பூரித்தே ஆர்ப்பரிக்கும்
நாநாட்டான் மக்கள்
மாண்பிழந்த செய்திதான்
தெரியாதா அத்தான்
மனம்மிகவும் படபடத்துக்
கொள்கின்ற தந்தோ.

( அடுத்தவாரம் முடியும்)




ஃபிரட்ரிக் ஸ்பென்சர் செபப்மன்: 1907-ம் ஆண்டு பிறந்தவர்; மயிர்க்கூச்செறியும் துணிகரச் செயல்களில் ஈடுபடுவதில் ஆர்வமுள்ளவர். அடங்காத தாகம் கொண்டவர்; கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது தனது ஒய்வு நாட்களையெல்லாம் நண்பர்களை அழைத்துக்கொண்டு, வேல்ஸ், ஸ்கொட்லாந்து. பிரதேசங்களிலுள்ள மலைகளை ஏறிப்பயிற்சிபெறுவதிலேயே கழிப்பார். பல்கலைக் கழகநாட்களில், கல்லூரிக் கட்டிடங்களின் கூரைகளில் ஏறிப் பயிற்சி பெறுவார்!

24 வயதில், பனிமூடிய ஆக்டிக் பிரதேசத்திற்குச் சென்ற பிரிட்டிஷ் கோஷ்டியினருடன் சென்று, பனிப் பிரதேசத்தில் சிக்குண்டு, ஐந்துமாதங்களாக எந்தவித உதவியுமின்றி சாகுந்தறுவாயிலிருந்து ஆகஸ்டின் கோட்லட் என்ற இளைஞரை கிரீன்லாந்தின் உச்சிமுகட்டிலிருந்து மீட்டுவந்தார்.

சில வருடங்களின் பின், திபேத்தின் தலைநகரான லாஸாவில் பிரித்தானிய தூதராலயக் கோஷ்டியினருடன் 6 மாத காலம் தங்கியிருந்தார் திபேத் தலைவர்களையும், பௌத்தமதத்தலைவர்களையும் சந்தித்தார்.

லாஸாவை நோக்கி, குதிரை மீது ஏறிச் சவாரி செய்துகொண்டு போனபோது, இமாலயமலைப்பிரதேசத்தின் உயர்ந்த குன்றுகள் இவரது கருத்தைக் கவர்ந்தன. அவற்றிலொன்ருன சோமோ லாரி என்ற குன்றின் உச்சியை அதுவரை யாருமே அடைந்ததில்லையாதலால், அதனைச் செய்துமுடிக்கத்துணிந்தார். சாப்மன். இன்னெரு பிரிட்டிஷ் நண்பருடனும், மூன்று ஷெர்பாக்களை அழைத்துக்கொண்டு, கூடாரங்களையும் கயிறுகளையும் கடன் வாங்கிக்கொண்டு 24,000 அடி உயரமான மலையின் உச்சியை அடையும் முயற்சியைத் தொடங்கினர்.



மலைப்பிரயாணத்தின் இடைஞ்சல்களுக்கு ஈடுகொடுக்கமுடியாதஏனையோருக்கு காய்ச்சல்கண்டுவிடவே, வழிகாட்டியான ஷெர்பாபசாங்கும், ஸ்பென்சர் செப்மன்இருவருமே தேவையானஆசாரங்களையும்,இதர குளிர்தடுக்கும் சாதனங்களையும் எடுத்துக்கொண்டு பலத்த கயிறென்றுல் ஒருவரையொருவர் பிணைத்துக்கொண்டு மலையேறினர். பனியையும் குளிரையும் பொருட்படுத்தாது பல நாட்கள் நடந்து, சோமாலாரியின் உச்சியை அடைந்தனர்.

உச்சியிலிருந்து இறங்கியபோது, வழிகாட்டியான ஷெர்பா பசாங் வழுக்கி விடவேகயிற்ருல் பிணைக்கப்பட்டிருந்தஇருவருமேசுமார் 400, 500 அடிகள் உருண்டுவிட்டனர். அதிர்ஷ்டவசமாக செப்மனின் கோடரி பனிக்கட்டியில் சிக்கவே, ஒருவாறு நின்று, உயிர்தப்பினர். ஆறுநாட்கள்சிகிச்சை பெற்ற பின்னர்தான் தொடர்ந்து பயணம் மேற் கொள்ள முடிந்தது.

செப்மனின் துணிகர வாழ்க்கையில் மிகமுக்கிய கட்டம் 1941-ம் ஆண்டு உலகமகாயுத்தத்தின்போது மலாயாவை ஜப்பானியர் கைப்பற்றிய போதுதான் வந்தது. அப்போது இராணுவ அதிகாரியாக இருந்த செப்மன், இன்னெரு சார்ஜன் மேஜரையும், ஒரு சார்ஜனையும் கூட அழைத்துக்கொண்டு, எதிரிகளின் முகாமிற்குள்ளேயே ஊடுருவி, அவர்களை முறியடிக்க [illegible]செய்தார்.

ஒருநாள் புதர்களுக்குள் மறைந்திருந்து ஜப்பானியரின் இராணுவ வாகனங்களின் இலக்கங்களையும், எண்ணிக்கையையும் இதர முக்கிய தகவல்களையும் சேகரித்தார். ஒருநாளிரவு இரகசியமாக தெருவழியே ஓடிக் கொண்டிருந்தபோது, ஜப்பானிய வீரர்கள் சைக்கிள்களில் அவ்வழியால் வரவே, நண்பர்களைப் போல, அவர்களுக்குக் கையசைத்தார். அவர்களும் ஏமாந்து பதிலுக்குக்கையசைத்து நன்றி தெரிவித்து விட்டுச்சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது சம்பிரதாயங்கள் காரணம்பற்றி வந்தவை

சரஸ்வதி அரிகிருஷ்ணன்

இந்துமத தெய்வ வழிபாட்டில் நாம் அனுசரிக்கும் செயல்கள் யாவும் வேண்டப்படாதவை என்று ஒதுக்குவார்கள் பலர் உண்டு ஆனல் அன்னிய மதங்களிலோ பல்லாயிரம் ஆண்டுகளுககுமுன்னர் சொல்லி வைத்ததை இன்று அனுசரித்து வருகிருர்கள். ஆனல் நமது மக்களோ அசட்டுக கொள்கையென்று யாவற்றையும் இகழ்ந்து பேசுவதும் ஒதுக்கி வருவதுமாக இருக்கிருர்கள்.

உருவ வழிபாடு வேண்டப்படாத ஒன்று என்று கூறுபவரும் உண்டு. நாம் வணங்கும் தெய்வங்கள் அனைத்தும் மனிதனுல் கற்பிககப்பட்டவைதாம். அவை யாவற்றினும் பல அரிய உண்மைகள் பொதிந்திருககின்றன.

## சாம்பிராணியும் சூடமும் தேவையா?

தெய்வத்திற்கு தீப ஆராதனை, கற்பூர மணம் என்பது யாவும் தேவைதான என்பது பற்றி ஆராயவேண்டும். கோயில்களிலும் வீடுகளிலும் சாம்பிராணிபுகை போடுவதையும் தீப ஆராதனை செய்வதையும் நாம் பார்த்திருககிருேம். இது தேவையா? தேவையில்லையா? என்பதையும் அறிய வேண்டும்.

உண்மையில் சாம்பிராணி போடுவது சுகாதாரத்தைக கடைப்பிடிகக அமைந்த ஒன்ருகும். சூடத்தில் கிருமிகளைக கொல்லும் தன்மை உள்ளது. நாம் சூடத்தைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொள்ளும் போது கண்ணிலுள்ள கிருமிகள் கொல்லப்படும். இதனுலேயே தெய்வவழிபாட்டின்போது அவ்வாறு செய்கிருேம்.

இன்னும் சாம்பிராணிப் புகைபோட்ட பின்னர் அதனை வீடு முழுவதும் எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்றும் பெரியவர்கள் கூறுவார்கள். அதன் உண்மை என்னவெனில் சாம்பிராணி புகையின் நறுமணம் கொசுக்கள், நுளம்புகளைக் கொல்லும் சக்தி வாய்ந்தது. இப்புகையினுல் மற்றக் கிருமிகளும் இறந்துவிடுகின்றன: இது நமது சுகாதாரத்திற்கு இன்றியமையாதது. இப்பொழுது விளங்குகிறதா?

தெய்வ வழிபாட்டின் போது அமைதியாக இருந்து வணங்குதல் நாம் செய்ய வேண்டிய முக்கிய செயலாகும். அப்போதுதான் நாம் செய்த நன்மை தீமைகளை எண்ணிப் பார்க்க முடிகிறது. அதனுல் தெளிந்த உள்ளத்தைப் பெறுகிருேம். நாம் தவறுகள் ஏற்படாது வாழ்க்கையைச் செம்மையாக நடாத்திச் செல்ல மன உறுதியைப் பெறுகிருேம்.

## திவசங்கள்

இனி இறந்தவர்களுக்குத் திவசங்கள் செய்வதைக் காண்போம். திவசம் கொடுப்பதும் இறந்து போனவர்களுக்குச் செய்யும் நன்றிக்கடனுகும். அவர்களிடம் நாம் அடைந்த நன்மை தீமைகளை நினைவு கூரும் வகையில் ஏற்பட்டதே திவசமாகும். புத்தர், யேசு, காந்தி போன்ற பெரியார்கள் இன்று எம் மத்தியில் இல்லை. என்ருலும் நாம் அவர்கள் பிறந்த தினங்களை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிருேம். இதற்குக் காரணம் அவர்கள் மக்களுக்குச் செய்த நற்காரியங்களாகும். அவர்களை நாம் நினைவு கூராதுவிடின் அவர்கள் யாரென்றே நாம் உணர முடியாது. திவசம் இத்தகைய பெரிய நன்மையைச் செய்கிறதென்பதை எண்ணி நாம் பெருமைப்பட வேண்டும்.

# குடும்பச் சுடர்



தயாரிப்பு: குணம்

## ஏன்வடக்கே தலை வைத்தல் கூடாது?

நம் இல்லத்தில் உள்ள முதியவர்கள் வடக்கில் தலை வைத்துப் படுக்கவேண்டாம் என்று கூறினுல் நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது. இது என்ன பைத்தியக் காரத்தனம் என்று கேட்கின்ருேம். ஆனல் அதையே விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும்போது அதன் உண்மை புலப்படும்

வடக்கே தலைவைத்துப் படுக்கக்கூடாதென்பதற்கு முக்கிய காரணம் பூமிக்குரிய காந்தசக்தியை அடிப்படையாகக்கொண்டு கூறப்பட்டதாகும். பூமியின் வடதுருவத்தை நோக்கியே இழுக்கும் சக்தியாகிய காந்த சக்தி இருக்கிறது. அதனுல் உடல்நலம் குறைந்தவர்கள் வடக்கே தலைவைத்துப் படுப்பது தீங்கென விதிக்கப்பட்டிருக்கிறது. பலவீனர்களாக இருப்பவர்கள் வடக்கே தலைவைத்துப் படுப்பதால் பூமியின் காந்தசக்தி மனிதனுடைய வியாபக சக்தியை வடப்புற மலைப்பாகத்து மூலைக்கு இழுத்து மயக்கமடையச் செய்யும். உடல் நலத்துடன் இருப்பவர்கள் வடக்கே தலைவைத்துப் படுப்பதால் காலையில் எழும்போது மயக்கமாக இருப்பதாசக் கூறுவதற்குச் காரணம் பூமியின் காந்தசக்திதான்.

அதிகமாக நோயுற்றவர்கள் வடக்கே தலைவைத்துப் படுப்பதால் உயிர்க்கு ஆபத்து ஏற்படலாம் என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். இந்தியர்கள் இறந்தவர்களைத்தான் வடக்கில் தலைவைத்துக் கிடத்துவார்கள். எனவே நம்முடன் இருப்பவர்கள் வடக்கே தலைவைத்துப் படுக்கக் கூடாது என்று கூறுவதற்கு காரணம் பூமியின் காந்த சக்திதான் என்று தெரிகிறதல்லவா? இதைத்தான்:-

உத்தமம் கிழக்கதாகும்
ஓங்குயிர் தெற்கதாகும்
மத்திமம் மேற்கதாகும்
மாள்வது வடக்கதாகும்.

என்று நம் முன்னேர்கள் கூறி வைத்தார்கள். இனி மேலாவது இல்லங்களில் படுக்கைகள் வடக்குநோக்கிப் போடப்படாது கவனித்துக்கொள்ளுங்கள்.

## நீத்தார் கடன் காரணம் பற்றியது

இதேபோன்றே இறந்தவர்களுக்குச் செய்யும் பிரதிக் கடன்களுக்குக் காரணம் பற்றியவைகளாகவுள்ளன இந்துமதத்தில்தான் இத்தகைய சம்பிரதாயங்கள் உள்ளனஎனஎண்ணவேண்டாம். பிறமதத்தவரிடமும் இவ்வித சடங்குமுறைகள் உண்டு. மேல்நாட்டவர்கள் இறந்தவர்களுக்குப் பல நோன்புமுறைகளைக் கடைப்பிடிக்கிருர்கள். சீனப்பெண்கள் கணவன் இறந்தால் கறுப்புஉடை அணிவார்கள்.

நமது இந்துமதத்தில் ஒரு தாய் அல்லது தந்தையிறந்து விட்டால் மகன் நீர்க்குடம் உடைக்கும் வழக்கம் உண்டு. சிதையில் தீமூட்டமுன் நீர்க்குடத்துடன் அச்சிதையைச் சுற்றிவரச்சொல்லி அக்குடத்தில் மூன்றுமுறைகள் வரும்பொழுதும் மூன்று துளைகள் உண்டுபண்ணுவார்கள். பின்னர் குடத்தை உடைத்த பின் தீமூட்டச் செய்வார்கள்.

இச் செயலின் உண்மை இதுதான். நமது உடல் மண், நீர், காற்று ஆகியவற்ருல் உண்டானது இம்மூன்றும் பிரிந்தால் உடலும் அழிந்து போகும். காற்று காற்ருேடும், நீர் நீரோடும், மண் மண்ணேடும் ஒழிந்து போவதாகப் பாவிக்கும் வகையில் அந்தக் குடம் உடைக்கப்படுகிறது. இதனல் நீர் நிரம்பிய மண் குடம்போல நமது உடல் என்பதை அறிகிருேம. தோன்றிய அனைவரும் என்ருவது மண்ணுவது திண்ணம்.

இந்த உண்மையை எம் முன்னேர் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே அறிந்திருந்தனர். எனவே வாழ்க்கையில் நன்மை செய்யும்படி நமது முன்னேர்கள் பணித்த காரியங்கள் யாவும் காரணத்தோடு அமைந்துள்ளன. இதை நாம் நன்கு உணரவேண்டும்.

---

## 'பிஸ்கட்'மியூஸியம்

லெனின்கிராட்டிலுள்ள மியூஸியமொன்றில் பல காலமாகச் செய்யப்பட்ட பல்வேறு ரக 'பிஸ்கட்டு'கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. நூற்ருண்டு காலமாக ரஷ்யாவில் இருந்துவரும் 'பிஸ்கட் 'கேக்' போன்ற உணவுவகைகளின் விதம் விதமான தயாரிப்பு முறைகள் ஒரு நாடோடிக் கலையாகக் கருதப்படுகின்றன. முன்னைய கால பிஸ்கட்டுகள் சிலவற்றில் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளன.

## உலகிலேயே பெரிய ஓவியம்

உலகிலேயே மிகப் பெரிய ஓவியம் ஒன்றை மேற்கு ஜெர்மன் ஓவியர் மைக்கேல் ஆஸ்வால்ட் தீட்டியிருக்கிருர். 236 அடி அகலமும் 40 அடி உயரமும் கொண்ட இந்த ஓவியம் 'பசிக் கொடுமையினுல் ஓலமிடும் மனிதனை'ச் சித்தரிக்கிறது. இந்த ஓவியத்தைத் தீட்ட ஓராண்டு காலம் பிடித்தது. இது ஏலம் விடப்பட்டு அத்தொகை உலகமெங்கும் உள்ள அறநிலையங்களுக்குக் கொடுக்கப்படும்.

---

# நாடு நலம்பெற நங்கையர் பணி

பொ. பட்டு

நம் நாட்டு பெண்களின் நிலையை மேலைநாடுகளானஇங்கிலாந்து, பிரான்ஸ் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாட்டுப்பெண்களுடன் சீர்தூக்கிப் பார்க்கும் போது மலைக்கும் மடுவுக்கும் உள்ள நிலை உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று தெட்டத்தெளிவாகத் தென்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? நம் நாட்டுப் பெண்கள் என்ன அறிவில் குறைந்தவர்களா? இல்லவேயில்லை. பாரத நாட்டையாளும் இந்திராகாந்தி, நம்நாட்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இவர்களைப் பார்க்கும்போது இப்படி எண்ணக்கூடிய நிலையில் நாம் இல்லவேயில்லை. ஆற்றல் இல்லாதவர்களா என்ருல் அதுவுமில்லை அப்படியாயின்இதற்குக் காரணம் என்ன? இதற்கு விடை காணப்புகுங்கால் நமக்கு எம்மிடமுள்ள குறைபாடுகள் நன்குதென்படுகின்றது.

இன்று உயர்கல்விகற்று பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பெண்களின் நோக்கமென்ன? பொது நலப்பணியில் பெண் சமூக முன்னேற்றத்தை இவர்கள் கருதுகிருர்களா? இல்லவே யில்லை. இப்பெண்களின் ஒரே நோக்கம் ஒரு டாக்டரையோ, இஞ்ஜினியரையோ அல்லது பணக்கார வாலிபனையோ மணந்து உல்லாசவாழ்க்கை வாழப்புகுவதுதான். இதைத்தவிரகிராமங்களிலும் சிறிய நகரங்களிலும் வாழும் பெண்கள் சீர்கேட்டை அறியவோ அல்லது அதைப்பற்றிச் சிந்திக்கவோ, சீர்திருத்தவோ எண்ணுவதேயில்லை. இவர்களுக்கு அத்தகைய சந்தர்ப்பமுமில்லை, இவர்களேயிப்படியிருந்தால் பெண்கள் சமூகத்துக்காக பரிந்துபேச சீர்திருத்த, சிந்திக்கவைக்க வேறுயார்முன்வரப்போகின்ருர்கள். எனவே இந்நிலை மாறவேண்டும். படித்த, கல்வி கற்ற, பட்டம்பெற்ற உல்லாச வாழ்க்கை வாழும் பெண்கள் சமூக சேவையில் ஈடுபட முன்வரவேண்டும். தெருவெங்கும் மாதர் முன்னேற்றச் சங்கங்கள் அமைக்கப்பட்டுஅவைகளிலேபெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைப் பற்றிப் பேசப்படவேண்டும். கல்வி அறிவற்ற பெண்களுக்கும் அவர்கள்விளங்கும்வண்ணம் சீர்திருத்தக் கருத்துக்களை புரியவைக்க வேண்டும். பெண்கள் வெறும் சமையல் [illegible] படுக்கை யறைப்பாவைகளாயும் இருக்கும் நிலையை மாற்ற உழைக்கவேண்டும். ஆணைப் போன்று பெண்ணுக்கும் சில கடமைகள் உண்டே தவிர அதை நிறைவேற்றிய பின் அவள் உரிமைகளைத் தடுப்பதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது. ஆண்கள் அனுபவிக்கும் சுதந்திர வாழ்க்கையில் அவளும் சரிசமமாக அவனுடன் கலந்து கொள்ள முன்வரவேண்டும்.

இன்றைய பெண்களில் நூற்றுக்கு எண்பதுபேர் ஆண்கள் சம்பாதித்துப் போடுவதை உண்டு, உறங்கி வாழ்கின்றனரே தவிர நாட்டின் அரசியல் நிலையையோ பொருளாதார நிலையையோ எள்ளளவேனும் சிந்தித்துப் பார்க்கின்ருர்களா என்ருல் கிடையவே கிடையாது. இன்று நாடு பொருளாதார நிலையில்தாழ்ந்துபோவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். இதுமட்டுமன்றி ஓர் ஆணின் உழைப்பால் ஒரு பெரிய குடும்பத்தை கட்டுப்பாடாகவைத்துநடத்தமுடியாத நிலைமையும் ஏற்படுகின்றது. இந்நிலையை உணர்ந்து ஒவ்வொரு பெண்ணும் பாடுபட்டு உழைக்க முன்வரவேண்டும். ஆரம்பத்தில் குடும்பத்தைச் காப்பாற்றவேண்டும், வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க வேண்டும் என்ற சுயநல நோக்குடன் இருந்தாலும் நாளடைவில் இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஓர் அங்கம் என்பதை உணர்ந்துகொள்ள முடியும். இலங்கையைப் பொறுத்த மட்டில் பெண்கள் செய்யக்கூடிய தொழில்கள் ஏராளம் உண்டு. விவசாயத்தில் கூட்டுமுறையில் ஈடுபடலாம். நெசவு நிலையங்களிலே நெசவுத் தொழில்களில் ஈடுபடலாம். இவை மட்டுமின்றி குடிசைக்கைத் தொழில்கள் ஏராளமாக இருக்கின்றன. இத்தொழில்களை எல்லாம் பெண்கள் ஏளனமான தொழிலாகக் கருதாமல் விருப்புடன் கைக்கொள்ள முன்வரவேண்டும்.

இந்த நடவடிக்கைகளால் சினிமா பார்த்தல், ஆடை ஆபரணங்களை நாளுக்கொன்ருக மாற்றிக்கொண்டு திரிதல் போன்ற பயனற்ற, தீயபழக்கவழக்கங்களும், வெறும் போலிக்கௌரவமும் ஒழிந்துபோய்விடும். வீணே பொழுதைக்கழிக்கும் போதுதானே உல்லாச எண்ணங்கள் உண்டாகும். எனவே பெண்களே இனியாவது நிலைமையை உணர்ந்து சேவைபுரியமுன்வாருங்கள். நாட்டின் செல்வத்தை பெருக்கப் பாடுபடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம் நாட்டுக் கலைஞர்

# புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

உண்மைதான்! ஈழத்துப் பழம்பெரும் நடிகரான 'நாடகயுவராஜ் சி. ரி. செல்வராஜின் மகனை மகாதேவனும் தந்தையாரைப் போல நாடக உலகில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்!

புராண நாடகங்களில் 'ராஜபார்ட்' வேடங்களில் தோன்றி வெளுத்துவாங்கும் செல்வராஜை 'கூத்து'க்களை விடியவிடியப் பார்த்த ரசிகர்கள் மறந்திருக்கவே மாட்டார்கள். இவரைப் போலத்தான் இவரது புத்திரரும் அருமையாக நடிக்கிறார்; வேகமாக வளர்ந்துவருகிறார்!

தனது இருபது வயதிலேயே 'மகான்' என்றே நண்பர்களால் செல்லமாக அழைக்கப்பட்டு வரும் மகாதேவன் 23 நாடகங்களில் நடித்துவிட்டாரென்றால், அவருக்கு நாடகத்துறையிலுள்ள பற்றுதலையும், ஆற்றலையும் சொலலவும் வேண்டுமா?

இலங்கேஸ்வரி நாட்டிய கலாமன்றத்தின் மூலம் மேடையேற்றப்பட்ட நாடகங்களில் 'மகான்' கதாநாயகன் பாத்திரம் ஏற்று நடித்து சக்கை போட்டிருக்கிறார்!

இவர் நடித்த நாடகங்களில் இவருக்குப் பிடித்தமான நாடகம்: 'தாய் மேல் ஆணை'. இருபது தடவைகள் இந்நாடகம் மேடையேற்றப்பட்டிருக்கிறது. கதாநாயகனாக இந்த நாடகத்தில் நடித்து பலரது பாராட்டுதல்களையும் அபிமானத்தையும் பெற்றிருக்கிறார்.

'சுமதி எங்கே', 'மலர்ந்தவாழ்வு', 'இன்பவாழ்வு'- இவர் நடித்த நாடகங்களில்ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டவையாகும்.

''ஈழத்துதமிழ்சினிமாப் படங்களில் நடிக்கவேண்டும்''- இதுதான் இவரது இதயத்தின் அடித்தளத்தில் புதைந்து கிடக்கும் ஆசை. இதற்கானமுயற்சிகளில் இப்போது இறங்கியுள்ளார்.



ஈழத்துத் தமிழ்படத் தயாரிப்பாளர்கள் இவரைப் பயன்படுத்திக் கொண்டால் நிச்சயம் பயன்பெறுவர்; இவரும் பயன்பெறுவார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்நடிப்பு இவரைக் கவர்ந்திருக்கிறது. அவரது நடிப்பை விரும்பும் அதே நேரத்தில் 'ஒரிஜினலா'கவே நடிக்க இவர் முயல்கிறார்.

நாடகத்துறையில் இவருக்கு நல்ல எதிர்காலமுண்டு என்பதில் சந்தேகமில்லை.

— 'பாமா'




# பத்து வயதில் பலவகை நடனமாடிய பவானி !

''சின்னஞ் சிறு சிறுமியாச்சே! எப்படித்தான் ஆடப்போகிறாளோ?'' என்று அங்கலாய்த்த பாட்டி, பாட்டன் வரிசையிலுள்ளவர்கள் உட்பட அங்கலாய்த்த உறவினர், சுற்றத்தார், நண்பர்கள் என்று யாழ். நகர மண்டபம் நிறைய ரசிகர் கூட்டம் நிறைந்திருந்தது!

நன்கே அமைந்த சூழலில் செல்வி பவானி பாலசுப்பிரமணியம் மேடையில் தோன்றினார்! சின்னஞ்சிறு உருவம்- வானவில்லையொத்த வண்ண உடை அலங்காரங்களின் மத்தியில் பால்வண்ணம் நீங்காப் பச்சிளம் முகம் பால் நிலாப்போலத் தோன்றிற்று. பொன் நகைகளில் பதித்த கற்களின் மின்னொளி தாரகைக் கூட்டத்தை நினைவூட்டின.

செல்வி ஆடினார்!

பாட்டனார்களும் பாட்டிகளும் மெய்மறந்தனர்: ஏதோ தேவலோகக் காட்சியாக அவர்கள் லயித்தனர்.


ஏனையோர்செல்வியின் செவ்விய ஆட்டத்தைக் கண்டு பிரமித்தபடி ரசித்து கைதட்டித் தனது பாராட்டுகளையும் உற்சாகத்தையும் தெரிவித்தனர்.

நடையறி புலவோர்- ஆடற்கமைந்த ஆசான்கள் எடைபோட்டுக்கொண்டிருந்தனர். சங்கீத பூஷணம் இராமநாதனின் ரம்மியமான மிருதங்க நாதமும், சங்கீத பூஷணம் சரோஜினி குமாரசாமியின் சலனமற்ற தெளிந்த வயலின் இசையும் வித்துவான் திருமதி சரஸ்வதி பாக்கியராஜாவின் கணீரென்றவசப்படுத்தும்பாடல்களும், குமாரிபவானிதாமோதரம்பிள்ளையின் குறிதவறுத தாளமும், எடுப்பான நட்டுவாங்கமும் செல்வி பவானியைத் தானாகவே ஆடவைத்திருக்கும்- அப்படித்தானோ என்னவோ செல்வி பவானி லளிதமாக ஆடினார். ஆடிக்கொண்டே இருந்தார். பத்தே வயசில் பலவகை நடனங்களின்பக்குவமறிந்து பார்த்தோர் கண்கள் மீளாவண்ணம் பரவசமாக ஆடினாரென்றால் இயற்கையான நடனப்புலமை அவரிடம் இருப்பதே காரணம்.

தில்லைத் திருக்கூத்தன் நடராஜனின் திருக்கூத்தை நடனத்தில் பிரதிபலிப்பது அபார இன்பமளிப்பதாகும். ''இடது பதம் தூக்கி ஆடும்' என்ற பாடலைத் தனக்கே உரிய குழைவோடு திருமதி சரஸ்வதி பாக்கியராஜா பாட, சபையோர் உடல் சிலிர்க்க, செல்வி பவானி திருக்கைலாயக் காட்சியை நினைவுபடுத்தி அழகாக ஆடியது எல்லோர் உள்ளங்களிலும் பதிந்த ஒரு நடனம். திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களுக்கு நடனம் அமைத்து ஆடுவது பாடலுக்கேற்ற சுவையைக் கொடுப்பதுடன் ஒரு தெய்வீக உணர்வையும் ஊட்டவல்லது. பவானி ஆடிய ஆண்டாள் திருநடனம் ஒரு வெற்றியென்றே சொல்லவேண்டும். நடனத்திலே மிகக் கடுமையானது வர்ணம்; அதே நேரத்தில் மிக முக்கியமானதும்கூட. அபிநயமும், ஜதியும், ஸ்வரமும் மிக விரிவாகவும், அதே நேரத்தில் இம்மூன்றின் செறிவும் சமமாக அமைந்த ஒன்று.

பவானி சிறுமி- இன்னும் கற்றவற்றைச் செம்மைப்படுத்தி இன்னும் புதியவை கற்று நடனத்தில் பூரணத்துவம் பெற வாழ்த்துவோமாக. சிறுமி பவானி பாலசுப்பிரமணியத்தின் இயல்பான நடன ஆற்றலை இவ்வளவு திறம்பட இவ்வளவு சிறிய காலத்தில் நெறிப்படுத்த முடிந்தது என்றால் நிச்சயமாகஆசிரியை குமாரி பவானி தாமோதரம்பிள்ளை ஓர் உயர்ரக ஆசிரியை- பாராட்டப்படவேண்டியவர். அதுவும் இவ்வளவு இளம் வயசில் இப்படிக்கற்றுக்கொடுக்கும் ஆற்றல் கைவருவது அரிது மொத்தத்தில் இந்த இரண்டு பவானிகளும் நடன உலகில் வருங்காலத்தில் ஒய்யாரமாகப் பவனிவர நல்ல வாய்ப்பு உண்டு!

— ஆ. தேவராசன்.



தமிழகத்திலிருந்து ஈழம் வந்து தலைசிறந்த சங்கீத வித்துவான்களை உருவாக்கிய திரு. ஏ. எஸ். இராமநாதனுக்கு உடுவில் திறந்தவெளி அரங்கில் நடந்த பாராட்டுவைபவத்தில் இசைமேதை சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை அவருக்கு பொன்முடிப்பு வழங்குகிறார்.

## நாடக விமர்சனம்

# காசிருக்கும்வரை...!

நாகரீகமென்ற மாயையில் வீழ்ந்து கண்டதே காட்சி கொண்டதேகோலம் என்று எண்ணி உற்றார் உறவினரை உதறித்தள்ளி நாட்டியக்காரி லதாவையேதஞ்சமெனக் கிடக்கிறான் ராஜா. அழகே உருவாகி கைவந்த ஆடற்கலையில் ஆடவர்களை மயக்கி அவர்களை அனாதைக் கோலத்தில் அலையவிடும் ஹோட்டல்-கிளப் நடனராணி லதா. மகளின் நல்வாழ்விற்காகக் காற்சட்டை போட்ட ஒருவனை நம்பி அவனால் ஏமாற்றப்பட்டுத் தவிக்கும் கங்காணி கதிர்வேல். கங்காணியை ஏமாற்ற எண்ணிய வேலைக்காரன் கந்தையா. சமயசமரசம் பேசித் தமிழ்காக்கும் அப்துல்லா போன்ற இன்னோரன்ன பாத்திரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சமூகச் சித்திரந்தான் ''காசிருக்கும்வரை...'' கடைசியில் லதாவால் ஏமாற்றப்பட்ட ராஜா திருந்துகிறான் என்பதே முடிவு. உப்புச்சப்பற்ற ஒரு பழைய மரபுக்கதை.

நீலவண்ணன் கதை, வசனம்- பாடல்கள் எழுதி டைரக்ட் செய்துள்ள இந் நாடகம் 'கலைக்குரிசில் கலையரங்கத்'தின் சார்பில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது.

ராஜாவாக ஆர். வரதராஜ், லதாவாக ஈழத்து ஜெயலலிதா என வர்ணிக்கப்பட்ட சித்திராதேவியும் சாந்தியாக பிரித்திகாவும், செல்லமாக மணிமேகலையும் குட்டி நட்சத்திரம் வசந்தியாக செல்வி செல்வராணியும் நடித்தனர். லதாவாக வந்தவர் தனது கவர்ச்சியான உடையாலும் கிளப் நடனங்களாலும் நாடகத்தைக் கலகலப்பாக்க முயன்றார். ஓரளவு ஆபாசம் தொனிக்கச் செய்தார் என்றும் சொல்லலாம். நடிகர்களின் வசனங்கள் எதுவும் எடுபடவில்லை. காரணம் சபையினருக்குத் தெளிவாக எதுவும் கேட்கவில்லை. ஒலிபெருக்கி ஒழுங்குகளில் பெரிய தவறுதல் விட்டுவிட்டார்கள் என்றே எண்ண இடமிருக்கிறது.

இதே கலையரங்கத்தினர் எதிர்காலத்தில் நல்ல கருத்தான கதைகளைத் தெரிந்து நல்லமுறையில் மேடையேற்ற முன்வரவேண்டும்.

— நெல்லை. க. பேரன்

மங்கையர் அங்கங்களுக்கு அதித அழகைக் கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள். .
இன்றே விஜயஞ்செய்யுங்கள்



தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கட்டுரை

# அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த மட்பாண்ட சின்னங்கள்

## திருக்கேதீஸ்வரத்தின் தொன்மைக்கு எடுத்துக்காட்டு

— பண்டித ரத்தினம் சி. எஸ். நவரத்தினம் —

### அகழ்வாராய்ச்சிகள்

1575-ம் ஆண்டில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை போர்த்துககீஸிய வரலாற்றுசிரியரான டு கொன்டோ பின்வருமாறு வருணிககிறார்.

சில தொழிலாளர் கற்களை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தபோது ஒரு கட்டிட அத்திபாரத்தின் அடித்தளத்தைக் கண்டனர். அதனைப் புரட்டிப் பார்த்ததில் ஓர் இரும்புச்சங்கிலி இருந்தது. இந்தியா முழுவதிலும் தேடினாலும் ஒரு கொல்லனுவது இதுபோன்ற வேலையைச் செய்வதற்கு முன்வரமாட்டார். அத்தனைப் புதுமையாக அந்தச் சங்கிலி இருந்தது. 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் திறமைமிக்க நீதியரசர்களில் ஒருவரான அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் மாந்தையில் பல்வேறுகாலக் கட்டடங்களைக் குறிக்கும் ஏராளமான ரோமன் நாணயங்களும் பல்வகையான மட்பாண்டங்களும் தங்கச்சங்கிலிகளும் வெள்ளிச் சங்கிலிகளும் கண்டுபிடிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார்.

### மகத்தான புராதன வரலாறு

1887ல் 'றேயல் ஏசியாட்டிக் சொசைட்டி'யில் திரு. டபிள்யூ. ஏ. எஸ். போக் என்பார் மாந்தையில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சி சம்பந்தமான ஒரு கட்டுரையை சமர்ப்பித்தார் அவர்அதில் குறிப்பிடுவதாவது:- ''அறிவுக்கும் அழகுககும் உறைவிடமாக விளங்கியுள்ள இந்த நகரின் மகத்தானபுராதன வரலாறு பற்றி சந்தேகமே எழமுடியாது. இந்திய உபகண்டத்தின்அருகாமையில் இருப்பதாலும் இந்தியாவின் ஒரு பகுதியாக விளங்கிய இராமேஸ்வரத்துடன் கடல்மார்க்கப் போக்குவரத்து வசதிகள் இரு பருவப் பெயர்ச்சி காலங்களிலும் சுலபமாக விருந்ததாலும் இலங்கையின் இப்பகுதியில் குடியேற்றங்கள் மிக முன்னதாகவே இடம்பெற்றிருக்க வேண்டும். சிங்களவர்கள் மகாடித்த வென்று அதனை மிக முன்பதாகவே குறித்துள்ளார்கள். அதன் மிகவும் பழமையான பெயர் திருக்கேதீஸ்வரம் என்பதில் சந்தேகமில்லையென்று கருதுகிறேன்.''

1894ல் சைவபரிபாலன சபையின் பொருளாளர் ஸ்ரீ எஸ். ரி. எம். பசுபதி செட்டியார் திருக்கேதீஸ்வரத்திற்குச் சில ஊழியர்களுடன் சென்று மலேரியா பரவிய அப்பகுதியில் ஆறு மாதகாலம் தங்கி அகழ்வு ஆராய்ச்சிகள் நடத்தினர். கோயில் இருந்த இடத்தின் தடங்களைக் கண்டுபிடித்ததோடு ஒரு சிவலிங்கத்தையும் கணேசமூர்த்தியையும் கூட கண்டெடுத்தார் அவர். 1925—28-ம் ஆண்டுகளில் காலஞ்சென்ற புதைபொருளாராய்ச்சி ஆணையாளர் திரு. ஏ. எம். ஹோகார்ட் மாந்தையில் அகழ்வு வேலைகளை மேற்கொண்டு சில முக்கியமான கண்டுபிடிப்புகளையும் செய்துள்ளார். 1950-ம் ஆண்டில் புதைபொருளாராய்ச்சி இலாகாவைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. எஸ். சண்முகநாதன் மேற்பார்வையில் மேற்கொண்டும் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இவைகளின் மூலம் பழைய நகரின் சுவர்களும் அகழிகளும் தெரிய வந்தன. கிழக்கு வாயிலிலிருந்து அநேகமாக 40அடி அகலமுள்ள பழங்காலத்து பாதையொன்றிருப்பதும் அறியப்பட்டது. இந்தப் பாதையின் அருகிலேயே இன்னொரு குறுகலான பாதையும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தப் பாதைகளின் இருகரைகளிலும் கட்டிடங்கள் இருந்த தடையங்கள் காணப்பட்டன. கிழக்கு வாயிலிலிருந்து வரும்பாதை பிற்காலத்தில் ஒரு கோயிலுக்குப் போவதாய் இருந்திருக்கலாம். தீர்த்தககல்ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. மட்பாண்ட விளிம்பைக் கொண்ட ஒருகுளமும் கற்களால் வரியப்பட்ட இருகுளங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த அகழ்வாராய்ச்சிகளின்போது கருத்தைக் கவரும் மட்பாண்ட வகைகளும் எலும்புகளும் கிடைத்துள்ளன. இந்த மட்பாண்டங்கள் ரோமாபுரி, அராபியா, சீனு போன்ற நாடுகளிலிருந்து வந்தவை. இதில் கிடைத்துள்ள மட்பாண்டங்களில் சில இந்த நகரின் தொன்மையை நிர்ணயிப்பதற்கு உதவக்கூடியனவாகும். நகரின் கவர்களுக்கு வெளியே புதைகுழிகள சிலவும்காணப்பட்டன பல்வகையான மணிமாலைகளும் கிடைத்தன. நான்கு குதிரைகள் பூட்டிய தங்கத்தாலான சிறிய இரதம் இந்த சிறப்பான கண்டுபிடிப்புகளில ஒன்று. இதுவரையில இந்தப்புராதன நகர்பற்றி எதுவித முடிவுகளையும் மேற்கொள்வதற்கு அறிஞர் எவரும் இந்தக் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தியதாகத் தெரியவிலலை.

மாதோட்டத்திலுள்ள சில கலலேடுகளின்படி திருவீராமேஸ்வரஉடையார் மகாதேவன் கோயில்என்ற இன்னெரு கோயில் இருந்ததும் தெரியவருகின்றது. இரண்டாவது இராஜேந்திரன் ஆட்சி(1052-64) காலத்தில இராஜாங்க அதிகாரியொருவரால் இந்தக்கோயிலுககு ஒரு நன்கொடை வழங்கப்பட்டுள்ளது. சோழர்களால் திருக்கேதீஸ்வரம், இராஜேஸ்வரம் மகாதேவன் கோயில் என்று அழைக்கப்பட்டது. மாந்தையும் இராஜேஸ்வரம் என்று குறிக்கப்பட்டது.

### சிவபூமி

எட்டாம் நூற்றுண்டுக்கு முன்பு வாழ்ந்த திருமூலர் தமது திருமந்திரம் என்ற தத்துவநூலில இலங்கையை சிவபூமியென்று குறிப்பிட்டுள்ளார்.

மேரு நடுநாடி
மிக்கிடை பிங்கலை
கூடு மிலவானின்
இலங்கைக் குறியுறுஞ்
சாருந் திலைவனத்
தண்மா மபயத்தூ
டேறுஞ் சூழுனை
இவைசிவ பூமியே.

சைவ சிந்தனையாளர்களில் ஒருவரான உமாபதி அவர்களும் தமது கோயில புராணத்திலஇதனை வலியுறுத்தியுள்ளார்.

வலங்கைமான் மழுவேஎன்
போற்றும் வாளர
வரசைநோக்கி
யலைந்திடும் பிண்டமண்ட
மனவசமாதலாலே
யிலங்கைநே ரிடையோ
மற்றை யிலங்குபிங்
கலையாநாடி
நலங்கிளை ரிமயநேர்போ
நடுவபோஞ்சுழுனை நாடி.

பத்தொன்பதாம் நூற்றுண்டில புகழ்பெற்ற அறிஞரான சேர் விலலியம் ஜோன்ஸ் என்பவர் இலங்கை கண்டெடுக்கப்பெற்ற புராதன இந்து சின்னங்கள் பலவற்றையும் ஆராய்ந்த பின்னர் 'இந்தத்தீவில நினைவுக்கெட்டாத காலத்துக்கு முன்பே இந்து இனத்தவர்கள் குடியேறியிருந்திருக்கிறார்கள்' என்று குறிப்பிட்டுள்ளார். ஐந்தாம் நூற்றுண்டின் பெருமைக்குரிய ஸ்கந்தபுராணத்தின் ஒருபகுதியான தக்ஷிண கயிலாச மான்மியத்தில பழங்கால இலங்கையில இந்து மதம் வகித்த இடம்பற்றி பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (தொடரும்)

## வல்லடி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் யாரோ, அவருக்கு ஆயிரம் கும்பிடுகள்!)

தத்துவத்தில 'தத்'திலலையென்றால, சட்டத்தில் 'நுணுக்க'மாவது வேண்டாமா? கிடைத்ததுதான் இளைத்த இரும்பென்றாலும் கொல்லனுக்குமா சக்தியற்றுப்போச்சு! (பேனு, உபமான உபமேயங்களில இடறுகிறதற்காக திலலைநாதன் மன்னித்தருளவேண்டும்.) அறிவுப்போர் நடக்குமென்று ஆவலோடு காத்திருந்தவர்கள் அங்காடிச் சண்டையலலவா இது என்று அங்கலாய்த்துக்கொண்டார்கள்.

குறள் சட்ட நூல என்று கட்டைக் குரலில முழங்கிய ஒருவர், எழுதிக்கொண்டு வந்த வள்ளுவர் குரலொன்றை சபையில வாசித்துக் காட்டப் பட்டபாடு! நலல வேடிக்கை. போங்கள்!

மத்தியஸ்தர்களின் தீர்ப்புரைக்க முன் வந்த திரு. திலலை நாதனின் சில குறிப்புகள் சபையோர் கருத்தையே பிரதிபலிப்பதாகவிருந்தது. பேசியவர்களின் தலைப்பில ''ஐஸ்'' வைக்காமல பட்டவர்த்தனமாகச் சில குறைபாடுகளை எடுத்துக் கூறினர்.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பு ஒரு பக்கம் கிடகக - தத்துவமாவது வெங்காயமாவது, சட்டமாவது சாம்பிராணியாவது என்ற-சலிப்புத்தான் சபையோர் தீர்ப்பாக எனக்குப்பட்டது.

குறள் தப்பியது வள்ளுவர் புண்ணியம்!

மேடையிலே கொலுவமர்ந்த வள்ளுவரின் வதனத்தில அமைதியான புன்னகை நெளிவதைக கண்டேன்,

''பொய்யாமொழி''

# நாட்டின் அபிவிருத்தி கிராமங்களில் தங்கியுள்ளது

## மட்டக்களப்பு காந்தி நூற்ருண்டு விழாக் குழுவின் சேவை

['இந்தியாவின் ஆன்மா, அதன் லட்சோப லட்சம் கிராமங்களில்தான் தங்கியுள்ளது' என்றார் காந்திஜி. ஈழத்துககும் இது பொருந்தும். கிராமங்களின் அபிவிருத்தியில்தான் நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது. காந்தி நூற்றுண்டு மட்டககளப்பு விழாககுழுவின் சேவை நாட்டின் ஏனைய பாகங்களைச் சேர்ந்தோருககும் நல்லுதாரணமாய் அமையும்என்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை. [ஆசிரியர்]

காலமென்னும்மண்மீதில் அடிச்சுவடுகளை விட்டுச் சென்ற மகான்களில் இருபதாம் நூற்றுண்டு கண்ட அரும்பெரும் புருஷர் காந்திஜி.

இவ்வருடம் காந்தி நூற்றுண்டைக் கொண்டாடுவதற்காக எங்கிலும் கோலாகலமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்ணலுக்கு நாம் அஞ்சலி செலுத்துவது எப்படி? கூட்டம், கொண்டாட்டம், களியாட்டம் என்ற சம்பிரதாய சால்ஜாப்புகள் மட்டும் மஹாத்மாவுக்கு நாம் செலுத்தும் மரியாதையாகிவிடாது.

இப்படி சம்பிரதாயச் சடங்குகளில் மட்டும் நாட்டம்கொள்ளாது ஆக்கபூர்வமான வழிகளில் காந்திநூற்றுண்டைக் கொண்டாடுவதற்கு காந்திநூற்றுண்டுமட்டக்களப்பு மாவட்ட விழாக்குழு முன்வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதே.

மட்டக்களப்பு மாவட்ட விழாக்குழுவின் வேலைத்திட்டங்களும் இதுவரை அக்குழு செய்து முடித்துள்ள சேவைகளும் பாராட்டப்படவேண்டியவையாகும்.

மகாத்மாகாந்தி நூற்றுண்டுவிழாவைக் கொண்டாடுதற்கு வேலைத் திட்டமொன்றை உருவாக்குவதற்காக மட்டககளப்பு மாவட்டத்தைச்சேர்ந்த முக்கிய பிரஜைகள் சென்ற ஆண்டு ஆகஸ்ட் ஏழாந்திகதி மகாநாடொன்றைக் கூட்டினர்கள். அப்பகுதி பாராளுமன்ற அங்கத்தவர்கள், வழக்கறிஞர்கள், அரசாங்க சேவையாளர்கள் உட்பட பல பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். மட்டக்களப்பு மாவட்ட விழாக்குழுஉருவாகியது. மாவட்ட அரசாங்க அதிபர் விழாக்குழுவின் தலைவரானார்.

அண்ணல் தம்முடைய ஆவியுடலை எந்த உயர்லக்ஷியங்களுக்காக அர்ப்பணித்துச் சென்றாரோ அந்த லக்ஷியங்களின் வழிப்பட்டதாய் விழாக்குழுவின் வேலைத்திட்டங்கள் அமையவேண்டுமென முடிவாகியது.

### வேலைத்திட்டம்

பின்வரும் அம்சங்கள் வேலைத்திட்டத்தில் அமைந்தன.

(அ) மஹாத்மாவின் வாழ்வும் வாக்கும், மஹாத்மாவின் அஹிம்சா கோட்பாடுகள், மஹாத்மாமானிடத்துக் காற்றிய அருந்தொண்டு முதலானவற்றை மக்கள் அறிந்துகொள்ளுமாறு பிரச்சாரம் செய்தல்.

(ஆ) மஹாத்மாவின் வாழ்க்கையையும், அன்




(15-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவும் கனியும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்ண முடியேல்ல..'— கிழவர் நிலைகொள்ளாமல் தவிக்கின்றார்.

'டக்!'— மேசைமேலிருந்த கடிகாரம் ஒலிக்கிறது. நிமிர்கிறார்.

—'ஒன்றரைமணி!'

நடந்து நடந்து கால்கள் ஓயவே, அங்கு போடப்பட்டிருந்த கட்டிலில் அமர்கிறார்.

—'கிறீச் கிறீச்!'— என்று கட்டில் ஓலமிட்டு, அசைந்து கொடுக்கிறது. அது அவருக்கு வேதனையாக இருக்கிறது. அவரின் தளர்ச்சியை நினைவூட்டுகிறதோ? கட்டிலின், தலைமாட்டிலிருந்த ஸ்டூலை நகர்த்தி இழுத்து அதன்மேலிருந்த செம்பை எடுத்து, வாயில் ஊற்றித், தலைவாசலின்பக்கத்துத் தட்டியை ஒரு கையினால் விலத்திக்கொண்டே துப்புகிறார்.

வயிற்றில் 'கடகட'வென்ற தவளைச் சத்தம் வெறுமையான வயிற்றில் தகரப் பேணியில் கற்களைப் போட்டுக் குலுக்குகின்ற பிரமையின் நோக்காடு.

'வயித்தில வாயுகூட குடிகொண்டுட்டுது. இவளவை என்னைக் கொஞ்சமாவது கவனிக்கிறாளவையே... எல்லாம் அந்தப் புண்ணியவதி போனாள். அதோட எல்லாப் எனக்குப் போச்சு... இல்லாமலே பழைய மனிசர் சொல்லிவைச்சவை...' மனைவியோட அறுசுவை போம்'எண்டு... என்ர நாக்கை நல்லா வளத்துப்போட்டு அவள் போயிட்டாள்... இவளவையோ காலமை தந்த இடியப்பத்தைவிட வேறொண்டையும் கண்ணில காட்டுறாளவையில்ல..' நினைவுகள் வயிற்றின் கடுகடுப்பில் சீறி எழுகின்றன.

'இவளவைக்கும் என்னவிட வந்திருக்கிறவைதான இவைககுப் பெரிசாப் படுகினம்... இவைதான நாளைக்கு இவையை வந்து தாங்கப் போயினம் எல்லாத்துக்கும் இந்தக் கிழவனிட்ட வந்துதான் பல்லைக் காட்டணும்... எல்லாம் என்ரபிழை. நான் கொடுத்த இடம்... இனிப் பாக்கிறனே... நானும்' —என்ற சிந்தனையினூடே எழுந்த எரிச்சலைத் தணிக்க செம்புத் தண்ணீரை எடுத்து நான்கு 'முறடுகள்' விழுங்குகின்றார். பசிநாக்கில் தண்ணீர் ஒருவித அருவருப்புச் சுவையைத் தருகின்றது. வயிற்றின் கடுகடுப்புக் கொஞ்சமும் தீரவில்லை.

மடியைத் தொட்டுப் பார்த்துப் பிரிக்கின்றார். ஒரேயொரு சுருட்டு மடியிலிருந்து கையில் உருள்கின்றது. திருட்டுப் பார்வையுடன் அதனை எடுத்துக்கொண்டு சுற்றுமுற்றும் பார்க்கிறார். அதனைக்கண்டால் மூத்த பேத்தி ஓடிவந்து பறித்துவிடுவாள்.

'உங்களைச் சுருட்டுப் பிடிக்கக் கூடாதெண்டெல்லே டாக்குத்தர் சொன்னவர்' என்று சண்டை பிடிப்பாள். கிழவருக்கு பேத்தி சாரதாவின் நினைவு வந்துவிடுகிறது.

'அவள் சரியா குணத்திலும், உருவத்திலும் என்ர நாச்சியார் பாக்கியத்தைப் போலத்தான்... அவளப் பாத்துப் பாத்துத்தான் என்ர பாக்கியத்தின்ர மறைவை மறக்கிறன்... அவள் பேசேக்கை தலையைச் சாய்த்து சிரித்துப் பேசுறது அப்படியே பாக்கியத்தை உரிசு வைச்சிருக்கிறது....அதாலதான எனக்கும் அவளில இந்தப் பற்று... இல்லாட்டி அவளுக்கு இந்தக் காணியை எழுதிக்கொடுக்கிறன் எண்டு சொல்லுவனே... ஆனா அவளும்தான் இப்ப வரவர மாறிப்போயிட்டாளே... என்னைக் கொஞ்சமும் கவனிக்கிறதில்ல... முந்தியெண்டால்... என்னணை அப்பு வேணும் எண்டு கேட்டுக் கேட்டுச் செய்யிறவள்... இப்ப ...' — நெஞ்சத்திலிருந்து பெருமூச்சொன்று எழுகிறது. சுருட்டைப் பற்றவைக்கும் ஆவலில் சுருட்டை முகர்ந்து முனையைக் கிள்ளி வைத்துத் தும்பைக் கடித்துத் துப்பிவிட்டு, வாயில் வைத்துக்கொண்டு நெருப்புப் பெட்டியைத் தேடுகின்றார்.

'எங்க வைச்சன்?... வரவர ஒண்டும் வைக்கிற இடமே தெரியுதில்ல... மறதி கூடிப்போச்சு... இந்த மறதியாலதான இப்ப ஒருத்தரும் வீட்டில மதிக்கிறேல்ல. ஓம்... ஓம்... நான் விட்ட இடம்தான். நான் எல்லாரையும் வீட்ட விட்டு எழும்பச் சொன்னா எழும்ப வேண்டியவைதான...' என்ற ஒரு வக்கிரமான எண்ணம் மனதிலே எழுகின்றது.

'அவையளுக்குக் கொஞ்சமும் தங்கட நிலை தெரியுதில்ல... நான் நினைச்சனெண்டா இந்தக் காணியைக் கோயிலுக்கு எழுதிவைச்சுட்டுப் போயிடுவன்... என்ர காணியில இருந்துகொண்டு அவையின்ர நடப்பைப் பார். பாரனங்க... நல்லா நடக்குது உபசாரம்... இங்க ஒரு மனுசன் இருக்கிறான் எண்ட சிந்தனை எப்பனும் இருக்கா அதுகளுக்கு. ஆ... கட்டிலுக்காலோடு நெருப்பெட்டி கிடக்க... நான் இங்க கிடந்து தடவுறன்...'

—அதனைத் தடவி எடுக்கின்றார். எடுக்கும்போதே சந்தேகம் நடுக்கங்கண்ட, இரத்தத்தின் ஈரமே வற்றிய விரல்கள் பதட்டத்துடன் நெருப்புப்பெட்டியைத் தள்ளிப்பார்க்கின்றன.

பெட்டி காலி.

முகத்திலே ஏமாற்றம் புகையாய்க் கவிகின்றது. ஆத்திரம் அனலாகப் பற்றுகிறது.

மகள் கமலம் யாரையோ வலிந்து உபசரித்துக் கொண்டிருப்பது கண்ணில் பதிகிறது.

'என்ர நாச்சியார் இருந்தா... என்னை இப்படிப் பரிதவிக்க விடுவாளே. இதுக்கிடையில பத்துத்தரம் வந்து என்ன? ஏது எண்டு விசாரித்துக் கவனித்திருப்பாள். எனக்கு என்ன தேவையெண்டு குறிப்பாலயே உணர்ந்து செய்வாள்... அவள் என்ன இப்பத்த பெண்டுகளைப் போலவே... தவிச்சவாய்க்குத் தண்ணி கொடுக்கத் தெரியாம ஏன் சாப்பிடுற இடத்தில தண்ணி வைக்க மறக்கிறவைபோலயே... என்ர ராசாத்தி இருக்கேக்க நான் எப்பவும் பசியோட இருந்திருக்கிறனா? இல்ல...அவள்தான் இருக்க விட்டிருப்பாளா? நான் ஏதும் கோபத்தில சாப்பிடாம இருந்திட்டா ... இல்லாட்டி சாப்பாடு வேணும் எண்டிட்டா அவளும் சாப்பிடாமப் பட்டினி கிடந்து என்னைச் சாப்பிடவைச்சிருப்பாள்... என்ர திமிரில எவ்வளவு கஷ்டத்தை அவளுக்குக் குடுத்திருப்பன். குழம்புக்கு உப்புக் கூடிற்று அதுக்கு அடி... சொதி புளிகூடிற்று அதுக்கு ஏச்சு... எண்டு எத்தனை சித்திரவதை செய்திருப்பன்.. ஆனாலும் ராசாத்தியின்ரை சமையல் சமையல்தான். அதைத் திண்டவாய்க்கு இன்னொரு சமையலைத் தின்ன முடியுமே... என்னமோ என்ர கெட்டகாலம் இதுகளிட்ட சோத்துக்குக் கையேந்தி நிற்கவேண்டியிருக்கு.

'அவ மஞ்சள் குங்குமத்தோட போயிட்டா. நான்தான் இங்க நரகத்தில கிடந்து அழுந்திறன். அவளில்லாத உலகம் எனக்கு நரகம்தான... அந்தப் புண்ணியவதி போகேக்கையும் என்ர கவலையோடதான போனவ. சாகிற வேளையிலும் மகளை அழைச்சி என்ன சொன்னவ...

'பிள்ளை நான் போனப்புறகு நீதான் அப்புவைப் பாத்துக்கொள்ளோணும்— உனக்குத்தான் அவற்ற குணம் தெரியுமே... கோபம்தான் 'சுடுபுடெ'ண்டு வருமேதவிர வேறொண்டும் தெரியாது... அவரையும் உன்ர புள்ளயளில ஒண்டாப் பாத்துக்கொள்... நேரகாலத்துக்குச் சாப்பாட்ட கொடுத்திடு... இல்லாட்டி பசியால துடிச்சிடுவார்.. நானும் அவற்றை நாக்கை வேறு நல்லா வளர்த்துப் போட்டன்... நீ அவரை நல்லாக கவனிச்சுக்கொள்...'

'என்ர ராசாத்தி என்னைப் புருசனைப் போலயே பார்த்தவள்... தாயைப்போல... புள்ளையப்போல எல்ல பார்த்தவள்... அவளின்ர குணத்துக்கும், அழகுக்கும் இப்ப பொம்பிளையள் இருக்கினமே... என்ர மகளும் பேத்தியும் அப்படி இருப்பினம் எண்டுதான் நினைச்சன்... அவையளும் இப்ப காலத்துக்கேற்ற கோலமா நடக்கினம்... எண்டாலும் சாரதா சரியா அவள் மாதிரித்தான்... அவளப் பாக்கேக்கை எனக்கென்னமோ மனசுக்கு ஆறுதலாக இருக்கு...'

—அடுத்த வாரம் முற்றும்

# விடிய இன்னும்

(6-ம் பக்கம்) பார்க்கத்தொடர்ச்சி)

யாட்டு. உள்ள புள்ளையள் நித்திரையோ முழிப்போ தெரியாது? வ்வாக்...'' (ஓங்காளிக்கிறாள்)

கந்:- என்னப்பா இது?

பாக்:- ஒண்டுமில்லையப்பா... ஏதோ வயித்தைப் புரட்டிக்கொண்டு... வ்வாக்!...

கந்:- (துடித்துப் பதறி) என்னப்பா இது?

பாக்:- (அவள் முகம் இருண்டு) எனக்கென்னமோ பயமாயிருக்கு! நாலைஞ்சு வருஷத்துக்குப்புறகு இப்படி கடவுள் ஏன்தான் சோதிக்கிறாரோ?

கந்:- (பயத்துடன்) என்னப்பா சொல்லுறீர்? பழையபடி . அதுவா?

பாக்:- ஓம்போலத்தான் கிடக்கு . இல்லாட்டி.. இப்படி அந்த நேரத்திலதான் முதல் மாதத்தில எனக்குச் சத்தி வாறது.

கந்:- அப்படி எண்டா எங்கட திட்டமெல்லாம் குலைஞ்சுபோம்போல கிடக்கு.. பூமணிக்குக் கலியாணம் பேசிறபோது உமக்கு இப்படி பேந்து அவளின்ர உதவியில்லாம நீர் எப்படித் தனியா.. அந்தச் செலவு வேற..

பாக்:- (அழுதபடி) நான் என்ன செய்ய.. வ்வாக்... வ்வாக்...

(பலமாகச் சத்தி எடுக்கிறாள். பூமணி ஓடி வருகிறாள்)

பூ:- அம்மா!... அம்மா...என்னம்மா செய்யுது?

பாக்:- ஒண்டுமில்லைப்பிள்ள... நீ போய்ப்படு... வ்வாக்... (ஓங்காளிக்கிறாள்)

கந்:- என்ன ஒண்டுமில்ல... பூமணி... உனக்கொரு இன்னொரு தம்பியோ, தங்கச்சியோ வரப்போகுது... அதுக்குத்தான் இந்த ஆரம்பம் (இனம் விளங்காத சிரிப்பு)

பூ:- (திகைப்புடன்) என்னம்மா... உண்மையா? அப்படியெண்டா?

(பூமணி தாயின் முகத்தையே வியப்புடனும் அதிர்ச்சியுடனும் பார்த்துக்கொண்டு நிற்க, பாக்கியம் வெக்கத்தால் கூனிக்குறுகிப்போய்த் தலைகுனிந்து இருக்கிறாள்)

பாக்:- 'சரி... புள்ள நீயேன் நிக்கிறு... போய்ப்படு'

பூ:- 'என்னம்மா... இதுக்கென்ன வெக்கம்?'

பாக்: (கூச்சத்துடன்) 'நல்லாத்தான் இருக்கு... நாளைக்கு அயலில எவ்வளவு கேலியாப் பேசப் போறாங்க. 'மகள் கலியாணத்துக்கு நிக்க தாய் இப்படி'யெண்டு.'

பூ:- 'போம்மா— இதுக்கென்ன வெக்கம்... உலகத்தில இப்படி நடக்கிறேல்லயே?'

பாக்:- உனக்கொண்டும்விளங்காமப் பேசுற பூமணி தம்பிக்குச் செலவு. அதோடை எனக்கு இனிச் செலவு. இதுக்கிடையில உன்ரை கலியாணத்தை எப்படி நடத்தப்போறமோ தெரியேல்ல... அதோட நீயும் போயிட்டா... நான் எப்படி இந்த நிலையில...

பூ:- (உறுதியுடன்) அம்மா... என்ர கலியாணத்தை கொஞ்சம் தள்ளிப்போட்டா என்ன?

கந்:- (பதறி) நீ என்ன சொல்லுற பிள்ள...,

பூ:- 'இல்லய்யா முதல்ல தம்பிககு வேலை கிடைச்சு...அம்மாவும் சரியாப் போனப்புறகு கலியாணம் நடந்தாத்தான் நல்லது... இல்லாட்டி நான் அங்க போய் இந்தக் குடும்பத்தைப் பற்றியே நினைச்சுக் கொண்டிருக்க... அது நல்லா இராது. எல்லாத்துக்கும் என்ர கலியாணத்தைத் தள்ளிப்போடுறதுதான் நல்லது. என்ர கலியாணக் கடனோட தம்பிக்கும் கடன் பட்டா பேந்து மீளேலாது...'

கந்:- (பெருமூச்சுடன்) 'உண்மைதான் புள்ள... எல்லாம் ஆறுதலா யோசிச்சு ஒரு முடிவுக்கு வருவம்... காலையில பார்த்துக் கொள்ளலாம். நீ போய்ப்படு...'

(பூமணி மீண்டும் நடு அறைக்குள் போய்விடுகிறாள்)

பாக்:- (விம்மலுடன்) கடவுள் ஏன்தான் எங்களைச் சோதிக்கிறாரோ தெரியாது. ஒரு சுமையை இறக்கலாமெண்டு பார்த்தா இன்னொரு சுமையைக் கொண்டுவந்து தாறார்... என்னால என்ர பிள்ளையின்ரை கலியாணம்கூடத் தடைப்படுது...

கந்:- (அதட்டலுடன்) 'பாக்கியம் என்ன பேசுறாநீ? இதெல்லாம் எங்கட கையிலயே கிடக்கு? ஏதோ கடவுள் தாறதை வேண்டாமென்கிறதே? இதெல்லாம் ஏதோ நன்மைக்கெண்டு நினைக்க வேண்டியதுதான்... நல்லா நேரமாச்சு.. சாமமாவும்போச்சு புள்ளத்தாச்சி நித்திரை கொள்ளாம இருக்கக் கூடாது. பேசாமபடு விடிய இன்னும் நேரமிருக்குக் கனக்க...'

(இருவரும் பாயை விரிக்கின்றனர். கந்தையா எரிந்துகொண்டிருந்த, அரிககன் விளக்கை அணைக்கிறார், விருந்தையில் இருட்டுக் கவிகிறது)

—திரை—

# நாவலர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கைச் சனங்களுள்ளே முககாற்பங்கினர் வேளாண் டொழிலனர். இவர்கள் தொழில் வன்மையும்முயற்சியும் உடையர்களல்லாமையால், இலங்கைககுப் போதும் அளவினதாகிய நெல்விளைகின்றில்து.

இங்கிலாந்தினு மூன்றிலொரு பங்கு சனங்கள்மாத்திரமே வேளாண் மக்கள். அங்ஙனமாகவும், அவர்கள் தங்கள் தேசத்துக்குப் போதும் அளவினதாகிய தானியம் விளைவித்துக் கொள்கிறார்கள்.

இலங்கையிலே ஆறிலொரு பங்கு நிலம்மாத்திரமே வேளாண்மை செய்யப்படுகிறது. இலங்கை வாசிகளுக்கு வேளாண்மையிலே துரைத்தனத்தாருடைய சகாயம் போதுவதன்று. துரைத்தனத்தார் இங்குள்ள காடுகளை அழித்து நாடுகளாக்கி, ஏரிகளைத் திருத்தி நீர்ப்பாய்ச்சுவிப்பாராயின், இலங்கைக்குப் போதும் அளவினதாகிய நெல் விளையும்.''

இப்பொழுது அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளைப் பார்க்கும்பொழுது, மேற்பந்தியில் கூறப்பட்டவை எவ்வளவு தீர்க்கதரிசனத்தோடு எழுதப்பட்டவை என்பது புலப்படுகின்றது.

## வரிகள்

இலங்கை அரசாங்கம் அக்காலத்திலும் இக்காலத்தைப்போலவே மதுபானத்திலிருந்தே பெரும்பகுதியான வருமானத்தைப் பெற்றது. இதுபற்றி இந்நூலில் எழுதியிருப்பதைக் கொண்டு இந்நூல் நாவலர் அவர்களாலே எழுதப்பட்டதென்பதைத் தீர்மானிக்கலாம். வரிகளைப்பற்றி எழுதியிருக்கும்பகுதி பின்வருமாறு:- ''வறுமைக்கும் துன்பத்துச் சகல பாவங்களுக்கும் பிறப்பிடம் மதுபானம். இலங்கையிலே பூர்வகாலத்தில் மதுபானம் மிக அரிதரிது; தற்காலத்திலோ, அது விருத்தியாய்க்கொண்டேவருகிறது. துரைத்தனத்தாருக்குச் சாராயத்தினால் 1852-ம் வருஷத்து வருமானம் ஏறக்குறைய 6,00,000 ரூபா; 1872-ம் வருஷத்து வரவு ஏறக்குறைய 20,00,000 ரூபா, கல்வியிலும், நாகரிகத்திலுஞ் சிறப்புற்ற ஆங்கிலேய துரைத்தனத்தார், தமக்குச் சாராயத்தால் எய்தும் பொருளைப் பிறவாயில்கள் சிலவற்றால் எய்துவிக்கத் தலைப்பட்டுக் கொண்டு, சாராயத்தை ஒழிப்பாராயிற்றான், இலங்கைச் சனங்கள் நல்லொழுக்கமும், செல்வமும், ஆரோக்கியமும், தீர்க்காயுசும் அடைவார்கள்.'

## ஊர்கள்பற்றி விளக்கம்

ஊர்கள்பற்றி எழுதியிருப்பதிலிருந்தும் இந்நூலை நாவலர் அவர்களே எழுதியிருக்கவேண்டுமென்று ஆரம்பத்தில் கூறினோம். இதற்கு உதாரணமாக திருநெல்வேலியைப்பற்றிக் கூறியிருப்பதை எடுத்துக் காட்டி இக்கட்டுரையை முடிப்பாம். ''திருநெல்வேலி—நல்லூர்க் கோட்டத்தைச்சார்ந்த நத்தங்களுள் ஒன்று. இங்கே சிங்கையாரிய சக்கிரவர்த்தியினால் இருத்தப்பட்ட கார்காத்த வேளாளருள்ளே முடிதொட்ட வேளாளராகிய பாண்டி மழவர்பதியிற் தோன்றிய ஞானப்பிரகாச தேசிகர் சிதம்பரத்திலே ஞானப்பிரகாசம் எனப் பெயரிய திருக்குளம் இயற்றுவித்தவர். சமஸ்கிருதத்திலே சில சிவாகமங்களுக்கு வியாக்கியானமும், சில சைவசித்தாந்த சாத்திரங்களும், தமிழிலே சிவஞான சித்தியாருக்கு ஒருரையும் இயற்றினவர்.''

ஞானப்பிரகாச தேசிகர் நாவலர் அவர்களின் முன்னோரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அபிவிருத்தி

(13ம் பக்கத் தொடர்ச்சி)
ஞரின் போதனை, சாதனை களையும் படித்தறியும் ஆர்வத்தை இளம் பரம் பரையினர் மத்தியில் தூண்டிவிடல்.

(இ) மஹாத்மா காட்டிச்சென்ற வழியில் நடைமுறைக் கிராம அபிவிருத்தித் திட்ட மொன்றை செயற்படுத்துதல்.

வேலைத்திட்டத்தின்இப்பல் வேறு அம்சங்களைச் செயல் படுத்துவதற்காக உபகுழுக்க ளும் தெரிவு செய்யப்பட்டன.

## சாதனை

இவ்வாண்டு ஏப்ரில்மாத இறுதிவரை விழாக்குழு அதன்வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் கணிச மான சாதனைகளைக் காட்டியுள்ளது.

அறிஞர்கள் பலர் கலந்து கொண்ட பொதுக்கூட்டங் கள் நடத்தப்பட்டுள்ளன. பாடசாலைச் சிறார்களுக்கான பேச்சுப்போட்டிகளும், கட்டுரைப்போட்டிகளும் மும் மொழிகளில் நடத்தப்பட்டுள்ளன.

கிராமஅபிவிருத்தித் திட்டத்தைச் செயற்படுத்துவதில் விழாக்குழுகாட்டியுள்ள அக்கறை விசேடமானதாகும். இதுவரை அதன் சாதனைகள் பாராட்டுக்குரியவை.

உதாரணத்துக்குச் சில. மண்முனை வடக்கு டி.ஆர்.ஓ. பிரிவைச்சேர்ந்த சதுருகொண்டான் கிராமத்தில் ஒரே நேரத்தில் 10,000 தென்னம் மட்டைகளை தண்ணீரில் தோயவைப்பதற்கு வசதியாக பரவைக் கடலில் நாலுவேலிகள் அமைக்கப் பட்டுள்ளன. கயிறு திரிக்கும் நிலையமொன்றும் நிர் மாணிக்கப்பட்டு முடியுந் தறுவாயிலிருக்கிறது. வீட்டுத்தோட்ட வேலைகள்ஊக்கி விடப்பட்டுள்ளன. 48கிராம மக்கள் பங்குகொண்டு, தங்கள் வீட்டுத் தோட்டங்களில் மரக்கறி, கிழங்குவகைகள், வெங்காயம் ஆகியன பயிர்செய்து பலன்பெறுகின்றனர்.

1 3/4 மைல் நீளம் கிராமப்பாதை சிரமதானத்தினுல் சீர்செய்யப்பட்டுள்ளது.

## ஆலங்குளம்

கோறளைபத்து டி. ஆர்.ஓ. பிரிவைச்சேர்ந்த ஆலங்குளம் கிராமத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தொழில் முகாமினுல் 25 ஏக்கர்வரையிலான பங்கீட்டு நிலப்பகுதிகளுக்கு மூன்றே நாட்களில் வேலிகள்மைத்துக் கொடுக்கப்பட்டன. அதேகாலஅளவுக்குள் 10,000 துண்டு மரவள்ளிகள் வீட்டுத் தோட்டங்களில் நாட்டப்பட்டன. அத்துடன் 3 ருத்தல் மிளகாய், 12 ருத்தல் பயறு முதலானவையும் அதே தோட்டங்களில் விதைக்கப்பட்டன.

இக்கிராமத்தில் ரூபா 8000/- உத்தேச மதிப்பான பாடசாலைக் கட்டிடமொன்றும் கிராம அபிவிருத்தி இலாக்காவின் சுய - உதவித் திட்டத்தின்கீழ் நிர்மாணிக் கப்பட்டு, திறந்து வைக்கப் பட்டுள்ளது. இக்கலவன் பாடசாலையில் இன்று 40 குழந்தைகள் கல்வி பெறுகின்றனர். இவர்களைப் பாடசாலைக்குச் செல்ல ஊக்குவிப்பதற்காக ரூபா 300/- பெறுமதியான இலவச உடைகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமக்குளத்தை உப யோகத்துக்கு மீட்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நீர்ப்பாசனப் பகுதியால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

கிராமத்தில் தேனி வளர்ப்பும் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. 25 தேனி வளர்ப்புக் கூடுகள் கிராமத்தவர்களுக்கு விற்கப்பட்டுள்ளன. விவசாய இலாகாவைச் சேர்ந்த தேனி வளர்ப்பு நிபுணரொருவரின் கண்காணிப்பில் ஏற்கனவே கிராமவாசிகள் சிலர் தேனி வளர்க்கத் தொடங்கிவிட்டனர்.

## காந்திபுரம்

மான்முனை தெற்கு -எருவில் போரதீவு டி. ஆர். ஓ. பிரிவைச் சேர்ந்த காந்திபுரம் கிராமத்தில் இரண்டு மைல் நீளபாதை சிரமதானத்தினுல் சீர் செய்யப்பட்டுள்ளது. கடந்த வேளாண்மைப் பருவத்தின்போது 5ஏக்கர் வயலில் சிரமதானம் மூலமாக களை பிடுங்கப்பட்டுள்ளது. 20 வீட்டுத் தோட்டங்கள் உண்டாக்கப்பட்டு மரக்கறிகளும், கிழங்குகளும் வெங்காயங்களும் பயிரிடப்பட்டுள்ளன.

ஏருவூர் பத்து டி. ஆர்.ஓ. பிரிவைச் சேர்ந்த மாவடி வேம்பு கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கமும், கூட்டுறவுக்கடனுதவிச் சங்கமும் மீண்டும் புத்துயிரூட்டப் பட்டுள்ளன கூட்டுறவுகடனுதவிச் சங்கத்தின் அங்கத்வர் தொகை 33ஆக உயர்ந்துள்ளது. இக்கிராமத்திலுள்ள வேலையற்ற பெண்களுக்குத் தொழில் வாய்ப்பு நல்குவதற்காக இச்சங்கம் ஓலைபின்னும் தொழிலை ஆரம்பித்து வைப்பதற்காக முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

இக்கிராம மக்கள் பயன் பெறுவதற்காக வேண்டிக் கிராம அபிவிருத்திப் பயிற்சிநிலையம் கூடை பின்னுவதற்கான இரண்டு வாரப் பயிற்சி வகுப்பை நடத்தியது. கிராம அதிவிருத்திச் சிறுகைத்தொழில் பகுதியைச் சேர்ந்த அனுபவம் வாய்ந்த ஒருவரால் இவ் வகுப்பு நடத்தப்பட்டது. கிராமவாசிகளில் பெரும்பாலானவர்கள் மூன்று நான்கு வகைப்பட்ட கூடைகளைப் பின்னுதற்குப் படித்துக் கொண்டனர். சீவனோபாயத்திற்கான ஓர் உபமார்க்கமாக அவர்கள் இப்பொழுது கூடை பின்னும் தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

மான்முனை மேற்கைச் சேர்ந்த கெழுத்திமடு கிராமத்தில் கிராம அபிவிருத்தி இலாக்காவின் சுய—உதவித் திட்டத்தின்கீழ் தொழிலுற்பத்திச்சாலையொன்று நிறுவுவதற்காக நிதி உதவப் பட்டுள்ளது. இக் கிராமத்தில் கூடியகெதியில் பாய்முடைதல் ஓர் உற்பத்தித் தொழிலாக ஆரம்பித்து வைக்கப் படும்.

## காந்திரோடு

மான்முனை மேற்கு டி. ஆர் ஓ. பிரிவைச் சேர்ந்த குறிஞ்சி முனைக்கும், பாவட்டக் கொடிச்சேனைக்கும் இடையே எட்டுமைல்நீளப் பாதையொன்று சிரமதானத்தின்மூலம் நிர்மாணிக் கப்பட்டு வருகிறது. இப் பாதைக்கு ''மகாத்மா காந்தி ரோடு'' எனப் பெயர் சூட்டப்படும். இந்தப்பாதையில் செய்யப்பட வேண்டிய மண்வேலைகளின் உத்தேச மதிப்பு ரூ. 100,000/. பாவட்டக் கொடிச்சேனையின்ஒரு முனையிலிருந்து ஏற்கனவே இரண்டுமைல் நீளத்துக்கு இப்பாதை திறந்து வைக்கப் பட்டுவிட்டது. இந்தவேலையின் உத்தேச மதிப்பு ரூ. 10,000/. ஏனைய ஆறு மைல்களையும் ஜூன் 21ந் திகதி திறந்து வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்தப் பாதை [illegible] அதிகமான ஜனத்தொகையினருக்கும் சுமார் 5000 ஏக்கர் வயல்களுக்கும் பெரும் நன்மை பயப்பதாகும். விவசாயத்திற்கும், பயிர்ச் செய்கைக்கும் புதிய நிலங்களைப் பயன்படுத்துவதற்கு இது வழிகோலும். உரமும், ரசாயன மருந்துவகைகளும் கிடைப்பதற்கான வசதிக் குறைவு காரணமாக இப் பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள உணவு உற்பத்தி இப் பாதை காரணமாக அபிவிருத்தியுறுவது திண்ணம்.

கோறளைப்பத்து டி. ஆர். ஓ.பிரிவைச் சேர்ந்த்வாகரை கிராமத்தில் வீடற்றவர்களுக்காக 37 வீடுகளை நிர் மாணித்துக் கொடுப்பதற்காக கிராம மட்டத்தைச் சேர்ந்த ஸ்தாபனங்களோடு ஆரம்பப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்துள்ளன. இத்திட்டத்தினுல் 8 மீனவர் குடும்பங்களும், 29 விவசாயக்குடும்பங்களும் நன்மையடையும். சமையலறை உட்பட ஒவ்வொரு வீட்டையும் பூர்த்தியாகக் கட்டிமுடிப்பதற்கு ரூபா 2,500 - செலவாகும். ஒவ்வொரு வீட்டுக்காகவும் அளிக்கப்படும் ஆகக்கூடிய அரசாங்க நிதியுதவி ரூபா 1,000/-மட்டுமே. ஏனைய ரூபா 1,500/-யும் ஈடுகட்டுவதற்காக லங்கா ஜாதிக்க சர்வோதய சிரமதான இயக்கத்தின் உதவியோடு சிரமதானத்தின் மூலமாக கட்டட வேலைகளைமுடிப்பதென ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் வேலைத்திட்டம்ஆரம்பமாகும்.

## நூல்நிலையம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் போதிய நூல்நிலைய வசதிகள் கிடையா. நூல் களைப் படிப்பதற்காக இளைஞர்கள் மத்தியிலே பெருகி வரும் ஆர்வத்தை சமாளிக்கும் வண்ணம் மாவட்டப் பகுதிகளில் ஆங்காங்கே நூல்நிலையங்கள் நிறுவப்படுதல் வேண்டும். எனவே, மகாத்மா காந்தி நூற்றுண்டு விழா நிதியின் உதவியோடும், லங்கா சர்வோதய இயக்கத்தின் உதவியோடும் ஒன்றிரண்டு நூல்நிலையங்கள் நிறுவுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்புமுற்றவெளி மைதானத்தில் திறந்தவெளி யரங்கம் ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் செலவுக்காகவேண்டி மகாத்மா காந்தி நூற்றுண்டு விழா நிதிக்கு ரூபா 15,000/- அன்பளிப்பு செய்வதற்கு கல்கி பீடி கம்பெனி அதிபர் திரு. எஸ். சின்னத்துரை முன்வந்துள்ளார்.

## காந்தி சந்தை

இவ்வாண்டு ஆகஸ்ட் 2-ம் திகதி மட்டக்களப்பில் முற்றவெளிமைதானத்தில்நடைபெறப்போகும் தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் காந்தி சந்தையொன்றையும் ஆரம்பிக்க ஏற்பாடாகியுள்ளது. மட்டக்களப்பில் நிரந்தரமான காந்தி நிலையமொன்று நிறுவுவதற்காகவும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

''இந்தியாவின் ஆன்மா அதன் லட்சோபலட்சம் கிராமங்களில்தான் தங்கியுள்ளது'' என்றுர் காந்திஜி. ஈழத்துக்கும் இது பொருந்தும். கிராமங்களின் அபிவிருத்தியில்தான் நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது. காந்தி நூற்றுண்டு மட்டக்களப்பு விழாக்குழுவின் சேவை நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் [illegible] நல்லுதாரணமாய் அமையும் என்பதில் [illegible] யும் சந்தேகமில்லை.

# 'ஈழநாடு'

# விகட கவிதைப்போட்டி(13)

வேலை தேடி அலைந்து திரியும் பட்டதாரிகளை, பாவம், நேயர்கள் இப்படி தும்பு தும்பாக கிழித்து விட்டார்களே! ஆனுல் எழுதியவர்களில் எத்தனை பேர் பட்டதாரிகளோ?

## பரிசுக் கவிதைகள்

### 1-ம் பரிசு

கசற்றைப் பார்த்திடுவர் உடனே கைப்பணமும்
சேர்த்திடுவர்
வண்டி பிடித்திடுவர் காலை கொழும்பை
அடைந்திடுவர்
அலைந்திடுவர், நன்றுய் களைத்திடுவர்,
களையைப் போக்க
புகைத்திடுவர், களுத்துறையானையும்
ஒருகை பார்த்திடுவர்
ஈற்றில் கைப்பணம் ஒழிய வீட்டை நாடிடுவர்.

எழுதியவர்: த. அருள்குமார், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

### 2-ம் பரிசு

படித்தோம் பட்டம் பெற்றேம் பலன்
தாடியும் மீசையும் வளர்த்தோம், வேலை
தேடினேம் கடன்பட்டோம், கொழும்புக்கு
ஓடினேம் பெரிய கைகளை நாடினேம், பல்லைக்
காட்டினேம் பலனில்லை, பாக்கி சாவொன்றே!

எழுதியவர்: கே. கணபதிப்பிள்ளை, விவசாயப் படை முகாம், விஸ்வமடு, பரந்தன்.

### 3-ம் பரிசு

காலை தொட்டு மாலை வரை காற்செருப்பு
தேய்ந்து அற
வேலை என்னும் புருஷலட்சணம் தேடுகிறுர்
மூலை எங்கும்
பறந்தோடும் குதிரை வால் குமரிகட்கே
முழுத் தொழிலும்
அறப்படித்த ஆணின் பட்டம் வீண்.

எழுதியவர், பி. நவமலர், 82, திருமலை வீதி, மட்டக்களப்பு.

## பாராட்டுக்குரியவை

பின்வரும் நேயர்களின் கவிதைகள் மிகவும் பாராட்டுக்குரியன. மு. சந்திரகுமார், லேக் லேன், சங்கானை. வ. திருச்செல்வம், கலைமகள் வீதி, நல்லூர். ந சக்திவேல், சந்தை வீதி, புங்குடு தீவு. 'நல்லை அமிழ்தன்', கல்விஅலுவலகம், மட்டுநகர். பொ. மங்கையர்க்கரசி, 5-ம் வாய்க்கால், பரந்தன். ச. சாரதா, கோப்பாய் வடக்கு. ச. மரகதவல்லி, 'லிங்கவாசம்', திருநெல்வேலி. கே.கே.ரி. சர்மா, மாவனல்லை. க. மகேஸ்வரன், கரணவாய் தெற்கு, கரவெட்டி. நிம்மி ஸ்ரீநிவாசன், மானிப்பாய் வீதி, உடுவில். சரோஜா சொக்கலிங்கம், ஏழாலை மேற்கு.

## அடுத்த போட்டி

மார்க்கட்டுக்குப் போகும் மினி ஆடை மெல்லியரைப்பற்றி உங்கள் கவிதைத் திறனைக் காட்டுங்கள் பார்ப்போம்.

## நிபந்தனைகள்

ஒவ்வொரு விடையும் அதற்குரிய கூப்பனுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும். விடைகள் 25-7-69 க்கு முன் விகட கவிதைப் போட்டி (13), 'ஈழநாடு', த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு வந்து சேர வேண்டும். ஒருவர் எத்தனை விடைகளையும் ஒரே உறையில் போட்டு அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொன்றுடனும் கூப்பன் இருக்கவேண்டும். போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. சிறந்த மூன்று விடைகளுக்கு முறையே ரூபா ஐந்தும், மூன்றும், இரண்டும் வழங்கப்படும்.

கூப்பன்

'ஈழநாடு' விகடகவிதைப் போட்டி-(13)

பெயர் ..............................................

விலாசம்..............................................

..............................................

திகதி..................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த மாதம் நடுப்பகுதியில்

# பிரதமர் டட்லியும், ஜே. ஆரும் யாழ்ப்பாணம் வருகிறார்கள்

## தேசிய இளைஞர் சேவை வேலையை பிரதமர் ஆரம்பித்து வைப்பார்

(காரியாலய நிருபர்)

**கடந்தவாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைப் பேரவையின் முதலாவது வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவும், ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வருகிறார்கள்.**

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைப் பேரவையின் செயலாளருமான திரு. ரி. முருகேசம்பிள்ளை இத்தகவலைத் தெரிவித்தார்.

இப்பேரவை முதலில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கேகாலைமாவட்டத்தில் பிரதமர் திரு. டட்லியாலேயே அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இலங்கையில் மாவட்ட ரீதியாக இரண்டாவதாக அமைக்கப்பட்டுள்ள இப்பேரவையை இதன் பெரும் தலைவரான திரு.பஸநாயகா கடந்தவாரம் ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணப் பேரவையின் முதலாவது வேலைத் திட்டம் யாழ்ப்பாணத் தொகுதியிலேயே ஆரம்பமாகும் என்றும், இதற்கான வேலையற்ற வாலிபர்கள் பட்டியல் கிராமசேவையாளர்கள் மூலம் பன்னிரண்டு காரியாதிகாரிகள் பிரிவுகள் தோறும் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் திரு. முருகேசம்பிள்ளை மேலும் தெரிவித்தார்.

### தனியே ...

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

1967ம் ஆண்டு ஜனவரி 25ந்திகதி மொராக்கோவை விட்டுத் தன்னுடைய படகில் கனரித் தீவுகளை நோக்கிப் பயணமானர். அங்கிருந்து அவரது பயணம் தாமதமாகியது. அவரது இடுப்புவலியே அதற்குக் காரணம். அவ்வாண்டு மார்ச் மாதம் 16ந்திகதி தான் டெலிகா மீண்டும் அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் பிரவேசித்தார். வெற்றிகரமாக பார்பாடொஸ் தீவை அடைந்தார் டெலிகா. பின்னர் அவர் பனமா கால்வாயினூடாக கலாபகொஸ் தீவுகளையும் மார்க்கோஸாஸ் தீவுகளையும், தாஹிட்டியையும் போயடைந்தார். தாஹிட்டியில் தன்னுடைய படகைப் பழுதுபாக்த்துத் திருத்தும் வரை ஐந்து மாதங்களைக் கழித்தார். பின்னர் பசுபிக் மகாசமுத்திரத்தைக் கடந்து பீஜித் தீவுகளையடைந்தார்.

ஆஸ்திரேலிய விஸா பெறுவதற்காக அவர் அங்கே தங்க நேரிட்டது. போலந்திய மாலுமியை அனுமதிக்க அஞ்சிய ஆஸ்திரேலிய அரசாங்கம், டெலிகா ஆஸ்திரேலியாவின் எல்லைகளில் கால் வைகக அனுமதி மறுத்துவிட்டது. உலக மககளின் ஆத்திரத்தைத்தூண்டிவிட்ட சம்பவம் இது.

டெலிகா இன்னொரு துணிச்சலான முடிவை மேற்கொண்டார். வழியில் எந்தத் துறைமுகங்களிலுமே நுழையாமல்கஸபலான்காவுககுப் பிரயாணம் செய்வது தான்அந்த முடிவு. 1968-ம் ஆண்டு ஜூலை 30-ந் திகதி பீஜீத் தீவைவிட்டுப் பிரயாணமானர் டெலிகா. டொரஸ் நீரிணையூடாக மேற்குமார்ககமாய்டெலிகா இந்துமகா சமுத்திரத்தில பிரவேசித்தார்.

இன்புளுயென்ஸா நோய் கண்டதால, சூ தீவில மட்டும் ஒருமுறை மிகக குறுகிய காலத்துககுத் தங்கி ஓய்வெடுத்துககொள்கிறார். அங்கிருந்து முத்துககுளிப்போர் மூலமாகத் தம்மைப் பற்றிச்சேதியனுப்பி வைககிறார்.

டெலிகாவைப்பற்றி மறு சேதி கிடைப்பதற்கு நாம் நீண்டகாலம் காத்திருகக வேண்டியிருந்தது. நவம்பர் 12-ந் திகதி நமககு மறு சேதி கிடைககின்றது. சோவியத் கப்பலொன்று அட்லாண்டிக மகாசமுத்திரத்தில தென்னுபிரிககாவின் நொலலொத் துறைமுகத்திலிருந்து மேற்கே 300 கடல மைலகளுககப்பால, டெலிகாவைச் சந்திககின்றது. இந்தத்தகவலைஜிடினியா வானொலிககு அனுப்பிவைககிறது,

### சோவியத் கப்பல்

மீண்டும் வாரக்கணக்காகக் காத்திருக்கின்றோம். மக்கள் கஸபலான்காவில் ஆவலோடு காத்திருக்கின்றனர். மகிழ்ச்சிகரமான செய்தி வருகின்றது. லியோனிட் டெலீகா உலகச் சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி விட்டார். இப்பொழுது அவர் கஸபலான்காவைச் சமீபித்துக்கொண்டிருக்கிறார். ஜனவரி 10ம் திகதி 1969-ம் ஆண்டு டாக்கார் துறையை வந்தடைகிறார் டெலீகா.

தன்னந்தனியனுய் அம்மனிதர் மகத்தான சாதனையை நிலைநாட்டி விட்டார். கடலையும் தனது சொந்தப் பலவீனங்களையும் வழியிலே ஏற்பட்ட எண்ணற்ற சோதனைகளையும் அவர் வெற்றி கொண்டு விட்டார்.

நம்மை மெய் சிலிர்க்க வைக்கும் சாதனையை நிலை நாட்டி நமது மதிப்புக்கும், மரியாதைக்கும் பாத்திரமாகிவிட்டார் லியோனிட் டெலீகா.

## உலக மேடை

# சபாஸ் இந்திரா!

**அ**ம்புலிப் பயணமும் இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் துணிச்சல் மிகுந்த செயலும்தான் இந்தவாரத்தில் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள முக்கிய நிகழ்ச்சிகள்.

சந்திரனில்மனிதன்காலடி எடுத்து வைத்து மனித வரலாற்றையே மாற்றியமைக்கும் இந்த மகத்தான சாதனையின்வெற்றிதோல்வி பற்றி இன்றே தெரிந்துவிடும்.

இந்தியஅரசியலில் நெருக்கடியை ஏற்படுத்தியது இந்திராவா, மொரார்ஜியா? என்றகேள்வியை உருவாக்கி இந்திய காங்கிரசின் எதிர்காலத்தையும் மத்திய அரசாங்கத்தின் எதிர்காலத்தையும் கேள்விக் குறிகளாக்கிவிட்டிருந்த நிலையும் இப்போது தெளிவாகியிருக்கிறது.

நிதிமந்திரி பதவியிலிருந்து இந்திராவால் திடீரென்று நீக்கப்பட்ட மொரார்ஜி தேசாய் துணைப்பிரதமர் பதவியை ராஜினமாச் செய்தார். அந்த ராஜினமா இப்போது ஏற்றுக்கொள்ளப் பட்டுவிட்டது. முக்கியவங்கிகளைத் தேசஉடமையாக்குவதுட்பட 16 அம்சங்களைக் கொண்ட இந்திராவின் பொருளாதார விருத்திக்கான குறிப்பை பங்களூரில் நடந்த காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் ஏற்றுக்கொண்டது. ஆனலும்இந்தத்திட்டத்தை மொரார்ஜியும் காங்கிரஸிலுள்ள வலதுசாரியினரும் எதிர்த்தனர். நீண்டகாலமாக காங்கிரசுக்குள்ளிருந்து வந்த இடதுசாரி வலது

### எஸ். எம். ஜி.

சாரிப்பிளவு பெரும்வெடிப்பாகக் கிளம்பியது. இதன் விளைவுதான் மொரார்ஜி-இந்திரா பலப்பரீட்சையாக மாறியது. பணமுடைகளின் கோரிக்கைகள், மிரட்டல்கள், காங்கிரஸ் தலைவரின் பயமுறுத்தல் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு 14 வங்கிகளைத் தேச உடமையாக்கி அவசரச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியிருக்கிறார் திருமதிஇந்திரா. இவரது துணிச்சல் மிகுந்த நடவடிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் கருணநிதி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சி. சுப்பிரமணியம், காமராஜர் உட்பட இந்திய அரசியல்கட்சிகள், மற்றும் தலைவர்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் வரவேற்றுப் பாராட்டியிருக்கின்றனர். சுதந்திராக் கட்சித்தலைவர் ராஜாஜியும் ஜனசங்கக் கட்சியினரும்தான் இதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர். திரு. மொரார்ஜி பக்கம் சார்ந்துவிட்டதாகக் கருதப்பட்ட உள்துறை அமைச்சர் சவானும் இதை வரவேற்றிருக்கிறார்.

காங்கிரசைப் பிழைக்க வைக்கும் நோக்கத்துடன் தான் இந்திராகாந்தி பிரதமராகத்தெரிவு செய்யப்பட்டார்.அவருக்குபோட்டியாக இருந்த மொரார்ஜி மந்திரி சபையில் இனி இல்லை.

இந்திராவின் நடவடிக்கைகளைப் பார்த்து அவர் சர்வாதிகாரியாகப் பார்க்கிறார் என்று சிலர் விமரிசனம் செய்தனர். எப்பொழுதும் இந்தியாமீது நல்ல கண்கொண்டு பார்க்காத பிரிட்டிஷ் பத்திரிகைகள் சில இந்தியாவில் ஜனநாயகத்துக்கு பேராபத்து என்று குரல் கொடுத்திருக்கின்றன.

இந்திராவுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லையா? ஜனதிபதி பதவிக்கு காங்கிரஸ் சார்பில் யாரை நிறுத்துவதென்பதில் கருத்து வேற்றுமை இருந்தது. பிரதமர் இந்திரா பிரேரித்த பெயருக்கு ஆதரவு கிடைக்கவில்லை. மொரார்ஜி ஆதரித்தவரே அபேட்சகராகத் தெரிவு செய்யப்பட்டார். ஆனலும் ஆட்சிக்குழு தீர்மானித்த அபேட்சகரைத் தாம் ஆதரிப்பதாக அறிவித்தார். தாம் விரும்பவில்லையானலும் பெரும்பான்மையினரின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டார். இது ஜனநாயகப் பண்பு அல்லவா?

திரு. சஞ்சீவரெட்டியை ஜனதிபதியாக்குவதற்குப் பிரதமர் முழுமனதுடன் ஆதரிக்கவில்லை. அவரை ஆதரித்த மொரார்ஜி மந்திரிசபையில் இல்லை. சஞ்சீவரெட்டி ஒரு கட்சியின் தீவிர ஆதரவாளர். திரு. கிரி சுயேச்சையாக ஜனதிபதி தேர்தலில் போட்டியிடுகிறார். இவரை இடதுசாரிக் கட்சிகளும் ஆதரிக்கின்றன. சர்ச்சைக்கிடமான மனிதர் சஞ்சீவரெட்டி. மகாராஷ்டிர-குஜராத் தகராறு காரணமாக அங்கிருந்து மொரார்ஜியை தம்முடன் சேர்த்துக்கொண்ட நேரு சஞ்சீவரெட்டி சஞ்சீவையா தகராறு காரணமாக சஞ்சீவரெட்டியையும் மத்திய அரசாங்கத்துக்குள் இழுத்து நிலைமையைச் சமாளித்தார்:

இப்போதுள்ள நிலையில் சஞ்சீவரெட்டி ஜனதிபதி போட்டியிலிருந்து தாமாகவே விலகிக்கொண்டு திரு. கிரியைப் போட்டியின்றித் தெரிவு செய்ய வழி காட்டுவாரானல் அவருக்கும் நல்லது, அவரின் புகழும் ஓங்கும். நாட்டின் கௌரவமும் காப்பாற்றப்படும்.

### போலந்து மக்கள்

(9-ம் பககத் தொடர்ச்சி)

கும் சொந்தமான உற்பத்தி சாதனங்களையும் சொத்துரிமைகொள்வதையும், தனிநபர் உடைமையையும் போலிஷ் மக்கள் குடியரசு அங்கீகரித்துப் பாதுகாக்கின்றது.

இன்று

### காந்தி நூற்றுண்டு விழா

அளவெட்டி, ஞாயிறு

மகாத்மாகாந்தி நூற்றுண்டுவிழா இன்று சுன்னுகம் பட்டின சபை நூல் நிலையத்தில் நடைபெறவிருக்கிறது.

திரு. எம். முத்துக்குமாரசுவாமி தலைமையில் நிகழும் இவ் விழாவில் ''மகாத்மாவின் போதனைகளும், சாதனைகளும்'' என்பது பற்றி பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சி. தில்லைநாதனும், ''மகாத்மாவின் ஹரிஜன சேவை'' பற்றி வித்துவான் சி.ஆறுமுகம்'' வள்ளுவரும் மகாத்மாவும் என்பது பற்றி காந்திசேவா சபைத்தலைவர் முதலியார். செ. சின்னத்தம்பியும் உரையாற்றுவார்கள்.

**WANTED**

Wanted a Theatre-Nurse and a General-Nurse preferablywith midwifery for Phillips Nursing Home-Apply, 77, Main Street, Jaffna. 1253

**பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் நவராத்திரி விழாவில் பங்குபற்றுதல்**

புட்டப்பர்த்தியில்- 12 நாட்கள் - இலங்கையிலிருந்து புறப்படல்- 8-10-69 இந்தியப்பிரயாணம்-பிரத்தியேக பஸ்மூலம்-ரூபா. 70/-மாத்திரமே. பாஸ்போட், செலாவணிப் பெர்மிட், விசா உடனடியாக எடுத்துக் கொடுக்கப்படும். விபரங்கட்கு: ட்ரேட் விங்க்ஸ் & வி. நாராயணதாஸ் 67 வான்ரோயன் வீதி (Vanrooyen st.) கொழும்பு-13, தொலைபேசி: 35145 1659

**கழிவு பத்திரிகை விற்பனை**

கழிவு பத்திரிகை விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புபவர்கள் தயவுசெய்து போயா தவிர்ந்த ஏனைய நாட்களில் காலையில் நேரில் வரவும். 'ஈழநாடு,' யாழ்ப்பாணம். 1664

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி[illegible] கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 21ம் திகதி [illegible] பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org